
Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
செப்.03- 09,1995
வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY 117

# வடபுலப் போர்க்களம்-




# புலிகள் விரிக்கும் வலை!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கொலையில் ஒரு திருப்பம்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## பூக்கள்-அல்ல-புழுக்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

முன்பொரு முறையும்
இங்கு சுட்டிக்காட்டப்பட்ட
விடயம்தான்.
அதுதான்-தொலைக்காட்சியில்
தொடரும் விவாதங்கள்!

தீர்வு யோசனைகளை-
ஆராய்வதாகக் கூறிக்கொண்டு
தமிழ் மக்களின் வரலாற்றை
இனவாதத்தால் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயிரம் பூக்கள் மலர்ந்தால்
சூழலுக்கும் நல்லது;
சுவாசிக்கவும் இனியது.

ஆயிரம் புழுக்கள் நெளிந்தால்
சுகாதாரத்திற்கும் கேடானது;
சூழலுக்கும் தீங்கானது.

தொலைக்காட்சி விவாதங்களில்
அனேகமான கருத்துக்கள்
பூக்களாக மலரவில்லை-
புழுக்களாகவே நெளிகின்றன.

கடந்த தேர்தல்களில்
திருவாளர் பொதுஜனத்தால்
ஒங்கி உதைத்துத் தள்ளப்பட்ட
இனவாதிகளையெல்லாம்
கைகொடுத்து தூக்கிவிட்டு
கருத்துச்சொல்ல வைக்கிறார்கள்.

வாயைத் திறந்தாலே போதும்
இனவாத 'நெடி' குப்பென்று வீசுகிறது-
கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில்.

நாற்றத்தை விநியோகிக்க
இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்தது-
ஒதுக்கப்பட்ட இனவாதிகளுக்கு
அதிஷ்டலாபச் சீட்டு விழுந்தது மாதிரித்தான்!

பொதுக்கூட்டம் நடத்தினால்கூட
அவர்கள் பேச்சைக் கேட்க வருவோரை
விரல் விட்டு எண்ணிவிடலாம்.
அப்படியானவர்களுக்கு
வெகுஜனத்தொடர்பு சாதனத்தை
திறந்துவிட்டிருக்கிறார்கள்.
ஆக, ஒதுக்கப்படவேண்டிய
கருத்துக்களுக்கு-
ஒரு மேடை தரப்பட்டிருக்கிறது.

ஜனநாயகம் என்ற பெயரில்,
எப்போதோ புதைக்கப்பட்டு
உழுத்துப்போன வாதங்களையெல்லாம்
கருத்துச் சுதந்திரம் என்று
வர்ணக் கலவை பூசுவதால்
யாருக்கு லாபம்?

மருத்துவ ஆராய்ச்சி என்று
செத்த எலிகளைக் கொண்டுவந்து
தெருவில் வைத்து ஆராய்ந்தால்
'பிளேக்' நோய் தானே பரவும்....?

இறந்துபோன இனவாதத்துக்கு
வெகுஜனத் தொடர்பு சாதனம்
காவிச் செல்லும் வாகனமானால்,
இன விரோதங்கள்தானே பரவும்....?

விவாதங்கள் தொடரும்போது,
தொடர்ந்து விவாதிக்க-
ஆள் பற்றாக்குறை ஏற்படும்.
'பூமி புத்திரா' போன்ற குழுக்களின்
தலைவர்களை அழைத்துவந்து
கருத்துச்சொல்ல வைக்க நேரும்.
அதுதான் நடந்துகொண்டிருக்கிறது.
வரம்பு மீறிக்கொண்டுமிருக்கிறார்கள்!

வடக்கு-கிழக்கிலும்-
தினம் தோறும் எத்தனை அத்துமீறல்கள்?
விபரங்கள் திரட்டிச்சொல்லலாம்;
துயரங்களை-
சிங்கள மக்களும் அறியமுடியும்.
அந்த விடயங்களில் மட்டும்
கருத்துச் சுதந்திரம்
காணாமல் போய் விடுகிறது.

உழுத்துப்போன வாதங்களை விட
உருவாகியுள்ள சூழலின் கொடுமையை
அனைத்து மக்களும் அறியவைத்தால்
பிரச்சனைகளை அறிய ஏதுவாகும்;
தமிழ் பேசும் மக்கள்
தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம்
தேடுவது ஏன் என்று புரியும்!

அதனை விடுத்து, விதண்டாவாதங்களுக்கு
இடம்கொடுப்பது-
தீர்வுக்கு உதவாது;
தீராத பிரச்சனைக்கே வழிகோலும்!

□□

விரைவில் முரசில்-
'இராமாயணம்' தொடராக வரப்போகிறது.
வெளியிட்ட அறிவித்தலுக்கே
உங்களிடமிருந்து அமோக வரவேற்பு!
தருவது-இராஜகுமாரன் என்பதால்
உங்கள் எதிர்பார்ப்புக்கு
ஏற்ப நிச்சயம் சிறப்பாய் இருக்கும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## ஆன்மீகம்

### "உன்னில் அன்பு கூருவது போல..."

ஒரு நாள் ஒரு நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவை சோதிக்கும் பொருட்டு ஒரு கேள்வி கேட்டான். "போதகரே நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிரதானமானது"?

இது இன்றும் எம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய முக்கிய கேள்வியே! நாம் அந்தக் கேள்விக்குரிய இயேசுவின் பதிலைப் பார்ப்போமானால் முழு விசுவாச மார்க்கமும், தேவனின் எதிர்பார்ப்பும் இதில் அடங்குவதைக் காணலாம். முதலாவது உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக! இரண்டாம் கற்பனை உன்னிடத்தில் நீ அன்பு கூருவதைப்போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே!



இதை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கக் கூடுமானால் இன்று முழு உலகமும், ஏன் நம் நாடும் கூட எதிர் நோக்கும் பயங்கர யுத்த போராட்டங்கள், இரத்த வெள்ளங்கள், மரண பீதிகள், கொலை வெறிகள், பொறாமைகள், வஞ்சகங்கள், அன்பில்லாமை யாவும் நீடிக்குமா? இதை எம் தனிப்பட்ட ஜீவியங்களில் ஆரம்பிக்க பெலன் கேட்டு ஜெபிப்போமாக!

"நீ உன்னில் அன்பு கூருவது போல" என்ற வசனத்தை ஆழமாகச் சிந்தித்து செயற்படுவாயாக!

போதகர்: வி.ஈ.வி.ஜோசப்-தெனியாய

### நபிகள் நாயகத்தின் நன்மொழிகள்

1. உங்கள் உயிர் போவதாயினும்சரி, உடல் எரிந்து சாம்பலானாலும் சரியே, இறைவனுக்கு எதையுமே இணை வைக்காதீர்கள்.

2. பஞ்சம் வரும் காலத்தில் அதிகவிலைக்கு விற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அதிக விலைக்கு ஆசைப்பட்டு தானியங்களை பதுக்கி வைக்கும் வஞ்செயல் பெரும்பாவம் மட்டுமல்ல, தடுக்கப்பட்ட செயலுமாகும்.

3. உலகில் அளவுகடந்து உண்டு கொழுத்திருப்போன்தான் மறுமை நாளில் பசியால் மிகுந்தவனாயிருப்பான். பெருந்தீனி என்று பெருத்திருப்போன் இறுதி நாளில் சிறு கொசுவின் சிறகுக்குக்கூட ஈடாக மாட்டான்.

4. கணவன் விருப்பத்திற்கு மாறாக வீட்டைவிட்டு வெளியிற் செல்லும் மனைவியை வானுலகிலுள்ள மலக்குகள் அனைவரும் சபிக்கின்றனர். மேலும் அவள் செல்லும் வழியில் மனிதர்கள், ஜின்னுக்கள் தவிர மற்றைய யாவும் அவளைச் சபிக்கின்றன.

5. எவனொருவன் சோதிடனிடம் சென்று ஓர் விடயத்தைப் பற்றிக் கேட்பானோ அவனுடைய வணக்கம் நாற்பது நாட்கள்வரை அங்கீகரிக்கப்பட மாட்டாது.

6. உங்களில் யாராயினும் மார்க்கப்புறம்பான காரியங்கள் நடக்கக் கண்டால் அதைக் கரங்களால் தடுக்கவும், இல்லாவிட்டால் நாவினால் தடுக்கவும். அதற்கும் இயலாவிட்டால் மனதினாலாவது அது தீது எனக்கருதவும்.

7. இறைவன் அளித்துள்ள அனுமதிக்கத்தக்க சகல உரிமைகளுள் விவாக விடுதலையெனும் உரிமை அவன்பால் மிகவும் வெறுப்பானதாகும்.

இர்பானா நியால்-மக்கொன

## கவிதைப்போட்டி இல — 114

### பரிசுக்குரிய கவிதை



#### ரோஜா மொட்டு

கண் மொட்டு ரோஜாவாய் கவிதை வீச,
கை தொட்ட தூரிகையோ கதைகள் பேச,
விண் விட்டு மண் வந்த நிலவுக் குஞ்சே!
வெண் பற்கள் தனைக் காட்டி சிரிப்பதென்ன....?

கோ.கணேஸ்-வாரிக்குட்டியூர்-வவுனியா

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### ஒரு தூரிகை யார்கையில்?

முழுமதியாய் முகம் ஜொலிக்கும் கிள்ளையிவள் பல்வரிசை
கறையகற்றி மிளிர்வதற்கு கையிலொரு தூரிகை-
வெள்ளைப்புறா பறந்தாலும், வெண்தாமரை சுமந்தாலும்
உள்ளே இருளகற்றுதற்கு, ஒரு தூரிகை யார்கையில்..?

வாழையூர்- வைரமுத்து

#### என்ன பயன்?

பல்துலக்கி
என்ன பயன்
பசியாற
உணவுக்கப்பல்
வரவேண்டாமோ?

ஆர்.பாலகிருஷ்ணன்-மாத்தளை.

#### விளக்கு!!

விடியலைத் தேடிய
குழந்தையின் கையில்
ஒரு தூரிகை!
அரசியல் தீர்வைத் தேடிய
நமது கையில் ஒரு யோசனை!
இரண்டுமே விளக்குபவை!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

பல் துலக்கும் வேளையிலே
நீ சிரித்தாய்; செல் அடித்துச்
சிதறுகையில் நான் அழுதேன்!

டி.ரூபசாந்தி-கிரான்

#### சின்னமலர்!

வெட்டி விட்ட
வெள்ளரியாய்
சின்ன மலர்
சிரிக்கையிலே
உள்ளத்தின்
உஷ்ணமெல்லாம்
பனி மழையில்
நனைத்தெடுத்த
பழம் போலக்
குறையுதம்மா!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர் 02

#### கவலை மறந்தோம்.

கள்ளமில்லா
நின் சிரிப்பில்
உன்
வெள்ளையுள்ளம்
தெரியுதடி.
கலக்கமுற்ற
மனங்களெல்லாம்
உன்னால்
முழக்கமிட்டு
சிரிக்குதடி.

சுப்ரமணியம் வாணீஸ்வரி-அப்பர் கலஹா

#### தேசம் காக்க

ஆயிரம் மயிர்கள் கொண்டு
ஆக்கிய தூரிகை போல் - நாம்
நேயமாய் ஒன்றாய்ச் சேர்ந்து
தேசத்தைக் காப்போம் வாரீர்.

ச.மகாலிங்கம்-வெளிமடை

#### பல் வ(ழி)லி

பல்லைத் தினம் துலக்கி
வெள்ளை நிறமாக்கும்
முல்லை உனக்கு - இனி
இல்லை பல்லுவலி!

எஸ்.யூ.எம்.இம்தியாஸ்-சாய்ந்தமருது-01

#### 'வி(ள)லக்கு!'

'வாய்மைக்குத் துர்நாற்ற
வார்த்தை 'விலக்கு! வாய்' (த்)
தூய்மைக்குப் பல்லைத்
துலக்கு!'

பானு ரமீஸ்-தெஹிவளை

#### பூரிப்பு

"மென்மைத் தூரிகையின் துரித
விற்பனைக்கோ; - இந்த
சின்னக் காரிகையின்
வண்ணப் பூரிப்பு!"

ஸ்ரீபதி ரவீந்திரநாத்-அக்கரைப்பற்று-07

பல்விழுந்து பாழ்படலாம் - நித்தம்
தூரிகைகள் அவசியந்தான்
ஷெல் விழுந்து வாழ்வுகெடும் யுத்தப்
பேரிகைகள் அவசியமா?

தமிழினி இராசரத்தினம்-மட்டக்களப்பு

#### ஷெல்லுக்கு நன்றி

பல்துலக்கு, முகம் கழுவு,
பாடசாலைக்கோடு என்றே
தொல்லை தரும் அம்மாவின்
தொண தொணப்பு இன்றில்லை!
ஷெல் விழுந்து பாடசாலை
செதில் செதிலாய் சிதறியதாம்
மெல்லென எழுந்து மிகு
மெத்தனமாய் விளக்குகிறேன்,

சோ.அருளானந்தன்-மட்/கல்லடி.

## கவிதைப் போட்டி இல-117



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.09.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 117
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

தீர்வு யோசனைகள் தொடர்பாக தெளிவான கண்ணோட்டம் 'முரசின்' அரசியல் விமர்சனங்களுக்கு மகுடமிட்டுவிட்டது. அதைவிட முக்கியமாக, 'வரப்போவது யோசனைதான், தீர்வல்ல' என்று முன் கூட்டியே வெளியிட்ட செய்திக்கும் ஒரு சபாஷ்

ஏ.காந்தரூபன்-மட்டக்களப்பு.

தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் தடம்புரண்டு விட்டது. தடம் மாறுவதே முன்னாள் தலைவர்களது கதையாச்சு.

மு.பரம்சோதி-கொழும்பு 7

இப்போதே இப்படியென்றால்-வடக்கிலும்-கிழக்கிலும் அவர்களும் இல்லையென்றால் மூத்த தலைவர்கள் என்ன குதி குதித்திருப்பார்களோ?

பா.தேவராணி-திருகோணமலை.

'கொச்சிக்காப் போடியாரின்' கடிதம் கனகச்சிதம்.

எல்.ரங்கநாதன்-துறைநிலாவணை.

தேனகத்தில் மக்கள் திண்டாட்டம். தெரிவானபிரதிநிதியோ திருமணக் கொண்டாட்டம். வெளிநாட்டில் சுகவாசம். அய்யாத்துரையாரே கையைக் கொடுமய்யா. நம் மக்கள் எப்போது கண்திறப்பார்களோ?

ஆர்.பவானி-செங்கலடி.

நீ தாங்கி வந்த அம்சங்கள் அனைத்தும் நிறைவாகியிருந்தன. குறிப்பாக ரசிகனின் 'ஜிகாத்' சிறப்பாயிருந்தது.

'பொண்ணுக்கென்ன அழகு' புகைப்படம் மேனியை புல்லரிக்க வைத்துவிட்டது.

ஒஸ்லி கபூர்-அநுராதபுரம்.

கிடைத்தற்கரிய கண்கவர் போட்டோக்களையும் மற்றும் தகவல்களையும் சேகரிப்பதை பொழுது போக்காகக் கொண்டுள்ளேன். எனது இத்தாகத்தை நூற்றுக்கு எண்பது வீதம் தீர்க்கும் முரசே உனக்கு நன்றியைத் தெரிவிக்க சொற்பஞ்சம் எனக்கு.

ஏ.முனா.ஃ.ப்- கொட்டராமுல்லை

முரசே! உன் அனைத்து அம்சங்களும் பளிச் பளிச் என மின்னுகின்றன. ராஜேஸ் குமாரின். 'ஒரு நிமிச நிசப்பதம்' வர வர திகைப்பில் திளைக்க வைக்கிறது! 'சினிவிசிட்' குளியல் ஜோரான படங்களுடன் ஜிலு ஜிலுப்பூட்டியே விட்டது! சபாஷ்!

கிண்ணியா எம்.ஸன்பர்

### இனிமையான இன்பம்

அரசியலை அச்சொட்டாக அறியத் தரும் முரசின் சுறுசுறுப்பை பாராட்டத்தான் வேண்டும். இராஜகுமாரனின் இலக்கண இலக்கியத்தில் இராமாயணமா? இனிமையான இன்பமே!

எஸ்.பத்மா,உமாஜினி,நவ்சாத்-கொழும்பு 10

இராமாயணத் தொடர் ஆரம்பமாக இருப்பதை அறிந்து ஆனந்தம் அடைந்தோம். புதுப்புது ஆக்கங்கள் தந்து புதுப்பொலிவுடன் திகழ வாழ்த்துக்கள்.

பி.என்.எஸ்.பிரதாப்-இங்கிரிய

மக்சீம் கார்க்கி வழங்கும் 'தாய்' தரமான தொடர் நாவல், விறுவிறுப்பாக செல்கிறது. 'தேன் கிண்ணம்' பகுதியில் இடம்பெறும் கவிதைகள் அனைத்தும் அருமை.

மங்களா வாமதேவன்,
தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.



தொடர் நாவல் 'தாய்' அணைத்து உச்சிமுகரும் ஃபீலிங். ராஜேஸ்குமாரின் 'ஒரு நிமிச நிசப்தம்' தூள் பறக்கிறது.

மொஹம்மட் அஸ்மீர்-
குறிஞ்சாக்கேணி 03

நினைவில்....
ஜிகாத்-ஜிகாத்-அபு ஜிகாத் நெஞ்சைத் தொட்டது. நினைவில் நிறைந்து விட்டது.

ஆர். உசேன் முகமட், கண்டி.

அபு ஜிகாத்-வரலாறு போன்ற உண்மைத் தொடர்களை தொடர்ந்து வெளியிட்டால் இளைய தலைமுறைக்கு தெரியாத பல தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

பெ. ராஜகோபால், சுவிஸ்.

அனைத்து அம்சங்களும் அட்டகாசம் 'லேடீஸ் ஸ்பெஷல்' என் போன்ற இல்லத்தரசிகளுக்கு பயனை தருகிறது.

திருமதி. பிலோமினா பீட்டர், நிவித்திகல.

முரசு எனப்படுவது யாதெனின்-யாதொன்றும் (B)வோர் இன்றி வரல்-

ரிகானா. எம்.எஸ், பெரிய கிண்ணியா.

'சினிவிசிட்' வர,வர ரொம்ப அசத்தலுங்க.

எஸ். மனோகரி, மாத்தளை.

# உறுப்புக்களை திருடி வெளிநாட்டில் விற்பனை?

# கொலைக் குழு குறித்து திடுக்கிடும் தகவல்கள்

## ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்கச் சதி

(அலுவலக நிருபர்)

**கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வாவிகளில் மிதந்த பிணங்களுக்கு யார் காரணம் என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. கொலையாளிகளைக் கண்டறிய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேற்கொண்ட நடவடிக்கைகளை மனித உரிமை அமைப்புக்களும், தமிழ் கட்சிகளும் வரவேற்றுள்ளன. இதேவேளை இக்கொலைச் சூத்திரதாரிகளின் நோக்கங்கள் குறித்து பல்வேறு ஊகங்களும் சந்தேகங்களும் வெளியாகியுள்ளன.**

### கப்டன் முனாஸ்?

கொழும்பிலும் அதன் புற நகர்களிலும் வாவிகளில் பிணங்களை வீசிய கொலைக் கும்பலின் சூத்திரதாரிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் முக்கியமானவர் கப்டன் முனாஸ் என்று அழைக்கப்பட்டவராவார். இவர் ஒரு முஸ்லிம் அல்ல என்றும் கூறப்படுகிறது.

இராணுவ உளவுப் பிரிவில் இவர் பணியாற்றினார். முனாஸ் என்பது புனை பெயராகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் இராணுவத்திற்குள் தனது கப்டன் தரத்துக்கும் மேற்பட்ட அதிகாரங்கள் கொண்டவராக இவர் இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

கொழும்பில் இவருக்கென்று தனியான ஒரு அலுவலகம் இருந்தது. வாகனங்களும் இவரது பொறுப்பில் இருந்தன.

இவரது வாகனங்களுக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கத் தகடுகள் தயாராக வைக்கப்பட்டிருக்கும். இவ்வருட ஆரம்பத்தில் கப்டன் முனாஸ் பயணம் செய்த வாகனம் ஒன்று கொழும்பு நகரில் இராணுவ வீதிச் சோதனை அரணில் மறிக்கப்பட்டது. அப்போது இலக்கத்தகடுகள் பல அந்த வாகனத்திற்குள் இருந்தனவாம். தனது வாகனத்தை நிறுத்திய இராணுவ வீரர்களை எச்சரித்துவிட்டு கப்டன் முனாஸ் தனது வாகனத்தில் சென்று விட்டார்.

### மட்டக்களப்பிலும்....

மட்டக்களப்பில் தமிழ் இயக்கங்களிலிருந்து விலகிய இளைஞர்களைப் பயன்படுத்தி தனது நடவடிக்கைகளை இவர் மேற் கொண்டு வந்தார். 'புளொட் மோகன்' என்று அழைக்கப்படும் இளைஞர் தலைமையில் இயங்கிய கோஷ்டி இவரது உதவியோடுதான் செயற்பட்டு வந்தது. தற்போது மோகன் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. மோகன் என்பவர் புளொட் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மோகன் கைதுசெய்யப்பட்டால் மட்டக்களப்பில் கப்டன் முனாஸ் குழுவினர் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் அம்பலமாகும் என்று நம்பப்படுகிறது.

கொழும்பிலும், புறநகர்களிலும் தமிழ் இளைஞர்-யுவதிகளை கைதுசெய்வதற்கு தமிழ் இயக்கங்களிலிருந்து விலகிய சில இளைஞர்களது உதவியும் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை, திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலைகளின் உண்மையான நோக்கம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

### அரசியல் பின்னணி

பொதுஜன முன்னணி அரசாங்கம் மீது வெளியுலகில் கெட்ட பெயரை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கொலைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலமானது 'கொலையுகம்' என்று பொதுஜன முன்னணி கூறி வருகிறது. மனித உரிமைகள் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா அக்கறை காட்டி வருவதாக வெளிநாடுகள் பாராட்டி உள்ளன. அதனால் அரசுக்கான உதவிகளும் பெருமளவில் கிடைத்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்தி ஆட்டங்காணச் செய்யவே, வாவிகளில் பிணங்கள் மிதக்க விடப்பட்டதாக ஊகம்தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தின் அருகிலுள்ள வாவியில் பிணங்கள் மிதந்தமையானது அந்த ஊகத்துக்கு வலுவூட்டுகிறது.

அந்த ஊகம் சரியானால் கொலையாளிகளின் பின்னால் எதிரணி அரசியல்வாதிகள் சிலர் இருக்க வேண்டும் என்று நம்ப இடம் இருக்கிறது.

### திடுக்கிடும் ஊகங்கள்

இதேவேளை, கொலைகளின் பின்னால் உள்ள இன்னொரு நோக்கம் குறித்தும் திடுக்கிடும் தகவல்கள் சில அடிபடுகின்றன.

கொலையான பலரின் கண்கள், சிறுநீரகங்கள் என்பவை காணாமல் போயுள்ளனவாம்.

உறுப்பு மாற்றுச்சிகிச்சைக்காக வெளிநாடுகளில் கண்கள், சிறுநீரகங்கள் என்பவை பெரும் தொகை செலுத்தி வாங்கப்படுகின்றன.

கைதுசெய்த இளைஞர்களின் உறுப்புக்களை எடுத்துவிட்டே, அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம். உறுப்புக்கள் களவாடப்பட்டது தெரியாமல் இருப்பதற்காக உடல்கள் கோரமாகச் சிதைக்கப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த ஆட்சிக்காலத்தில்-1990ம் ஆண்டில் மட்டக்களப்பில் வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்த அகதிகளில் 185 பேர் விசாரணைக்காக இராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்டனர்.

சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்ட 185 பேரில் ஒருவர் மட்டுமே தப்பிவந்தார். ஏனையோர் கொல்லப்பட்டனர். ஆண், பெண், குழந்தைகள் என்ற பேதமின்றி கொலைகள் நடத்தப்பட்டன.

கொலையானவர்களது உடல்கள் யாருக்கும் தெரியாமல் அழிக்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்களின் உறுப்புக்கள் எடுக்கப்பட்ட பின்னரே அவர்கள் கொலைசெய்யப்பட்டிருக்கலாம். அதனால்தான் உடல்களை அழித்துவிட்டார்கள் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

### கண்தானம்

கடந்த கால அரசாங்கத்தால் நூற்றுக் கணக்கான கண்கள் ஜப்பானுக்கு தானம் செய்யப்பட்டதால் அந்த சந்தேகம் மேலும் அதிகரித்தது. ஜப்பானுக்கு வழங்கப்பட்ட கண்கள் சத்துருக்கொண்டான் முகாமிலிருந்து பெறப்பட்டவை என்று கதை பரவியிருந்தது.

தற்போது நடைபெறும் விசாரணைகளில் அதனையும் ஆராய்ந்தால் உண்மையான தகவல் எதுவென்று மக்கள் அறியக் கூடியதாக இருக்கும்.

சத்துருக்கொண்டான் கொலைகளின் பின்னரே கப்டன் முனாஸின் பெயர் பயங்கரமாக அடிபட்டது. அவரது மேற்பார்வையில்தான் கொலைகள் நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தவிர அப்பாவிகளை கைது செய்துவிட்டு, அவர்களை விடுவிக்க இலட்சக் கணக்கான பணமும் பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது. பணம் சம்பாதிக்கும் நோக்கமே கொலைக்குழுவின் பிரதான குறியென்றும், அவர்களை தமது திட்டங்களுக்காக அரசியல்வாதிகள் யாராவது பயன்படுத்தியிருக்கலாம் என்றும் ஊகங்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விஷேச விசாரணைக்குழு துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

---

# இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தத் திட்டம்!

## நிதி உதவி செய்யுமாறு புலிகள் கோரிக்கை

படையினரின் 'ட்ரக்கன் ஃபயர்' நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த வலிகாமம் மேற்கு மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமரலாம் என்று புலிகள் அறிவித்துள்ளனர். புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல்கள் ஏற்படும்போது, இடம்பெயரும் மக்கள், தாம் முன்னர் இடம்பெயர்ந்த வேளையில் தங்கியிருந்த முகாம்களுக்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்று புலிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை அளவெட்டி, மாகியம்பிட்டி, கந்தரோடை, மல்லாகம் போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த ஆயிரம் குடும்பங்களை தென்மராட்சியில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆயிரம் வீடுகளை அமைத்து அவர்களை குடியமர்த்த நிதியம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்துக்கு உதவுமாறு புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தென்மராட்சியில் உள்ள வரணி, மந்துவில், மீசாலை பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இடம்பெயர்ந்த ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரம் பேர் வரை தங்கியுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் 350 குடும்பங்களைச் சேர்ந்த 1500 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 'ட்ரக்கன் ஃபயர்' நடவடிக்கையை அடுத்து 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்தனர். 10 முகாம்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர். தற்போது அவர்களில் ஒரு பகுதியினர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.

---

# முற்றுகை நிலையில் முகாம்கள் மூடப்படும் பகுதிகள்!

## மறைமுகமான பொருளாதாரத் தடையால் உணவுப் பஞ்சம்

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் மேலும் பல இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாக திருமலை மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இருந்த அனைத்து இராணுவ முகாம்களும் மூடப்பட்டுவிட்டன. மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சம்பூர், கட்டைபறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்கள் மூடப்பட்டு விட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உப்பாறு, கற்குழி, மாகாமம் ஆகிய பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்கள் மூடப்பட்டுவிட்டன.

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சலப்பையாறு, திரியாய், புடவைக்கட்டு, கும்புறுப்பிட்டி, கல்லராவ போன்ற பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்களும் மூடப்பட்டு விட்டன.

"யாழ் குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டு திரும்பிவந்து திருமலையில் உள்ள புலிகளை பார்த்துக்கொள்வோம்" என்று மூடப்பட்ட முகாம்களில் ஒன்றைச் சேர்ந்த அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவ முகாம் மூடப்பட்ட பகுதிகளில் சுற்றிவளைப்பு தேடுதல்கள், ஷெல் வீச்சுக்கள், விமானக் குண்டு வீச்சுக்கள் என்பவை இடம்பெறுவதால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் அச்சத்தோடு இருக்கின்றனர்.

புடவைக்கட்டு, குச்சவெளி ஆகிய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

இறக்கக்கண்டி, நிலாவெளி, கிண்ணியா போன்ற பகுதிகளுக்கு அவர்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

திரியாய் பகுதியில் வாழ்ந்த தமிழ் குடும்பங்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

இராணுவ முகாம் மூடப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கக் கடைகளும் செயற்பாடுகளை நிறுத்திவிட்டன. இப்பிரதேசங்களில் உத்தியோகப்பற்றற்ற பொருளாதாரத் தடை நிலவுகிறது. இதனால் இராணுவ முகாம் மூடப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளனர். வைத்திய வசதிகளும் மோசமடைந்துள்ளன.

இதேவேளை ஆத்திமேடு பகுதியில் இருந்த பொலிஸ்காவலரண் தாக்கப்பட்டதை அடுத்து திருமலை நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை படையினர் மேலும் அதிகரித்துள்ளனர். மக்கள் மத்தியில் பீதி நிலவிவருகிறது.

---

# நடத்தை தவறிய நடத்துநர்

## பெண் பயணிக்கு உதை!

(மட்டக்களப்பு நிருபர்)

பெண் பிரயாணி ஒருவரை நடத்துநர் காலால் உதைத்து தாக்கியதாக மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: "கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலடியில் இருந்து புன்னைச்சோலைக்கு செல்லும் பஸ்சில் மட்டக்களப்பு மாநகர சபை சிற்றூழியரான சி.சிவமணி (வயது 51) ஏறினார்.

புன்னைச்சோலைக்கு 'டிக்கட்' தருமாறு கேட்டார். புன்னைச்சோலைக்கு பஸ்பழுது காரணமாக செல்ல முடியாது. மட்டக்களப்பு நகர் வரையே செல்ல முடியும் என நடத்துநர் கூறினார். அப்படியானால் அரசடி சந்திக்கு 'டிக்கட்' தருமாறு பெண்மணி கேட்டபோது ஏற்கனவே எழுதிவைத்திருந்த நகரிற்குரிய 'டிக்கட்'டை கொடுத்து பணத்தைத் தருமாறு கேட்கப்பட்டது.

"கூடுதல் கட்டணம் தரமுடியாது. அரசடிச்சந்திக்குரிய கட்டணத்தையே தருவேன்" என்றாராம் பெண்மணி.

கோபமுற்ற நடத்துநர் "என்னை யார் என்று தெரியுமா? கீழே இறங்கு" எனக் கர்ஜித்தாராம். பெண் பிரயாணி இறங்க மறுத்தபோது நடத்துநர் கீழ் இறங்கி, இறங்காதவரை பஸ் செல்லாது என்று அடம் பிடித்தார்.

சில நிமிட நேரத்தின் பின்னர் ஏனைய பிரயாணிகள் வசை பாடத்தொடங்கியதும் நடத்துநர் பஸ்சில் ஏறி 51 வயது நிறைந்த பெண்ணை காலால் உதைத்து தாக்கினாராம்.

இது குறித்து பெண்மணி மட்டக்களப்பு பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான திரு.அ.இராசமாணிக்கம் எம்.பி. மட்டக்களப்பு மக்கள்மயப்படுத்திய 'டிப்போ' நிர்வாக முகாமையாளரிடம் இச்சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

---

# பாதுகாப்பு ஏற்பாடுகளால் பயணிகள் அவதி!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு கச்சேரிக்கு செல்லும் வாடிவீட்டு வீதி, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை வீதி என்பன மூடப்பட்டிருப்பதால் பொதுமக்களும், ஊழியர்களும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

தற்போது பொதுநூலகத்திற்கு முன்னால் செல்லும் நீதிமன்ற வீதியின் ஊடாக மட்டுமே உயரதிகாரிகள் மற்றும் பொது மக்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள்.

நீதிமன்ற வீதியில் 10 மீற்றருக்கு ஒரு வீதித்தடைகள் போடப்பட்டுள்ளன. நீதிமன்றம் நடைபெறும் நேரங்களில் வாகனங்களிலிருந்து இறங்கி உருட்டிச் செல்லுமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

கச்சேரிக்கு அருகில் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள் உள்ளன. இதனாலேயே பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நீதிமன்றத்தின் முன் உள்ள சோதனைச் சாவடியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை வறுமை நிவாரண உதவி ஆணையாளர் திரு.கே. பத்மநாதன் இராணுவத்தினரால் தாக்கப்பட்டிருக்கிறார்.

---

# தீர்வுக்குத் தடை! பிளவுக்குத் திட்டம்!

"அம்பாறை மாவட்டத்தின் 4ம் கொலனிக் கிராமத்தில் ஊர்காவற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள தமிழ் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், இருவர் கொலை செய்யப்பட்டமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது." இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான திரு.ரவூப் ஹக்கீம் அவர்கள் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"துருவப்படுத்தப்பட்டு வந்த தமிழ்-முஸ்லிம் உறவினை மீண்டும் கவனமாகக் கட்டியெழுப்ப எடுத்துவரும் முயற்சிகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாக இதை நாம் காண்கிறோம். எட்டிய தூரத்தில் இருக்கும் இனப்பிரச்சனைத் தீர்வை மேலும் தூரப்படுத்த முயலுகின்ற பேரினவாதச் சக்திகளுக்குத் துணைபோகும் செயலாகவும் இத்தகைய அடாவடித்தனங்கள் அமைகின்றன, என்பதைச் சகல தரப்பினரும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# வடக்கு-கிழக்குக்கு வெளியேயும் சீதனம் வாங்கத் தடை

## மீறினால் அபராதம்! சீதனம் பறிமுதல்!! 5 வருட சிறை!!!

ஒரு வருட காலத்திற்கு முன்னர் புலிகள் அமைப்பின் பெண்கள் அமைப்பினால் சீதனத் தடைச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது பற்றிய அறிவித்தல் எதுவும் வெளியாகவில்லை. இது தொடர்பாக கடந்த வார முரசில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமையன்று (26.8.95) சீதனத் தடைச்சட்டம் குறித்து புலிகள் அறிவித்துள்ளனர்.

செப்டம்பர் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் சீதனத்தடைச் சட்டம் (மணக்கொடை தடைச்சட்டம்) வடக்கு-கிழக்கில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமன்றி, வெளிநாடுகளில் உள்ள வடக்கு-கிழக்கு பகுதி மக்களையும் கட்டுப்படுத்தும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

**புலிகளது மணக்கொடைத் தடைச் சட்டம் 45 பிரிவுகளையுடைய 5 இயல்களைக் கொண்டுள்ளது.**

**முதலாவது இயலின்படி சொத்துக்களை எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி, தமிழீழ நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமே கைமாற்ற முடியும். (நன்கொடையாக மட்டுமே)**

**மணக்கொடை வாங்குவதும், கொடுப்பதும் குற்றம். கொடுத்தவருக்கு கொடுத்த மணக்கொடையின் 1/4 பகுதி பெறுமதியும், வாங்கியவருக்கு வாங்கிய மணக்கொடையின் 1/2 பங்கு பெறுமதியும் தண்டமாக அறவிடப்படும். அத்தோடு கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட மணக்கொடை முழுவதும் பறிமுதலாகும்.**

**திருமணம் தமிழீழத்துக்குள்ளும், மணக்கொடை பரிமாற்றம் தமிழீழத்துக்கு வெளியேயும் நடைபெற்றாலும் இச்சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படும்.**

**தமிழீழத்தில் உள்ள ஒருவரும், வெளியே உள்ள ஒருவரும் சம்பந்தப்படும் திருமணத்திலும் மணக்கொடை பரிமாற்றம் நடைபெறுவதை தடுக்கும் ஏற்பாடுகளும் சட்டத்தில் உள்ளன. வேறு பெயர்களில் மணக்கொடை பெறப்பட்டாலும் அதுவும் தண்டனைக்குள்ளாகும்.**

**திருமணத்தின் பின் மணக்கொடை கேட்பவர்களுக்கு 5 வருடத்திற்கு குறையாத சிறைத்தண்டனை வழங்கப்படும். அபராதமும் விதிக்கப்படும். தமிழீழத்தை வசிப்பிடமாகக் கொண்ட எவரும் மணக்கொடை வழங்குவதை இச்சட்டம் தடை செய்கிறது. நொத்தாரிசுகள் மணக்கொடை உறுதி எழுதுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும். திருமணத் தரகுத் தொழில் சட்டப்படி தடை செய்யப்படுவதோடு, அத்தொழிலில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர்.**

**ஆணும் பெண்ணும் தமக்குரிய சொத்துக்களை தம் விருப்பப்படி சுதந்திரமாக கையாள இச்சட்டம் அனுமதியளிக்கிறது.**

இவ்வாறு புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமே சீதனத் தடைச்சட்டம் அமுலாகும் என்று வெளிவந்த செய்திகளை புலிகள் மறுத்துள்ளனர். தமிழீழத்தைச் சேர்ந்த எவருக்கும், அவர் எங்கிருந்தாலும் தமது சட்டம் பொருந்தும் என்று அறிவித்துள்ளனர்.

# முன்னாள் தலைவர் தப்பி ஓட்டம்

## முரசு அம்பலப்படுத்திய ஊழல் ஊர்ஜிதம்!

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்த க.நடராசாவின் ஊழல் தொடர்பாக 'முரசு' முன்பு செய்திகள் வெளியிட்டதை வாசகர்கள் அறிவார்கள்.

க.நடராசாவை மீண்டும் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவராக நியமிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதிவரை சென்று வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆயினும், அவரை மீண்டும் தலைவராக நியமிக்க அரசாங்கம் மறுத்துவிட்டது.

கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரத்தின் தீவிர விசுவாசியான க.நடராசா தன்மீதுள்ள ஊழல் விசாரணையை தடுத்து நிறுத்துவதற்கு அரசியல் செல்வாக்கை பயன்படுத்த நினைத்து தோல்வி கண்டார். அதனால் தற்போது நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளார். பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தற்போதைய தலைவர் எம்.பாக்கியநாதன் ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"பனை அபிவிருத்திச் சபையின் கடந்த காலத் தலைவர் திரு. க.நடராசா அவர்கள் கடமையாற்றிய 13 வருட காலப்பகுதியில் நடைபெற்ற நிர்வாக, நிதி ஊழல்களை விசாரிக்கவேண்டும் என கடந்த மாதம் நடைபெற்ற சபையின் பணிப்பாளர்கள் சபைக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கௌரவ பொதுநிர்வாக, பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு, ஒரு தனி நபர் கொண்ட விசாரணை உத்தியோகத்தரை நியமிக்கும்படி மேற்படி அமைச்சின் செயலாளர் அவர்களை பதில் அமைச்சர் கௌரவ அத்தாவுடை செனவிரட்ண அவர்கள் பணித்துள்ளார்கள்.

மேலும் கடந்த 1994ம் ஆண்டு சபையின் தேவைக்காகப் பெறப்பட்ட ஒரு கட்டிடத்திற்கு கொடுக்கப்பட்ட முற்பணம் 90,000/-த்தினை இச்சபையின் பழைய தலைவர் திரு.க.கடராசா அவர்கள் தன்னிச்சையாக பெற்றுக்கொண்டதாகவும், இது பனை அபிவிருத்திச் சபையின் கணக்கு எதிலும் காட்டப்படவில்லை எனவும், அதனைத் திருப்பி பெற்றுக் கொடுக்கும்படியும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் ஓர் மோசடி முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. இதன் புலன் விசாரணை தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

இவற்றைவிட தற்போது நடைபெற்று வரும் தற்காலிக வேலைநீக்கம் சம்பந்தமாக ஒரு விசாரணைக்கு சாட்சியாக வரும்படி விசாரணை உத்தியோகத்தர், திரு.க.நடராசா அவர்களுக்கு அறிவித்திருந்தார். இவ் விசாரணை இம்மாதம் 11.08.95ம் திகதி நடைபெற இருந்தது. இது தொடர்பாக 04.08.95ம் திகதி தொலைபேசி மூலம் விசாரணை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்ட திரு.க.நடராசா அவர்கள் தான் 11.08.95ம் திகதி நடைபெறும் விசாரணைக்கு வருவதாக உறுதியளித்திருந்தார். பின்பு 05.08.95ம் திகதி விசாரணை உத்தியோகத்தருக்கு அனுப்பிய குறிப்பு ஒன்றில் தனக்கு சிறிய இருதய நோய் இருப்பதாகவும், அதனால் டாக்டர் இரண்டு மாதங்கள் படுக்கையில் ஓய்வு எடுக்கும்படி கூறியதனால் தான் இந்தியா சென்று சிகிச்சை பெற இருப்பதாகவும் கூறியிருந்தார்.

06.08.95ம் திகதி கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றில் வெளியான ஒரு கட்டுரையின்படி இவர் தனது இளைப்பாறும் காலத்தினை ஓய்வெடுக்க அவுஸ்திரேலியா செல்வதாக குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த நடவடிக்கை களின் மூடுமந்திரத்தை யாரும் அறிய முடியாததாகவுள்ளது. அந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரையில் 'கற்பகம்' என்று எமது வியாபார நிறுவனத்தின் மூலம் அக்கட்டுரை எழுதப்பட்டதாக ஒரு பிரமையை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கட்டுரைக்கு எமது "கற்பகம்" நிறுவனம் எந்த விதத்திலும் பொறுப்பல்ல."

# காட்டூண் மூலை




ஓவர் கோட்

நன்றி-சன்டே லீடர்

# காதோடு காது

## உதாரா



**பகைமை தவிர்ப்பு ஒப்பந்தம்** கிழக்கிலங்கையின் தலைநகரக் கல்வியக மொன்றில் இரு மூத்த அதிகாரிகளுக் கிடையில் நீண்டகாலமாக நிலவிய கசந்த போக்கு சமரசத்தீர்வுக்கு வந்துள்ளதாம். கல்விக்கும், கட்டிடத்திற்கும் பொறுப்பான இந்த இரு நாயகர்களையும் வைத்துக் கொண்டு பக்கம் சேர்ந்தவர்கள் பலர். பகல் வெளிச்சம் காட்டியவர்கள் வேறு பலர். எல்லோருமே இப்பொழுது 'கப்சிப்'. காரசாரமான றோணியோ எழுத்துப் பிரசுரங்களை வெளியிட்டு பிரச்சனையை பூதாகாரமாகக் காட்டியோர் பூனைகளாகினர். எங்கள் பிரதேசத்தின் வெற்றி பெற்ற பகைமைத் தவிர்ப்பு இது என்று ஸ்ரீமான் பொதுஜனம் பேசிக்கொள்ளுகிறார்.

**கும்பலோடு கோவிந்தா** மட்டக்களப்பு-பொதுச் சந்தை குண்டு வெடிப்பில் அகப்பட்டு மக்கள் அல்லோல கல்லோலப் பட்ட வேளையில்-திடீரென முளைத்த கொள்ளை கோஷ்டியினர்-சிதறிய பொருட்களில் கையில் கிடைத்ததை அள்ளிக் கொண்டு ஓட மறக்கவில்லையாம். எப்படியிருக்கிறது மனித நேயம்!

**கல்லடி கடலோரம்** மட்டக்களப்பு-கல்லடி கடலோரப் பிரதேசத்தில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நாவலடிக்கு புலிகள் வந்து போவது சர்வசாதாரணம் என்று வழிப்போக்கன் சொல்கிறான்.

**அறுவடை அரோ ஹரா** நெல் விளைந்து கதிர் குலுங்கும் காலம். அறுவடைக்கு நான் தயாரென கதிர்கள் வளைந்து நிற்கின்றன. நெல்விளைந்த பருவத்தில் பயங்கர வாதக் குழப்பமும் அதிகம். காரணம் செங்கலடி- பதுளை வீதியில் பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் புலிகளால் கடத்தப் பட்டுள்ளன. கடத்தப்பட்ட வாகனங்களுள் உழவு இயந்திரங்கள் உட்படும். அப்பகுதியில் படையினரும் காவல் அரண்களை மூடி உள்ளனர். புலிகளின் ஆதிக்கம் இங்கு அதிகம். சம்பவங்களுக்குப்பின்-வாகனங்களுக்குத் தடையும் விதித்துள்ளனர் படையினர். இத்திரிசங்கு சுவர்க்க நிலையில் அந்தோ பரிதாபம்! வயல் செய்தவர்கள் அறுவடை அரோஹராதான்.

## தேனகப் புதினங்கள்

**புனானையில் யானைகள்** பொலநறுவை-புனானை-காடடர்ந்த பகுதியில்-வரட்சிக்கு தாக்குப்பிடிக்க முடியாத யானைகள்-வீதிக்கு வருகின்றன. இதனால் இரவு வேளைகளில் இவ்வழித்தூரத்தை கடந்து செல்ல வரும் வாகனங்கள் பெரும் தொல்லைக்குள்ளாகின்றன. வீதிக்கு குறுக்கே யானைக் கூட்டம்-அசைந்தாடி நிற்கின்றது. யானைகளைப் பார்க்க வேண்டுமானால் புனானைக்குப் போங்க என்று சொல்லத் தோணுகிறது.

**மழைப் பயம்** மட்டக்களப்பு மக்களால் சின்னக்கிளாலி என செல்லமாக அழைக்கப்படும்-கொம்மாதுறை காவல் அரணை அண்டியுள்ள குறுக்குப் பாதை மீண்டும் மக்கள் புளக்கத்திற்கு திசை திருப்பப் பட்டுள்ளது. காவல் அரண் இரு முனைகளிலும் உள்ள பரிசோதனை பற்றி மக்களுக்கு கவலை இல்லையாம். பயங்கர வாதத்துடன் பழகிப்போன பழக்கம். ஆனால் பயமெல்லாம் - எதிர்வரும் மாரி மழையைப் பற்றியதுதானாம். ஏனாம் என்றால்- தொம்பலும் சுரியுமாக மாறும் இவ்வீதிப்பயணம் செய்ய முடியாததாகிவிடுமாம். கிறவல் வேறு குவித்திருக்கிறார்கள் இப்போது.

**வீரமுனையில் அகதிகள்** தீயுண்டபெயர் வீரமுனைக்கு உண்டு. இப்போது என்னவென்றால்- வீரச்சோலையில் ஏற்பட்ட அனர்த்த விளைவின்போது அங்குள்ளோர் பலர் அகதிகளாக வீரமுனைக்கு வந்துள்ளனர். இரண்டு வீரமும் இணைந்தால்-வீரமுனை எப்படியிருக்கும்.....?

# மாநகர முதல்வரின் இல்லத்தில் தேடுதல்

## அவமதிக்கும் செயல் என்று முதல்வர் ஆட்சேபம்

**20.08.95** அன்று மட்டக்களப்பு நகரில் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை ஒன்றை இராணுவத்தினர் மேற்கொண்டனர். அப் போது மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகத்தின் இல்லமும் சோதனையிடப்பட்டது. முன்பு ஒரு தடவையும் மாநகர முதல்வரின் இல்லம் சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து தனது ஆட்சேபனையை கிழக்குப் பிராந்திய இராணுவப் பொறுப்பதிகாரிக்கும், மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரிக்கும் மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாநகர முதல்வரான தனக்கு செய்யப்பட்ட அவமரியாதையே அதுவாகும் என்று அவர் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மட்டக்களப்பு மாநகர முதல்வர் முரசுக்கு தெரிவித்துள்ளதாவது, "பாதுகாப்புப் படையினர் மூன்று தடவைகள் மேலும் மேலும் படுக்கை அறைவரை சென்று அலுமாரி, துணிமணிகள் அனைத்து உடமைகளையும் உதறிப் பார்த்தனர். தேடுதல் குழுவுக்கு தலைமை வகித்து வந்த இராணுவ வீரர் என்னுடன் ஆங்கிலத்தில் பேசினார். எனது பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தரில் தமக்கு நம்பிக்கை இல்லையென்றும் ஆதலால் வீட்டை பூரணமாக சோதனையிட வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

அதன்பின் சொன்னபடியே செய்தார். எனது பொலிஸ் பாதுகாவலரை, ஆயுதம் சகிதம் வாசலுக்கு அழைத்து துருவித் துருவி கேள்வியைக் கேட்டார். எனக்குரிய பொலிஸ் பாதுகாவலர்களின் ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருக்கிறதா என்பதனையும் ஆராய்ந்தார்.

எனக்கு தொந்தரவு தரக்கூடிய பல அவசியமற்ற கேள்விகளையும் கேட்டார்.

மாநகர முதல்வரான என்னை அவமதித்தமையால், எனக்கு ஏற்பட்ட உணர்வுகளை தமிழ் மக்களின் கண்ணீர் கடலுக்குள் ஒரு துளியாக்குகிறேன். அவ்வளவுதான் என்னால் செய்ய முடியும். அதுவே எனக்கு மனஆறுதல் தரும்." என்று தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு மாநகர முதல்வர்.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## வருகிறது வைரவிழா

கண்டி. கலஹா தமிழ் மத்திய கல்லூரி 1995 ஜூன் 29 தொடக்கம் ஸ்ரீ இராமகிருஷ்ணா மத்திய கல்லூரி என பெயர் மாற்றம் பெற்றுள்ளதுடன், தன் அறுபது வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக எதிர்வரும் செப்டம்பரில் தனது வைரவிழாவை சிறப்பாக கொண்டாடவுள்ளது. இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இவ்விழாவில் முதலாம் நாள் கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய பரிசளிப்பு விழாவும், இரண்டாம் நாள் கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய சிறப்புமலர் வெளியீடும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.


## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

## விவாக சேவை

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமக்கள் பட்டியல் கைவசமுண்டு- பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யலாம்.

V.S.S GURUKKAL
18, STATION ROAD,
WELLAWATTA
COLOMBO-06.



9, 10, O/L. Science, Maths.
(With Papers)
A/L, Pure, Chemistry.

தனிப்பட்ட முறையிலோ அன்றி குழுவாகவோ, வீட்டுக்கு வந்து வகுப்புக்கள் நடாத்தப்பட்டும்.

Contact: 70, Pamankade Road, Colombo-06.
T.P: 714921 (Advt)


## மலையகத்தில் நியமனத்தில் தாமதம்

மத்திய மாகாண தமிழ் பாடசாலைகளில் தமிழ் பேசும் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இவ்வேளையில் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் 92ஆம்-94ம் கல்வியாண்டில் கற்பித்தலில் தேசியடிப்ளோமா பரீட்சையில் சித்தி பெற்ற 26 ஆசிரியர்களுக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை. இவர்களின் நியமனம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி பீடாதிபதியால் கல்வி சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இருந்தும் இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை. எனவே, இந்நியமனம் சம்பந்தமாக மத்திய மாகாண தமிழ்க் கல்வியமைச்சு துரித நடவடிக்கைகளில் இறங்குமாயின், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சந்தோசமடைவார்கள்.

சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவ.


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336,3570.
FAX 0094523093 EXT 28



சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான

தினமுரசு வாரமலர் சந்தா விபரம்

ஒரு வருடத்திற்கு–தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)

ஆறு மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 1130/= (26 வாரங்கள்)

மூன்று மாதங்களுக்கு–தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | | அமெரிக்கா/கனடா | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= (52 வாரங்கள்) | US $ 38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) | US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) | US $ 20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) | US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) | US $ 11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) | US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.



உ

## திருமண ஸ்ரீ துர்காய நமஹ அழைப்பிதழ்

நிகழும் மங்களகரமான யுவ ஆண்டு ஆவணி மாதம் 19ம் நாள் (04-09-1995) திங்கட்கிழமை அன்று தசமி திதியும் பூராட நட்சத்திரமும் அமிர்த யோகமும் தனு லக்கினமும் சுக்கிர ஓரையும் பொருந்திய பொன்னான சுபதினத்தில்; அன்று காலை 10 மணிமுதல் பகல் 1.57 மணிக்குள் திருமண வைபவம் நடைபெறும்.

நுவரெலியா
அருட்திரு பி.கே. சாமி தேவர் தம்பதிகளின்
கமல புண்ணிய சிரேஷ்ட புத்திரன்

திருநிறை செல்வன், கங்காதரன்–க்கும்
P.K. Saamy Associates (Pvt) Ltd (Managing Director)
P.K.S. & Sons Transport Agency (Proprietor)
P.K S Communication Division (Director)
P.K. Saamy Exports & Imports (Manager)

கந்தப்பளை
வேலுத்தேவர் திருச்செல்வம் தம்பதிகளின்
கமல புண்ணிய கனிஷ்ட புத்திரி

திருநிறை செல்வி, மதிவதனி

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நுவரெலியா சினிசிட்டா நகர மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்க

தங்கள் நல்வரவை அன்போடு எதிர்பார்க்கும் மணமகன்-மணமகள் குடும்பத்தினர்

இங்ஙனம்
அன்புடன் உங்கள் வருகையை எதிர்நோக்கும் திரு. பி.கே. சாமி தேவர் குடும்பத்தினர்
P.ரெங்கநாதர் தேவர் குடும்பத்தினர் (கொங்கோடியா)
A.பெரமையா தேவர் குடும்பத்தினர் (போட்டுஸ்ட்-கந்தப்பளை)
P. ஆதிமூல தேவர் கனகநாதன்(வாழபாரை-தமிழ்நாடு)

தாய் மாமன்
திரு. ஜெகநாதன் தேவர் குடும்பத்தினர்
மெறிகோல்ட்-கந்தப்பளை

அவ்வண்ணமே கோரும் மணமகன் குடும்பத்தினர்
V.திருச்செல்வம்தேவர் குடும்பத்தினர் (கொங்கோடியா-கந்தப்பளை)
V.செல்வராஜ் தேவர் குடும்பத்தினா ஆவனத்தான் கோட்டை தமிழ் நாடு
V.ரெங்கநாதர் தேவர் குடும்பத்தினர் கொங்கொடியா

மாமன் வீட்டார்
S. காசிநாதர் தேவர் தம்பதிகள்-பிலேக்பூல் இல்லம்- நுவரெலியா

இரு வீட்டார் அழைப்பு-தந்தி P.K. Saamy Associates, Nuwara-eliya
118/2 Subaillam Lady, Macculams Drives, Nuwara-eliya.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்



# முன்னேறித் திரும்புதலும் புலிகளின் வலையும்



முன்னேறிப்பாய்ச்சல் நடவடிக்கை முடிந்த பின்னர் பல்வேறு பெயர்களில் அவ்வப்போது படையினரின் நடவடிக்கைகள் யாழ்-குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் ஒரு நடவடிக்கைதான் 'ட்ரக்கன் ஃபயர்'

இதனை தமிழில் மொழி பெயர்த்தால் 'வேதாளத்தின் தீ சுவாலை' என்று அர்த்தம்.

இந்தத் தீ சுவாலை புலிகளைவிட பொதுமக்களையே அதிகம் தீண்டியிருக்கிறது.

பண்டத்தரிப்பில் இருந்து புறப்பட்ட படையினர் அதனையடுத்துள்ள வடலியடைப்பு-பண்ணாகம் சித்தங்கேணி போன்ற பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். பின்னர் மீண்டும் தமது நிலைக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

புலிகளை நோக்கி முன்னேறி தாக்கிவிட்டு திரும்புவதுதான் படையினரின் நோக்கம்.

ஆனால், புலிகளது தரப்பில் ஒருவர் மட்டுமே பலியானார்.

பொதுமக்கள் தரப்பில் 15 பேர் வரை பலியானார்கள். பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, பண்ணாகம், சித்தங்கேணி, சங்கானை போன்ற பகுதிகளில் இருந்து 15 ஆயிரம் பேர் அகதிகளாக வெளியேறினார்கள். கிட்டத்தட்ட ஒரு மயானம் போல அந்தப் பகுதி மாறியது.

இது தவிர, அளவெட்டியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அடிக்கடி முன்னேறிச் சென்று திரும்புகின்றனர்.

யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே, என்பது போல படைகள் வரும் பின்னே ஷெல்வீச்சுக்கள் பொழியும் முன்னே என்றாகிவிட்டது.

இதனால் அளவெட்டிக்கு அடுத்துள்ள மல்லாகம் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறிவிட்டனர்.

படைத்தரப்பு தனது முழுப்பலத்தையும் திரட்டி முன்னேறும் போது புலிகள் தமது எதிர்ப்பைத் தளர்த்திக் கொள்கிறார்கள்.

தமது பலத்தைப் பொறுத்து புலிகள் கையாளும் நடைமுறைத் தந்திரோபாயமாக அதனைக் கருதிக்கொள்ளலாம்.

உள்ளே வரவிட்டு தாக்கும் புலிகளது தந்திரோபாயம் புலிகள் தரப்புக்கு சாதகம் என்பது உண்மை. தமது அணிகளது இழப்பைக் குறைத்து, படைத்தரப்பு மீது தமக்குச் சாதகமான தருணத்தில் தாக்குவது புலிகளுக்கு சுலபமாக இருக்கும்.

உள்ளே வரவிட்டு தாக்குவதே புலிகளது தந்திரோபாயம் என்பதை படைத்தரப்பும் தெரிந்துவைத்திருக்கிறது.

எனவே, அசுர வேகத்தில் முன்னேறிவிட்டு, மீண்டும் தமது பழையநிலைக்கு திரும்புவதே படைத்தரப்பின் தந்திரோபாயமாக இருக்கிறது.

அதாவது, புலிகள் தமது வலையை விரிப்பதற்கிடையே படைகள் திரும்பி விடுகின்றன.

உள்ளே போய்விட்டு திரும்புவது, உள்ளே வரவிட்டுத்தாக்குவது, இரு தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக வகுத்துள்ள இந்த தந்திரோபாயங்கள் இரு தரப்புக்கும் இது வரை கைகொடுத்துவருகின்றன.

ஆனால், யுத்தம் நடைபெறுவது பரந்தவெளிகளில் அல்ல. பொது மக்களின் குடியிருப்புக்கள் நிறைந்துள்ள பகுதியில் என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

இருதரப்பும் தமது தந்திரோபாயங்களை பரிசீலித்துக்கொண்டிருக்கும் போது, பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன்போகுது என்ற நிலையில்தான் பொதுமக்கள் இருக்கிறார்கள்.

படைகள் யாழ் குடாநாட்டுக்குள் தற்போது நிலைகொண்டுள்ள பகுதிகளை அடுத்துள்ள பகுதிகளும் மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன.

அளவெட்டியில் படையினர் இருப்பதால் மல்லாகம் குடிமக்கள் இல்லாத பகுதியாக மாறிவிட்டது. பண்டத்தரிப்பில் படையினர் நிலைகொண்டிருப்பதால் அதனை அடுத்துள்ள வடலியடைப்பு, சித்தங்கேணி, அராலி, சங்கானை போன்ற பகுதிகளில் இருந்த மக்கள் தமது மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்திலும் தமது முகாம்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை முன்னேறிவிட்டு திரும்பும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டே வந்தனர்.

ஆனால், தற்போது முன்னேறிச் செல்லும் தூரம் அதிகமாக இருக்கிறது.

முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஷெல் வீச்சுக்களின் இடி முழக்கமும் தாக்குதல் குறித்த அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் படையினருக்கு தேவைப்படுகிறது.

அகோரமாய் வருகிறோம் ஓரம்போ என்று எதிரியை மிரட்டவே தரையில் இருந்தும் வானில் இருந்தும், கடலில் இருந்தும் குண்டுகளை ஏவ வேண்டி இருக்கிறது.

இதனால், பொதுமக்களே பீதி கொண்டு சிதறி ஓடுகிறார்கள் பலியுமாகிறார்கள்.

அதன் பின்னர் மக்கள் இல்லாத நிலப்பரப்பு மட்டுமே படையினரை வரவேற்கிறது. கட்டிய வீட்டையும், கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த உடமைகளையும் விட்டுச் செல்ல விரும்பாத வயோதிபர்களும் வேண்டுமானால் மிச்சமிருப்பார்கள்.

நிலப்பரப்பை கைப்பற்றும் வரை அங்கு பொது மக்கள் இல்லாமல் இருப்பது படைத்தரப்புக்கும் சாதகம் தான். இல்லாவிட்டால் புலிகள் யார்? பொதுமக்கள் யார்? என்று இனம் காண்பது கஷ்டமாக இருக்கும்.

ஆனால், நிலப்பரப்பை கைப்பற்றிய பின்னர் அங்கு மக்கள் இல்லாதிருப்பது படைத்தரப்புக்கு பலவீனமாக மாறிவிடும்.

மக்கள் இல்லாத பகுதி என்பதால் சக்திவாய்ந்த வெடிகுண்டுத்தாக்குதல்களை புலிகள் நடத்த முடியும்.

அதுதவிர, மக்களே இல்லாத ஒரு பரந்த பகுதியில் எந்தநேரமும் துப்பாக்கியும் கையுமாக, மயான அமைதிக்குள் வாழ்வது என்பது சுலபமான காரியமல்ல. உளவியல் ரீதியான சோர்வுகளும் தலைதூக்கும்.

ஆனால், படையினரின் தற்போதைய இராணுவ தந்திரோபாயம் காரணமாக மக்கள் இல்லாத நிலப்பரப்புக்கள் மட்டுமே அவர்கள் கையில் விழும்.

படைகள் உள்ளே வந்தால் என்ன நடக்குமோ என்ற அச்சமும், படைகள் உள்ளே வராமல் தடுக்க புலிகளால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கையுமே தற்போது புலிகளுக்குள்ள பொதுமக்கள் ஆதரவின் முக்கிய அடிப்படையாக இருக்கிறது.

தீர்வுயோசனையோ, அல்லது உண்மையாகவே உயர்ந்த பட்ச தீர்வுத் திட்டமோ எது வந்தாலும் கூடவே படைகளும் உள்ளே வரும் என்றால் அதுதான் மக்களுக்குள்ள பிரச்சனையாகிவிடும்.

தீர்வும் வேண்டாம், எதுவும் வேண்டாம் படைகள் வராவிட்டால் போதும் என்று நினைக்குமளவுக்கு படைத்தரப்பு அச்சமூட்டிக் கொண்டிருக்கிறது.

இதுதான் புலிகளின் முக்கியபலம், இதனையுணராமல், அரசியல் தீர்வை முன்வைத்தால் புலிகள் பலவீனமாகிவிடுவார்கள் என்ற வாதம் சொத்தையானது.

தமிழ் மக்களது அரசியல் பிரச்சனைகள் போராட்டங்களுக்கு வித்திட்டன என்பது உண்மைதான். ஆனால், ஆயுதம் ஏந்திய போராட்டம் உருவாகியமைக்கு படைத்தரப்பினரே முக்கிய காரணமாகும்.

சிங்கள அரசியல்வாதிகளும், தமிழ் அரசியல்வாதிகளும் வாய் மூலம் தர்க்கப்பட்டுக்கொண்டே இருந்திருப்பார்களேயானால், இன்றும் அமிர்தலிங்கம் உயிரோடு இருந்து உண்ணாவிரதம் நடத்திக்கொண்டிருப்பார்.

77-83 இனக்கலவரங்களையாவது முப்படைகளும் உடனடியாக அடக்கியிருந்தால், எமக்கென்று ஒரு படைதேவையென்ற கருத்து தமிழ் மக்களிடம் வலுப்பெற்றிருக்க மாட்டாது.

இன்பம், செல்வம் என்று ஆரம்பித்து பல இளைஞர்களை கைதுசெய்து படையினர் கொலைசெய்து வீசியிருக்காவிட்டால், உயிர் உத்தரவாதம் தேவையானால் ஆயுதம் ஏந்தவேண்டும் என்ற நம்பிக்கை வேரூன்றி இருக்காது.

சத்தியாக்கிரகம் இருந்த அகிம்சைவாதிகள் படைகளால் அடித்து விரட்டப்பட்டிருக்காவிட்டால், 'அறவழி சரிப்பட்டுவராது' என்ற உணர்வு மக்களிடம் ஏற்பட்டு இருக்காது.

ஆக, உரிமைப்போராட்டம் என்பதை உயிரையும் பாதுகாக்கும் போராட்டம் என்ற கட்டத்துக்கு கொண்டு சென்றுவிட்டமைக்கு படையினரின் நடவடிக்கைகளே காரணமாகும்.

1985 வரை யாழ் குடாநாட்டில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளே, இன்றுவரை படைத்தரப்பு குறித்த நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

அரசியல் தீர்வொன்று உருவாகுமானால் அது உரிமைப் பிரச்சனைக்கு தீர்வாகலாம். உயிர் பிரச்சனைக்கு தீர்வாகுமா?

ஆம், என்று சொல்லவேண்டுமானால் உருவாகும் அரசியல் தீர்வு புலிகளால் ஏற்கப்பட வேண்டும். அப்படியானால் தான் யுத்தம் முடிவுக்கு வரும்.

குறைந்த பட்சம் சமஷ்டி வழங்கப்படக்கூட ஏற்ற சூழ்நிலை இல்லை. எனவே, இராணுவ ரீதியில் பலம் வாய்ந்த ஒரு அமைப்பு சமஷ்டிக்கு குறைந்த தீர்வுக்கு எப்படி முன்வரும்?

ஆகவே, அரசுக்கு புலிகளை எதிர்கொள்ள உள்ள ஒரே வழி யுத்தம் மட்டும்தான்.

யுத்தத்தில் இரு தரப்புமே வெற்றி பெறுவது என்பது சமீபகாலத்தில் நடந்து முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல.

யுத்தத்தை நடத்தும் முறையில் மாற்றத்தை செய்யாமல், புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுவது மட்டுமே அரசின் நோக்கமாக நீடித்தால், புலிகளின் வெகுஜன ஆதரவுத் தளமும் விரிவாகிக்கொண்டே இருக்கும்.

அடிக்கடி முன்னேறிச் சென்று திரும்புந்தூரம் அதிகமாகும் போது, அதிகளவான மக்கள் அகதிகளாவார்கள்.

அகதிகளான மக்கள் படைகள் எப்போது திரும்பிச் செல்லுவார்கள் என்றுதான் காத்திருப்பார்கள்.

அகதிகளாகாத மக்கள் தாமும் அகதிகளாகி விடக்கூடாதே என்பதற்காக, படைகள் வந்துவிடக்கூடாது என்றுதான் நினைப்பார்கள். ஆக, நம்பிக்கை புலிகள் மீதுதான் திரும்பும்.

இதனை படைத்தரப்பு வெற்றிகொள்ள வேண்டுமானால் முன்னேறித் திரும்பும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

முன்னேறிய பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து, அப் பகுதி மக்கள் அங்கு மீண்டும் திரும்பி வருவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியிருக்கும்.

இவற்றைச் செய்ய வேண்டுமானால் படைத்தரப்பின் பலம், மனோபாவ மாற்றம் இரண்டும் முக்கிய தேவைகளாகும்.

ஏற்கனவே, யாழ் குடாநாட்டில் தீவுப் பகுதிகள் படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால், படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளே அங்கும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தீவுப் பகுதி மக்கள் மரக்கறி எண்ணைய் கொண்டு செல்லக் கூட கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். பற்றறிகள் கொண்டு சென்று வானொலி கேட்கவும் முடியாத நிலையில்தான் அங்குள்ள மக்கள் இருக்கின்றனர். படைத்தரப்பின் மனோபாவமே இதற்குக் காரணமாகும்.

புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளோடு தரைவழித்தொடர்பே இல்லாத தீவுப் பகுதிகளிலேயே இந்த நிலை. அங்கிருந்து பற்றறிகளை வீசி எறிந்தால் கூட யாழ்ப்பாணத்தில் போய் விழப்போவதில்லை. தாமும் சந்தேகத்தோடு நோக்கப்படுவதாகவே தீவுப் பகுதி மக்கள் நினைக்கும் போது அவர்களது நம்பிக்கையை படையினர் எவ்வாறு பெறமுடியும்.

எனவே-85ம் ஆண்டிற்கு முன்பிருந்த மனோநிலையும், 85ம் ஆண்டுக்கு முன்னர் கடைப்பிடித்த அணுகுமுறைகளும் சுத்தமாக மறைந்தாகிவிட்டது என்று படைகள் நிரூபித்தாக வேண்டும்.

ஆனால், சமீபத்திய ட்ரக்கன் ஃபயரில் பலியான பொதுமக்களையும் புலிகளின் பட்டியலில் சேர்க்க முயற்சித்தமை போன்ற நடவடிக்கைகள் நம்பிக்கைகளைப் பெற உதவப்போவதில்லை.

பளிச்சென்று அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளைக்கூட முரட்டுத்தனமாக மறைக்க முயலும் பிரசாரங்களும் போர் முனையில் அரசு தனது நம்பகத் தன்மையை இழக்க காரணமாகின்றன.

இவ்வாறான பிரசாரங்கள் அரசு தன் முகத்தை வெளியுலக கண்டனக் கணைகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ள உதவலாம். அதே நேரம் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க உதவப்போவதில்லை.

இதே வேளை உள்ளே வரவிட்டுத் தாக்கும் புலிகளது தந்திரோபாயம் புலிகளை பாதுகாக்கலாமே தவிர, மக்களைப் பாதுகாப்பவர்கள் தாங்களே என்ற புலிகளின் பிரகடனத்தை பலவீனப்படுத்தியே வருகின்றன.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கைக்குப் பின்னர் வலிகாமம் பகுதி மக்களை தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் செல்லுமாறு புலிகள் கூறினார்கள்.

எந்தப் படையெடுப்பையும் எதிர்நோக்கத் தயாராக இருக்கிறோம். வதந்திகளை நம்பத்தேவையில்லை. மக்கள் தமது வீடுகளுக்கு திரும்பலாம் என்று புலிகளின் அரசியல் பிரிவு அறிவித்தது.

சமீபத்திய ட்ரக்கன் ஃபயரில் மீண்டும் அதே மக்கள் அகதிகளாகி இடம்பெயர்ந்தார்கள்.

இப்போது வலிகாமம் பகுதி மக்களுக்காக நிரந்தரமான அகதி முகாம்கள் சிலவற்றை புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

தமது வீடுகளில் சென்று தங்கலாம். சண்டை தொடங்கினால் இடம்பெயர்ந்து அந்த முகாம்களில் வந்திருக்கலாம். படைகள் திரும்பிச் சென்றவுடன் மீண்டும் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பலாம் என்று புலிகள் கூறியிருக்கிறார்கள்.

இதன் அர்த்தம் வலிகாமம் பகுதியில் படைகள் முன்னேறுவதை ஒரு குறிப்பிட்ட தூரம் வரை புலிகள் விட்டுக்கொடுப்பார்கள்.

நேரடிச் சமரைத் தவிர்த்து கெரில்லாத் தாக்குதல் பாணியைத்தான் கைக்கொள்ளப் போகிறார்கள்.

இதனால் வலிகாமம் பகுதி மக்களது வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாக மாறியிருக்கிறது. தொடர்ந்து இவ்வாறான தந்திரோபாயத்தை புலிகள் கையாளும் போது மக்களைப் பாதுகாப்பவர்கள் என்ற முத்திரையை புலிகள் இழக்க வேண்டி ஏற்படலாம்.

அகதி வாழ்க்கையும், புலிகளது தனியான நிர்வாகமும், போர்க்கால சூழல் கருதி அதன் கடும் கட்டுப்பாடுகளுக்கு மக்களை புலிகள் மீதான விரக்தி நிலைக்கு தள்ளிவிடலாம்.

ஆனால், புலிகள் மீதான நம்பிக்கையீனங்கள் வளர்வதை, படைத்தரப்பின் நடவடிக்கைகள் உடைத்தும் போட்டுவிடும் என்பதுதான் புலிகளுக்கு ஆறுதலான விஷயம்.

அதே சமயம், யாழ் குடாநாட்டுக்குள் பாரிய படையெடுப்பு ஒன்றுக்கு படைத்தரப்பு தயராகி வருவதால், புலிகள் தற்காப்பு யுத்தக்கட்டத்துக்குச் சென்றுள்ளார்கள்.

யாழ் குடாநாட்டிலுள்ள பிரதான தளங்கள் மீது தாக்குதல் யுத்தம் எதனையும் புலிகள் உடனடியாக மேற்கொள்ளப் போவதில்லை. இந்த வகையில் படைத்தரப்பு தனது நிலைகளை பலப்படுத்தியிருக்கிறது.

முன்னேறிப்பாய்ச்சலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் படையினரது நடவடிக்கைகளும் புலிகளுக்கு இழப்பை ஏற்படுத்தாது இருக்கலாம். ஆனால் புலிகளை தாக்குதல் யுத்தக் கட்டத்திலிருந்து, தற்காப்பு யுத்தக்கட்டத்திற்கு திரும்ப வைத்துள்ளன. ஆனால், படையினர் யாழ் குடாநாட்டுக்குள் முன்னேறிச் சென்று தமது நிலைகளை நிறுவிக் கொண்டால், தமது நிலைகளை பாதுகாக்க தற்காப்பு யுத்தக்கட்டத்துக்கு படைகள் செல்ல வேண்டி நேரலாம்.

படைகள் உள்ளே வந்தால் அவர்களை தமது வலையில் சிக்கவைக்க புலிகள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும் பீப்பாய்களில் வெடி மருந்துகள் அடைக்கும் வேலைகள் துரிதமாக நடந்துவருகின்றன. மோட்டார் ஷெல்கள் போதியளவு தயாரிக்கப்பட்டு வருகின்றன. நீண்ட தூர பங்கர்களும் வெட்டப்பட்டு வருகின்றன. தமது வலைக்குள் படைகள் வந்து சிக்கிக்கொள்ளும்வரை பொறுமையாக காத்திருந்துவிட்டு, பலத்த அடியைக் கொடுப்பதுதான் புலிகளின் நோக்கம்.

படையினர் அடிக்கடி முன்னேறிவிட்டு திரும்புவதால், முன்னேறுவது சுலபம் என்று ஒரு நம்பிக்கையை பெற்றுவிடுவார்கள். அந்த நம்பிக்கை ஆரம்ப உஷாரை படிப்படியாக குறைத்துவிடும். முதல் தடவை முன்னேறும் போது இருந்த வேகமும் விழிப்பும் மூன்றாவது, நாலாவது தடவை முன்னேறும் போது தளரவே செய்யும். அதுதான் புலிகளுக்கு தேவையான தருணம்.

அதுதான் புலிகளின் நினைப்பு என்பதும் சரியானால், அடிக்கடி படைகள் உள்ளே சென்று திரும்புவதற்கு புலிகள் அனுமதிப்பது, ஆசை காட்டி வலைக்குள் இழுக்கும் தந்திரம் என்றுதான் அர்த்தம்.

எதிர்கால யுத்தமுனை தான் தற்போது புலிகள் கடைப்பிடிக்கும் தந்திரங்கள் பற்றிய நமது கணிப்பு சரிதானா என்பதை சொல்ல முடியும்.

ஆனால், இரு தரப்பினதும் தந்திரோபாயங்கள் மத்தியில் பலியாகிக் கொண்டிருக்கும் பொதுமக்களை யாரால் மீண்டும் உயிர்கொடுத்து எழவைக்க முடியும். அதுதான் சோகம். ●

**நாரதர்**

# அதிரடி அய்யாத்துரை



ஆட்களை கௌவிக் கொண்டு போன முறையை வைச்சே, அதிகாரமுள்ள கைகள்தான் விளையாடுது எண்டு சொன்னனான் அல்லோ. இப்ப விஷயம் வெளிச்சப் போச்சு. ஆரம்பத்திலேயே உஷாராகியிருந்தா ஒண்டு, ரெண்டோடு நிறுத்தவைச்சிருக்கலாம். உளவுப் பிரிவே களவு செய்தா எந்த உளவுப் பிரிவை வைச்சு களவு செய்த உளவுப் பிரிவை கையும் களவுமாகப் பிடிக்கிறது? அதுதான் லேட்டான தாக்கும்.

வடக்கிலை தம்பிமார் கிழிக்கிற கிழியைப் பார்த்துப் போட்டு, கூட்டான கட்சிக்காரர் சிலருக்கு வயிற்றிலை புளி கரைச்ச மாதிரியாகிப் போட்டுதாம். அவைக்கும் யோசனையை அனுப்புங்கோ எண்டு சொல்லியிருக்கிறம் எண்டு பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கினம். பந்தியில் இருந்து சாப்பாடு வர முன்னரே 'வாயூறுது... பலே பலே' எண்டு சொல்லுறதுக்கு முதல் அதைச் சொல்லியிருந்தா நியாயம். பந்திக்கு முந்திப் போட்டு. இப்ப சொல்லுறது இருக்கே அது வெளிக்குப் பூசுற சாயம்.

எப்பவும் நினைச்சவுடன் சுலபமாக பறிக்கிறவகையில்தான் கொடுக்கிறதைக் கொடுக்க வேணும் எண்டு மஞ்சள் உடை குருமார் சொல்லியிருக்கினம். ஆனால் அப்படிச் சொன்னவை வஞ்சகம் இல்லாதவை. சொல்லுறதை நெற்றிக்கு நேராக சொல்லிப் போட்டினம். வேறை சில மஞ்சள் உடைக்காரர் அடிச்சு முடிஞ்ச பிறகு பார்க்கலாம் எண்டு சொல்லியிருக்கினமல்லோ அதுதான் டேஞ்சர். அடிச்சு முடிச்சா கொடுக்கும் தேவையே இருக்காது எண்டு கொடுப்புக்கை சிரித்துக்கொண்டு தான் அதைச்சொல்லுகினம். கூட்டான கட்சி விழுந்தடிச்சு வரவேற்ற விசயமும் தீர்வு யோசனை பற்றிய சந்தேகங்கள் பெரும்பான்மை தரப்பில் வளர ஒரு காரணமாம். சிவ... சிவா...

தபால் தந்திக்கு பொறுப்பான மங்களமானவர்தான் அதிகார தரப்பில் பிரகாசம் உள்ளவராக வளர்ந்து வருகிறாராம். மேலிடமும் அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறதாம்.

மஞ்சள் உடையினருடன் பேசுமாறு நீதிக்கு பொறுப்பானவருக்கு மேலிட உத்தரவாம். மஞ்சள் உடையார் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டாராம். 'நான் இல்லை என்று சொல்லுக' எண்டுபோட்டு நழுவிப் போட்டாராம் நீதிக்குப் பொறுப்பானவர். வாதம் எண்டால் பதில் சொல்லலாம். விதண்டாவாதம் எண்டால் 'காய் வெட்டுறது' நல்லதுதானே. (காய் வெட்டுதல் என்றால் அறுவையான ஆட்களை தவிர்த்தல் எண்டும் பொருள்படும் என்று அறிவீர்களாக.)

இந்தா வாறன், அந்தா வாறன் எண்டு சிங்கத்தார் காலத்தை இழுத்தடிச்சுப் போட்டார் வந்து நாலு அறிக்கை, மூண்டு வீரப் பேச்சு, அது போதும் சனம அடுத்த முறையும் வாக்குப் போடும் எண்டு அவருக்குத் தெரியாதோ?

அவர் ஒரு பிரபல தமிழ் பத்திரிகையாளர். கொழும்பின் புறநகரிலை வீடு. பஸ்வரும் எண்டு காத்திருந்தார். அருகில் நண்பரும் நின்றவராம். நண்பருக்கு தெரிஞ்ச வேன் ஒண்டு வந்தது. அதுவும் புறநகருக்கு போகும் வேன். "அங்கைதானே போறியள், ஐயாவையும் கொண்டுபோய் விடுங்கோ" எண்டு நண்பர் வேன்காரரிடம் சொல்ல அவரும் "அதுக்கென்ன வரச் சொல்லுங்கோ" எண்டாராம். ஆனால் பத்திரிகையாளரோ "நான் ஏற மாட்டேன், நான் ஏறமாட்டேன்" எண்டாராம். நண்பருக்கு ஆச்சரியம், "ஏனய்யா போகலாம் தானே?" அதற்கு பத்திரிகையாளர் சொன்னாராம், "போடா பேயா வேனின் நிறத்தைப் பாரடா, நான் போகமாட்டேன்" எண்டாராம். வேனின் நிறம் வெள்ளை.

திருவானமலை தங்கமானவர் கடும் சாதனை ஒன்றை நிறைவேற்றிப் போட்டார். மூவருக்கு கல்வித் திணைக்கள உயர் பதவிகள் பெற்றுக் கொடுத்திருக்கிறார். தலைகீழாய் நிண்டு சாதிச்சதுக்கு பாராட்டுத் தெரிவிக்க ஆசையோ? ஒரு நிமிசம் பிளீஸ். மூவரும் தங்கமானவரின் நெருங்கிய உறவினர்களாம். சோழியன் குடும்பி...

கனடாவில் உள்ள சில தமிழ் பத்திரிகைகளுக்கு அங்குள்ள ரெண்டு எழுத்தார் கடும் உத்தரவு போட்டிருக்கினமாம். கனடாவில் இருக்கிற நினைப்பிலை கண்டதையும் எழுதலாம் எண்டு நினைக்காதேயுங்கோ எண்டு உத்தரவாதம். அதாலை சிலர் கப்சிப்பாகிட்டினமாம்.

இலண்டனில் இருந்து நம்மவர்கள் வெளியிட்ட பனிமலர் பழைய பிரதி ஒண்டு பார்க்கக்கிடைத்தது. அதில் ஒரு ருசியக் கவிதை மனதில் புகுந்தது. அதில் ஒரு துளி

"இன்பத்தின் விலையை  
அறிய முடியாதவர்கள்  
இன்புறவே இயலாது!  
தவறு என்று கண்டதை  
மன்னிக்காதீர்-ஏனெனில்  
அவைகள் திரும்பவும்  
நேர்ந்து அதிகமாகக் கூடும்- பின்  
நமது மாணவர்கள்  
நாம் மன்னித்ததற்காக  
நம்மை மன்னிக்க மாட்டார்கள்"

(யெங்கனி யெவ்டுஷென்கோ)

# குறி தவறிய குண்டு

## அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

42

### தவறு திருத்தம்

சென்ற வாரம் ஒரு பெயர் குழப்பம். ஒரே விதமான பெயர்கள் காரணமாக ஏற்பட்ட குழப்பம் அது.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையில் இயங்கிய இயக்கத்தின் பெயர் 'ரெனா' என்று குறிப்பிட்டு விட்டேன். அது தவறு.

'ரெனா' என்பது அமரர் அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகன் பகீரதனால் நடத்தப்பட்ட 'தமிழ் தேசிய இராணுவம்' என்னும் குழுவையே குறிக்கும். இதன் தோற்றமும், அழிவும் குறித்து முன்பே விளக்கியிருக்கிறேன்.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையில் இயங்கிய இயக்கம் 'தமிழீழ இராணுவம்'. இது சுருக்கமாக TEA என்று அழைக்கப்பட்டது.

ஒபரோய் தேவன் உருவாக்கிய இயக்கம் தமிழீழ விடுதலை இராணுவம். சுருக்கமாக ரெலா (TELA) என்று அழைக்கப்பட்டது.

ஜெகன் உருவாக்கிய இயக்கம் தமிழீழ தீவிரவாதிகள் இயக்கம் 'ரெலி' என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது.

ரெலோ, ரெனா, ரெலா, ரெலி- பெயர்க் குழப்பம் தலை சுற்ற வைக்கிறதல்லவா? இவற்றில் உடைபாடுகளோடு தற்போது மிஞ்சியிருப்பது 'ரெலோ' மட்டுமே.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் இலண்டனில் இரசாயன விஞ்ஞானம் படித்தவர்.

பனாகொடை சிறையில் இருந்து தப்பி ஓடி, பின்னர் மீண்டும் கைதானார். மட்டக்களப்பு சிறையுடைப்பு மூலமாக இவரும் வெளியே வந்தார்.

பனாகொடை சிறையில் இருந்து தப்பியதை வைத்து, 'பனாகொடை மகேஸ்வரன்' என்று அழைக்கப்பட்டார்.

### பாரிய கொள்ளை

1984இல் நடைபெற்ற வங்கிக் கொள்ளையொன்று பரபரப்பாகப் பேசப்பட்டது.

மட்டக்களப்பில் காத்தான்குடி மக்கள் வங்கியில் புகுந்த இளைஞர் கோஷ்டியொன்று அங்கிருந்த நகைகளையும், பணத்தையும் சுருட்டிக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டது.

கொள்ளைபோன நகைகளும், பணமும் மூன்று கோடி ரூபாய்களுக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற மிகப் பாரிய வங்கிக்கொள்ளை என்ற பெயரையும் அந்த நடவடிக்கை சம்பாதித்துக் கொண்டது.

'தமிழீழ இராணுவம்' (TEA) கச்சிதமாக மேற்கொண்ட நடவடிக்கையே அதுவாகும்.

மட்டக்களப்பில் உள்ள பன்குடாவெளியில் சில வீடுகளில் கொண்டுபோய் நகைகளை புதைத்து வைத்தனர்.

பொலிசாரின் தேடுதல் வேட்டையின் தீவிரம் குறையும் போது நகைகளை யாழ்ப்பாணத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் கொண்டு செல்வதுதான் நோக்கம்.

நகைகளை புதைத்து வைத்த வீடோன்றில் இருந்த பெண்மணிகளுக்கு ஒரு யோசனை. 'பெருந்தொகையாக புதைக்கப்பட்டுள்ள நகைகளில் ஒரு கொஞ்சம் எடுத்து விற்றுவிட்டால் என்ன?'

யோசனையை நிறைவேற்றினார்கள். தமிழீழ இராணுவத்தை சேர்ந்த சிலருக்கும் அந்த யோசனையில் பங்கிருந்தது.

செங்கலடியில் உள்ள நகைக்கடையில் நகைகளைக் கொடுத்து பணம் பெறப்பட்டது.

### தகவல் கசிந்தது.

இதற்கிடையே 'தமிழீழ இராணுவ' இயக்கத்தினரால் புதைத்துவைக்கப்பட்ட நகைகளில் பெரும்பகுதி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

ஒரு பகுதி நகைகள் மட்டும் தொடர்ந்தும் பன்குடாவெளியில் உள்ள இரு வீடுகளில் பொலித்தீன் பைகளில் போட்டு புதைக்கப்பட்டிருந்தன.


செங்கலடியில் நகைகளின் விற்பனை மூலமும், இரகசியத்தைப் பேண முடியாத இயக்க உள்நிலை காரணமாகவும் பொலிசாருக்கு தகவல் கசிந்துவிட்டது.

பன்குடாவெளியில் உள்ள வீடொன்றை ஏறாவூர் பொலிசார் சுற்றிவளைத்தனர். வீட்டுக்குள் தமிழீழ இராணுவ முக்கியஸ்தர் வரதன் சிக்கிக்கொண்டார்.

வளைவைத் தோண்டினார்கள்.

தோண்டத் தோண்ட தங்க நகைகள் வந்துகொண்டிருந்தன. பொலிசாரின் தீவிர கவனிப்பில் வரதன் தனக்குத் தெரிந்த தகவல்களையெல்லாம் ஒப்புவித்தார். பன்குடாவெளியில் மற்றொரு வீட்டில் புதைக்கப்பட்டிருந்த நகைகளும் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சங்கானையிலும் ஒரு வீட்டிலிருந்தும் நகைகள் கைப்பற்றப்பட்டன. மீண்டும் கைப்பற்றிய நகைகளின் பெறுமதி




12 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.

மீதி நகைகள் தமிழ் ஈழ இராணுவத்தால் தமிழ் நாட்டுக்கு கொண்டுசெல்லப்பட்டன.

### அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### ராஜபோகம்

வாகனங்கள், அலுவலகங்கள், தம்பாப்பிள்ளை மகேஸ்வரனின் உறவினர்களின் ஆதிக்கம் என்பவற்றின் மத்தியில் தமிழ் நாட்டில் ராஜபோகம் நடத்தியது தமிழீழ இராணுவம்.

கொள்கை, கோட்பாடு, இயக்கக் கட்டுப்பாடு என்பவை பற்றி துளியும் கவலைப்படாத இயக்கங்களில் தமிழீழ இராணுவமும் ஒன்று.

ஏற்கெனவே இருந்த கொஞ்ச நஞ்சக் கட்டுப்பாட்டையும் தீடிரென்று கிடைத்த வசதிகள் காற்றில் பறக்கச் செய்துவிட்டன.

இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். தமிழ் நாட்டில் கோடியக்கரையில் தமிழீழ இராணுவத்தின் முகாம் ஒன்று இருந்தது.

கடற்கரைக்கும் முகாமுக்கும் வாகனங்களில் மின்னல் வேகத்தில் பறந்து திரிவார்கள். பாடசாலைகள் விடும் நேரத்தில் என்றால் வேகம், வெட்டி ஓடும் லாவகம் மேலும் அதிகமாக இருக்கும்.

ஒரு நாள் அந்த விபரீதம் நடந்தது. கண்மண் தெரியாமல் வந்த தமிழீழ இராணுவ வாகனம் பாடசாலை சிறுவர்கள் மீது மோதியது. சிறுவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள்.

கத்திகள், பொல்லுகளோடு ஊரே திரண்டுவிட்டது. பொலிஸ் தலையிட்டு காப்பாற்றியது.

### பயங்கரத் திட்டம்

தமிழ் நாட்டில் இருந்த தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுக்கு பயங்கரமான திட்டம் ஒன்று மூளையில் உதித்தது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு வரும் 'ஏர் லங்கா' விமானத்தில் ஒரு குண்டை வைத்துவிட வேண்டும்.

குறித்த நேரத்தில் வெடிக்கும் (டைம் பாம்) அந்தக் குண்டு, விமானம் கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்கி, பயணிகள் வெளியேறிய பின்னர் வெடிக்கும்.

திட்டத்தை நிறைவேற்ற மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பணிபுரிந்த சிலரது உதவியும் பெறப்பட்டது.

ஏர் லங்காவில் பணியாற்றிய இந்தியாவைச் சேர்ந்த இருவரையும் கைக்குள் போட்டுக் கொண்டார்கள்.

பயணிகளின் பொதிகளோடு குண்டு வைக்கப்பட்ட சூட்கேசையும் சேர்த்துவிட வேண்டும். பொதிகளோடு பொதியாக அது விமானத்தில் கொழும்பு போய்ச் சேர்ந்து விடும்.

திட்டமிட்டபடி 1984 ஆகஸ்ட் இரண்டாம் திகதி சென்னை விமான நிலையத்திற்கு சூட்கேசில் குண்டு சென்றது.

பொதிகளோடு பொதியாக சூட்கேஸ் வைக்கப்பட்டு, விமானத்தில் ஏற்றப்படத் தயாரானது.

சுங்க அதிகாரிகளில் ஒருவருக்கு அந்த சூட்கேசில் சந்தேகம் வந்துவிட்டது.

சூட்கேசை எடுத்து வைத்துக் கொண்டு, அது யாருடையது என்று பயணிகளிடம் விசாரித்தார்.

யாரும் உரிமை கோரவில்லை.

### வந்தது ஆசை

அந்த சுங்க அதிகாரி சூட்கேசை தூக்கிக் கொண்டு தனது அறைக்குச் சென்றார்.

அவர் நினைத்திருந்தால் உடனடியாகவே சூட்கேசை திறந்து பரிசோதித்திருக்கலாம்.

## சுங்க அதிகாரியின் தங்க ஆசை!

செய்யவில்லை. அதற்கும் ஒரு காரணம் இருந்தது.

'சூட்கேசுக்குள் கடத்தல் தங்கம்தான் இருக்க வேண்டும். பாரமாக வேறு இருக்கிறது. மெல்ல அமுக்கிக் கொண்டால் என்ன?' என்று அந்த அதிகாரிக்கு ஆசை வந்துவிட்டது.

தனது காலடியில் மேசைக்கு கீழே சூட்கேசை பத்திரமாக வைத்துக் கொண்டார்.

சூட்கேஸ் கைமாறிவிட்டது. விமானத்தில் ஏற்றப்படவில்லை. சென்னை விமான நிலையத்துக்குள் வெடித்து விடப்போகிறது என்று தமிழ் ஈழ இராணுவ உறுப்பினர்களுக்கு விளங்கிவிட்டது.

பயணிகளை அனுப்ப வந்த பார்வையாளர்கள் போல நின்று அனைத்தையும் அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

விமான நிலையத்தை விட்டு வெளியே ஓடி, பொதுத் தொலைபேசி ஒன்றில் இருந்து விமான நிலையத்தோடு தொடர்பு கொண்டனர்.

"விமான நிலையத்தில் ஒரு சூட்கேசுக்குள் குண்டு இருக்கிறது. உடனே அப்புறப்படுத்துங்கள்."

என்று தொலைபேசியில் தகவல் சொன்னார்கள்.

'தங்கத்தை கடத்த முற்பட்டவர்கள் தான் கயிறு விடுகிறார்கள்' என்று நினைத்து சுங்க அதிகாரி அலட்சியமாக இருந்துவிட்டார்.

மறுபடியும் தொலைபேசியில் தகவல் சொன்னார்கள்.

'அனாமதேய மிரட்டல், வழக்கமான ஏமாற்று' என்று நினைத்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தம் பாட்டில் இருந்து விட்டனர்.

மூன்றாவது தடவை சூட்கேசின் நிறத்தையும் கூறி தகவல் சொல்லப்பட்டது.

### சந்தேகம்

தகவல் அறிந்த சுங்க அதிகாரிக்கும் 'உண்மையாக இருக்குமோ?' என்று சந்தேகம் வந்துவிட்டது. ஊழியர் ஒருவரை அழைத்து சூட்கேசை வெளியே கொண்டு செல்லுமாறு பணித்தார்.

சூட்கேசோடு ஊழியர் செல்ல, சுங்க அதிகாரியும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கூடவே சென்றனர்.

விமான நிலைய கட்டிடத்தை விட்டு அவர்கள் வெளியேற முன்னர்-

**குண்டு வெடித்தது!**
**பயங்கரமான சப்தம்!!**
**எங்கும் ஒரே புகை மூட்டம்.**
**கட்டிடம் இடிந்து வீழ்ந்தது.**
**இலங்கையர் உட்பட முப்பதுக்கு மேற்பட்டோர் பலியானார்கள். நூறுபேர் வரை காயமடைந்தனர்.**

தமிழ்நாடெங்கும் அதிர்ச்சி. தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். தீவிர புலன் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

ஈழப் போராளிகள் குண்டு வைத்திருப்பார்கள் என்று தமிழக மக்கள் நம்ப மறுத்தார்கள்.

தமிழக மக்களை பலியாக்கும் நடவடிக்கையை ஈழப் போராளிகள் ஒரு போதும் செய்யமாட்டார்கள், என்ற நம்பிக்கையும் அதற்குக் காரணமாகும்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல ஈ.பி.ஆர்.எல்.எஃப். சூட்டோடு சூடாக சென்னையில் சுவரொட்டிகளை ஒட்டியது.

**"மீனம்பாக்கம் வெடிகுண்டு**
**அமெரிக்க சி.ஐ.ஏயின் சதி.**
**தமிழக மக்களுக்கும் ஈழப் போராளிகளுக்கும் இடையே விரிசலை தூண்டும் முயற்சி"**

என்ற வாசகங்களோடு அந்தச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

இதே நேரம் எம்.ஜி.ஆரை இந்திய மத்திய அரசு தொடர்பு கொண்டது. மிக முக்கியமான செய்தியொன்றை அவர்கள் எம்.ஜி.ஆரின் காதில் போட்டார்கள்.

எம்.ஜி.ஆர். குழம்பிப் போனார்.

(தொடர்ந்து வரும்)

# ஏவுகணைகள்- சில தகவல்கள்




விமான எதிர்ப்பு 'ப்புளோ பைப்' ரக ஏவுகணை.

நவீன யுத்தத்தில் ஏவுகணைத் தொழில்நுட்பம் முக்கிய பாத்திரம் வகித்து வருகிறது.

ஜேர்மனியின் விஞ்ஞானி டாக்டர் வெணர் வொன் பிரேனிக் என்பவர்தான் ஏவுகணை யுகத்தை ஆரம்பித்து வைத்தவர். இவரை ஏவுகணையின் தந்தை என்று சொல்லலாம்.

ஏ1, ஏ2, ஏ3, ஏ4 என்ற பெயர்களில் ஹிட்லரின் ஜெர்மன் படை ஏவுகணைகளை வைத்திருந்தது. ஜெர்மன் படைகளிடம் இருந்த ஏவுகணைகளில் அதிக சக்தி வாய்ந்தது 'வி2' என்று பெயரிடப்பட்ட ஏவுகணையாகும். 2150 இறாத்தல் எடை கொண்ட வெடிபொருளை 200 மைல் தூரம் காவிச் சென்று, இலக்கைத் தாக்கக்கூடியது. இந்த ரக ஏவுகணைகள் மூலம் இலண்டன் நகர்மீது மட்டும் 1115 தடவைகள் 1944இல் தாக்குதல் நடத்தப்பட்டது.

1945ல் அணுகுண்டு தயாரிக்கும் வரை 'வி2' ரக ஏவுகணைதான் உலகில் அதி சக்தி வாய்ந்த ஆயுதமாக இருந்தது.

1945 மே மாதம் ஹிட்லரின் ஜெர்மனி வீழ்ச்சியடைந்தது.

அமெரிக்கப் படைகள், ஜெர்மன் எங்கும் சல்லடைபோட்டுத் தேடி 'வி2' ரக ஏவுகணைகளை உற்பத்தி செய்யக் கூடிய உதிரிப் பாகங்களை கைப்பற்றிக் கொண்டன. 'வி2' ஏவுகணைகள் தயாரிப்பதற்கான இரகசியக் குறிப்புக்கள் அடங்கிய ஆவணங்களையும் கைப்பற்றிக் கொண்டன. இவற்றின் எடை ஒரு தொன்வரை இருந்ததாம். 300க்கு மேற்பட்ட வாகனங்களில் எல்லாவற்றையும் பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்தது அமெரிக்கா.

சோவியத் யூனியனும் தனது பிடியில் வந்த ஜெர்மன் பகுதியில் தேடி 'வி2' ரக ஏவுகணைகளை எடுத்துக்கொண்டது. விஞ்ஞானிகள் சிலரையும் பிடித்துக் கொண்டது.

ஆரம்பகால ஏவுகணைகள் குறித்த இலக்குகளை துல்லியமாகத் தாக்குவதில் பல தவறுகளைச் செய்தன.

ஆனால், நவீன ஏவுகணைகள் கம்பியூட்டர் மூலமே கட்டுப்படுத்தப்பட்டு, இலக்குகளை துல்லியமாகத் தாக்கி அழிக்கக் கூடியவையாகும்.

ஆனால், இந்த ஏவுகணைகளை தடுத்து அழிக்கக்கூடிய ஏவுகணைகளும் பாவனையில் இருக்கின்றன.

நவீனரக ஏவுகணைகள் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

***(1)தரை-தரை ஏவுகணைகள்:-*** இவற்றில் நெடுந்தூர, நடுத்தர, குறுந்தூர ஏவுகணைகள் இருக்கின்றன. இவை அணு ஆயுதங்களையும் சுமந்து செல்லக்கூடியவை. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் என்று சொல்வது இவற்றைத்தான். நீர் மூழ்கிக் கப்பல்கள், யுத்தக் கப்பல்களில் இருந்தும் இவற்றை ஏவமுடியும்.

***(2)தரை-ஆகாய ஏவுகணைகள்:-*** விமானங்களை தாக்கியழிக்கவே இவை பயன்படுத்தப்படுகின்றன.

தரையில் வைத்து ஏவக்கூடிய ஏவுகணைகள், தோளில் வைத்து ஏவப்படும் சிறிய ரக ஏவுகணைகள் என்று பல்வேறு ரகங்களில் இருக்கின்றன. ராடர் மூலம் செலுத்தப்படும் ஏவுகணைகளும் இருக்கின்றன. கெரில்லாப் போர் முனைகளுக்கு தோளில் வைத்து ஏவப்படும் ஏவுகணைகளே ஏற்றவையாக உள்ளன.

இலக்கைத் தேடிக் கண்டுபிடிக்கும் மோப்ப சக்தியும் நவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு இருக்கிறது.

வெப்பத்தை நாடிச் செல்லக்கூடியவை. குறிப்பிட்ட டெசிபல்களுக்கு மேற்பட்ட ஒலியை நாடிச் செல்வன, குறிப்பிட்ட உலோகத்தை நாடிச் செல்வன என்று பல ரகங்களில் இருக்கின்றன.

தரையிலிருந்து தரைக்கு வரும் ஏவுகணைகளை சந்தித்து அழிக்கக்கூடிய தரை-ஆகாய ஏவுகணைகளும் இருக்கின்றன.

***(3) ஆகாய-தரை ஏவுகணை:-*** விமானங்களில் இருந்து தரையிலுள்ள இலக்குகளைத் தாக்க இவ்வகை ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன. இலக்கை தவறாகக் கணித்து ஏவினால் அது ஏவுகணையின் குற்றம் அல்ல.

***(4) ஆகாய-ஆகாய ஏவுகணைகள்:-*** இவை போர் விமானம் ஒன்றிலிருந்து மற்றொரு போர் விமானத்தை தாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

நம்நாட்டு யுத்த முனையில் படையினரால் ஆகாய-தரை ஏவுகணையும், புலிகளால்



விமான எதிர்ப்பு 'ஸ்டிங்கர்' ரக ஏவுகணை.

தரை-ஆகாய ஏவுகணையும் பயன்படுத்தப் பட்டுள்ளன. மோட்டாரில் இருந்து ஏவப்படும் ஷெல், பீரங்கியில் இருந்து ஏவப்படும் குண்டுகள் போன்றவை ஏவுகணை ரகத்தில் சேர்ந்தவையல்ல. அவை கனரக ஆயுத வகைகளைச் சேர்ந்தவையாகும்.

# எதிர் நோக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்!

அலசுவது – இராஜதந்திரி

**யா**ழ்குடாநாட்டின் இன்றைய நிலைமை மீண்டும் முருங்கையில் வேதாளம் ஏறிய கதையாக இருக்கும்போது 'வேதாளத்தீ' என்று பெயரிடப்பட்ட (Dragon fire) சிறியளவிலான இராணுவ நடவடிக்கையொன்று கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஓரிரு நாள் மோதலில் சுமார் 15 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகியிருந்தனர்.

இராணுவம் தனது ஆயத்த நிலையை வெளிப்படுத்துவதாகவும் எல்.ரி.ரி.ஈயினர் எதிர்பாராத விதத்தில் திடீர்த் தாக்குதலை மேற்கொள்வதுமாகவே இந்த 'வேதாளத்தீ' இராணுவ நடவடிக்கை விளங்கியிருந்தது.

'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்' வேலையாகவே வடபகுதியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் விளங்குகின்றன.

ஏற்கனவே 'முன்னேற்றப்பாய்ச்சல்' நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக யாழ்ப்பாண மக்கள் காணப்படுகின்றனர். இருப்பிடங்களை விட்டு வெளியேறியும், உயிர், உடமை இழப்புக்களுக்கு முகங்கொடுத்தவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

இதுதவிர வடக்கே உணவுக் கப்பல்கள் செல்லாமையால் அங்குள்ள நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. பொருட்களின் விலை விஷம்போல பல்மடங்கு உயர்ந்துள்ளது. இதுதவிர அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் பலமானதாகவே இருக்கின்றது.

வடக்கே பொருட் தட்டுப்பாடு, விலை உயர்வு என்பன புதிய விடயங்களல்ல; கடந்த பத்து வருடகாலமாகவே இத்தகைய பாதிப்பு நிலை நிலவுகின்றது.

முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் நேரடியாகவே 'குரல்வளை'யை நெரிப்பது போல வடக்கே தடைகளை விதித்து மோசமான கட்டுப்பாட்டு நிலமையை ஏற்படுத்தி விட்டிருந்தனர்.

ஆனால் சந்திரிகா ஆட்சியாளர்கள் கடந்த ஆண்டு பதவிக்கு வந்ததையடுத்து வடபகுதி மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதில் அக்கறை காட்டி, வடபகுதிக்கு கொண்டு செல்வதற்குத் தடுக்கப்பட்டிருந்த பொருட்கள் பலவற்றை வடக்கே மீண்டும் கொண்டுசெல்ல அனுமதித்திருந்த வேளை, மீளவும் போர் மூண்டது. இதனையடுத்து வடபகுதியில் அனைத்துமே பழைய பயங்கர நிலைக்குத் திரும்பியுள்ளன.

வடக்கே கடந்த பத்து வருடகால யுத்தத்தில் பொதுமக்கள், அதாவது நிராயுதபாணிகளான அப்பாவி மக்களைத் தகுந்த வகையில் எந்தவொரு சக்தியாலும் பாதுகாக்க முடியாத சூழ்நிலைகளே காணப்படுகின்றன.

1990ம் ஆண்டு 'ஈழப்போர்-02' என்ற இலங்கைப் படையினருக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையே ஆரம்பமான மோதல், நிலவரத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ( International Committee of Red Cross) வடக்கே தனது பணிகளை ஆரம்பித்திருந்தது.

உலகில் மோதல் நிலவரங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் உச்சக்கட்டத்தையடைந்து பெருமளவிலான சேதங்கள் தோன்றும் பகுதிகளிலேயே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பணிகளை ஆரம்பிக்கின்றது.

இந்நிலையில் பொது மக்களின் உயிர், உடமைகளுக்கான பாதுகாப்பு மற்றும் அவர்களின் உணவு, மருந்து விநியோகம் ஆகியனவற்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே பொறுப்பேற்கின்றது.

சர்வதேச ரீதியாக செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கின்றன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும் யுத்தப் பிரதேசங்களில் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி நாதியற்றுள்ள மக்களுக்கு ஓரளவு ஆற்றலைத் தருபவையாகவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் அதையொத்த ஏனைய சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் என்பன விளங்குகின்றன.

இன்று வடபகுதியைப் பொறுத்தவரையில் கூட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே(ICRC) அங்கே நிலவும் பாதகமான நிலைமைகளில் பொதுமக்களுக்கு ஆறுதலைத் தருவதாக இருக்கின்றது.

ஆயினும் அதன் நடவடிக்கைகளிலும் குறுக்கீடுகள் ஏற்பட்டு, வடபகுதிக்கான உணவு, மருத்துவ விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

இன்று வடபகுதியைப் பொறுத்தவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கையே அப்பிரதேச மக்களின் உயிரோட்டமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளில் குறுக்கீடுகள் தோன்றுவதென்பது உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளிக்கு வழங்கப்பட்டுள்ள 'பிராணவாயு'வைத் தடுப்பது போன்ற நடவடிக்கையாகவே அமையும்.

இருமாதங்களுக்கு முன்னர் காங்கேசன்துறை துறைமுகத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் விநியோகப் பணிகளில் ஈடுபட்டிருந்த விநியோகக் கப்பலொன்று தாக்குதலுக்குள்ளாகி, அதன் மாலுமி ஒருவரும் காணாமல் போயிருந்தார்.

இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வடபகுதிக்கான தனது விநியோகப் பணிகளை இடை நிறுத்தியிருந்தது.

இந்நிலையில் வடக்கே செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளை மீள ஆரம்பிப்பதிலேயே இழுபறி நிலை தோன்றியிருந்தது.

சர்வதேச ரீதியாக மோதல்கள் இடம்பெறும் பகுதிகளை நோக்குமிடத்து, இராணுவ நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும் பிராந்தியங்களில் கடல், ஆகாய, தரைமார்க்கமாக 'சிவிலியன்' போக்குவரத்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டியது அவசியமானதாகின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் வளைகுடா யுத்தம் மூண்டிருந்தபோது, வளைகுடா கடல் பகுதியில் எண்ணெய்க் கப்பல்கள், சரக்குக் கப்பல்கள் என்பன பயணஞ் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்தது.

இதுதவிர வளைகுடா ஆகாயப் பரப்பிலும் விமானங்கள் செல்வது தடைசெய்யப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஒரு யுத்தவலயம் என்று காணப்படும் பிரதேசத்தில் சிவிலியன் கப்பல்களோ, விமானங்களோ நடமாடுவது அபாயகரமான விளைவுகளையே ஏற்படுத்துவதாக இருக்கும்.

யுத்தத்தில் ஈடுபட்டிருப்போர் எதனையும் சந்தேகக் கண்ணுடன் நோக்கும் தன்மைகளே யுத்தப் பிரதேசங்களில் காணப்படுகின்றன. எனவே விமானங்கள், கப்பல்கள் என்பன கூட சந்தேகத்திற்குள்ளாகும் பட்சத்தில் ஆபத்தை எதிர்நோக்குகின்றன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் 'ஸீ டான்ஸர்' (Sea Dancer) என்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க விநியோகக் கப்பல் தாக்குதலுக்குள்ளாகியிருந்தமை கூட யுத்தப் பிரதேசமொன்றில் அபாயகரமான சூழ்நிலையையே புலப்படுத்துகின்றது.

காங்கேசன்துறைத் துறைமுகம் முழு அளவில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு பகுதியாகும்.

இங்கே ஒருதடவை மட்டுமல்ல பல தடவைகள் படையினரின் கப்பல்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. இறுதியாக 'எடிதாரா' என்று கடற்படையினரின் ஆணையிடும் கப்பலொன்று கூட எல்.ரி.ரி.ஈ யினரால் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் வைத்து மூழ்கடிக்கப்பட்டிருந்தது.

எனவே காங்கேசன்துறைத் துறைமுகம் ஒரு யுத்தவலயமாக இருக்கும் தறுவாயில் அங்கே சிவிலியன் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கப்பலும் அச்சுறுத்தலை எதிர்நோக்கவே செய்யும்.

இவ்வகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் இராணுவ வலயமாக உள்ள பகுதிகளுக்கு ஊடாக செல்ல வேண்டுமென எதிர்பார்ப்பது விஷமத்தனமானதாகவே இருக்கும்.

வடபகுதி மக்களுக்கான உணவு விநியோகத்தை கடல் மார்க்கமாக மட்டுமே மேற்கொள்ள முடிகின்றது. தரை மார்க்கமாகவோ அல்லது ஆகாயமார்க்கமாகவோ எவ்வகையிலும் விநியோகங்களை மேற்கொள்ள முடியாத தன்மை நிலவுகின்றது.

எனவே பொதுமக்களின் பாதுகாப்பு, பொதுமக்களின் நலன் என்று கரிசனைகாட்டுவோர், முற்றுமுழுதாக சிவிலியன் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நிறுவனத்தை, பொதுமக்கள் சேவையில் ஈடுபடவே அனுமதிக்க வேண்டும்.

எவ்வகையிலும் அதன் நடவடிக்கைகளில் குறுக்கிடவோ அல்லது பேரம் பேசவோ முயலக்கூடாது.

வடபகுதியில் தற்போது முழு அளவிலான போர் மூண்டுள்ளது. இது உலகறிந்த விடயம்; எல்.ரி.ரி.ஈயினரும் தம்மை ஓர் இராணுவ அமைப்பாக கடலிலும் தரையிலும் பெரும் பலத்துடன் கட்டி எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில் கடல், தரைமார்க்கமாகப் பாதுகாப்புப் படை மையங்களை முற்றுகையிடுவது, அங்கே விநியோகங்கள் மேற்கொள்ளப்படுவதை தடுத்து நிறுத்துவது போன்ற முயற்சிகளில் எல்.ரி.ரி.ஈயினர் முனைப்பாகவே இருப்பர்.

இத்தகைய நடவடிக்கைகள் அவர்களது யுத்த தந்திரங்களுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

மறுபுறத்தே ஆயுதப் படையினர்கூட எல்.ரி.ரி.ஈயினரின் நடமாட்டங்களைக் கவனிப்பவர்களாகவும், அவர்கள் தம்மீது மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு அச்சுறுத்தலையும் முறியடிப்பதில் தயார் நிலையிலுமே இருப்பார்கள்.

எனவே யுத்த வலயமாக உள்ள காங்கேசன்துறைப் பகுதிக்குச் செல்லும் எந்தவொரு கப்பலும், கடற்படைக் கப்பலாக அல்லது படையினருக்கு விநியோகங்களை மேற்கொள்ளும் கப்பலாகவே எல்.ரி.ரி.ஈயினரால் கருதப்படும்.

இந்நிலையில் திடீர்த்தாக்குதல்களை எந் நேரத்திலும் எதிர்பார்த்திருக்க வேண்டியதாகின்றது.

ஆகவே பொதுமக்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ளும் கப்பல்களை, பொதுமக்களுக்கான பணியில் முற்றுமுழுதாக ஈடுபட அனுமதிப்பது இன்றியமையாததாகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெறுமனே உணவு மற்றும் மருத்துவ விநியோகங்களில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. வடக்கே இருந்து தெற்கே நோயாளிகளைக் கொண்டுவருவது போன்ற நடவடிக்கைகளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டிருந்தது.

இந்நிலையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளின் இடைநிறுத்தம் என்பது போரினாலும் ஏனைய அவலங்களினாலும் துவண்டு போயிருக்கும் வடபகுதி மக்களை தொடர்ந்து புண்படுத்துவதாகவே அமையும்.

வடக்கு - கிழக்கில் உள்ள படையினரின் விநியோக நடவடிக்கைகளுக்கென்றே கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி மூன்று ரஷ்ய அன்டநோவ் (Antanov) போக்குவரத்து விமானங்களை இலங்கை அரசு அண்மையில் வாங்கியிருந்தது.

எனவே படையினரின் அத்தியாவசியப் பணிகளுக்கென இவ்வாறு இராட்சத விமானங்களை வைத்துக் கொண்டுள்ள நிலையிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினை படையினருக்கும் விநியோகங்களை மேற்கொள்ள வேண்டுமென அரச தரப்பினர் எதிர்பார்க்க முடியாது.

இதே வேளை வடக்கே படையினரிடன் கப்பல்கள், விமானங்களை குறி வைத்து நிற்கும் எல்.ரி.ரி.ஈயினரும் படையினரின் கப்பல்களையும், சிவிலியன் கப்பல்களையும் வேறுபடுத்தித் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

வடபகுதி பொதுமக்களுக்கு கப்பல் மார்க்கமான விநியோகத்தைத் தவிர வேறு மார்க்கங்களில் பெருமளவிலான விநியோகத்தை மேற்கொள்ள முடியாதென்பதை எல்.ரி.ரி.ஈயினர் உணர வேண்டியவர்களாகின்றனர்.

ஆகவே பொதுமக்களுக்கென வரும் விநியோகக் கப்பல்களை விரைந்தும், சுமுகமாகவும் போக்குவரத்துச் செய்ய அனுமதிப்பதில் எல்.ரி.ரி.ஈயினரது ஒத்துழைப்பும் இன்றியமையாததாகின்றது.

இல்லையேல் வடபகுதி மக்கள் உயிர் வாழ்வதை உறுதிசெய்ய உலகில் எவருமே இல்லாத நிலையே தோன்றிவிடும்.





## பொது மக்கள் சேவையில் படையினரோ எல்.ரி.ரி.ஈயினரோ குறுக்கிடுவது முறையாகாது!




## ஆயுத மாதிரிகளோடு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

★ மோட்டார்கள், துப்பாக்கிகள் போன்று வடிவமைக்கப்பட்ட ஆயுதங்களோடு அவுஸ்திரேலியாவில் புலிகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம்.



★ கனடாவில் உள்ள புலிகளின் கிளையால் மேள தாளங்களோடு நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலக் காட்சி.





விஞ்ஞான விந்தையால் கொலையாளி சிக்கிய உண்மைக் கதை

**சென்ற வாரம்**

**1978ம்** ஆண்டு, காண்டிஸ் வில்லியம்ஸ் என்னும் இளம் பெண் இலண்டன் பேர்மிங்ஹாமில் உள்ள 12வது மாடிக் கட்டிடத்தில் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டாள்.

இலண்டன் உளவுத்துறை கொலையாளியைத் தேடி மோப்பம் பிடித்தது.

மரண விசாரணை அறிக்கையில் கொலையான பெண், இறுதியாக பீச்பழம் சாப்பிட்டிருக்கிறாள் என்று சொல்லப்பட்டிருந்தது.

பாற்றிக் ஹாசெற் என்னும் இளைஞன் மீது உளவுத்துறையின் கழுகுப்பார்வை விழுந்தது. அவனது நடவடிக்கைகள் நிழலாகத் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன.

இனி...

# 2 யார் குற்றவாளி?

**உ**ளவுத்துறை அதிகாரி ஜேம்ஸ் சற்றே எரிச்சலடைந்தார். தனது மேசைமீதிருந்த பேப்பர் வெயிட்டை விரல்களால் உருட்டிக் கொண்டிருந்தார்.

அவர் எதிரே கைகளை மார்புக்குக் குறுக்காக கட்டிக் கொண்டு, பணிவான தோரணையில் நின்று கொண்டிருந்தவன் பழ வியாபாரி.

காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை செய்யப்பட்ட மொன்ற் பெலியர் வீதியில் பழ வியாபாரம் செய்பவன் அவன்.

1978 ஜூன் 24ம் திகதிதான் காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை செய்யப்பட்டாள். அவள் இறுதியாக சாப்பிட்டது பீச்பழம்.

பீச்பழ வியாபாரிகளை உளவுத்துறையினர் துருவியதில் இவன் மட்டுமே உபயோகமான தகவல்களைச் சொன்னான். அப்படியே கொண்டுவந்து, அதிகாரி ஜேம்ஸ் முன்னால் நிறுத்தி விட்டார்கள்.

"எத்தனை பழங்கள் வாங்கினான்?" என்றார் ஜேம்ஸ்.

"2 பழங்கள்."

"எத்தனையோ பேர் பழம் வாங்க வருவார்கள். ஒரு இளைஞனை மட்டும் எப்படிக் குறிப்பாக நினைவு வைத்திருக்கிறாய்?"

"அவன் எனது மகனின் . சாயலில் இருந்தான். முதலில் எனது மகன்தான் வருகிறானோ என்று நினைத்தேன். உருவ ஒற்றுமை அந்தமாதிரி இருந்தது."

"உன் மனைவியைத் தவிர வேறு யாரையாவது நீ...?"

"அய்யயோ... அப்படியெல்லாம் என்னை நினைத்து விடாதீர்கள் சேர்."

ஜேம்ஸ் தனது சக அதிகாரி மாட்டினைப் பார்த்தார்.

"இவரது மகனை உடனே இங்கே வரவழையுங்கள்?"

பழ வியாபாரி பயந்து போனான்.

"சேர்.. என் மகன் ஒன்றுமறியாதவன். வாய்க்குள் விரலை வைத்தால்கூட கடிக்கத் தெரியாதவன்."

"விசாரிக்க அழைக்கவில்லை. இது வேறு ஒரு தேவைக்கு."

"தாங்யூ சேர்! அவன் பழங்களை வாங்கிக்கொண்டு, என் கடைக்கு சற்றுத் தூரத்தில் நின்ற இளம் பெண் ஒருவரிடம் சென்று ஏதோ பேசினான். பின்னர் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டு சென்றுவிட்டான்."

"எந்தப் பக்கமாகச் சென்றான்?"

"12 மாடிக் கட்டிடம் உள்ள பக்கமாக."

"ஓ...! அந்த இளம் பெண்ணை கவனித்தாயா?"

"முகம் சரியாகத் தெரியவில்லை. சற்றுக் குள்ளமாக இருந்தாள். தலைமுடி சுருள் சுருளாக இருந்தது."

ஜேம்ஸ் ஒரு சிகரெட் பற்றவைத்துக் கொண்டார். பழ வியாபாரியின் மகன் அழைத்து வரப்பட்டான்.

"மாட்டின்! நாம் சந்தேகிக்கும் பேர் வழிகளில் கிட்டத்தட்ட இவனைப் போலவே இருப்பது யார் என்று...?"

"இருக்கிறான்... பெயர் பாற்றிக் ஹாசெட். குடிகாரப்பயல். முரடன். பெண்கள் விஷயத்தில் சபலம் அதிகம். ஒரு காதலி இருக்கிறாள். பெயர், பமேலா. அவள் மட்டும் போதாது அவனுக்கு. கண்காணிக்கப்படுகிறான்."



பாற்றிக்கின் காதலி பமேலா

"குட்! கண்காணித்தது போதும். கொண்டு வாருங்கள். அடையாள அணிவகுப்பு நடத்திப் பார்க்கலாம். இதுவரை எத்தனை பேர் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள் மாட்டின்?"

"3000 பேர் வரை விசாரிக்கப் பட்டுள்ளனர். பாற்றிக் மீது மட்டுமே சந்தேகம் அதிகமாக இருக்கிறது."

"பாற்றிக் உட்பட பதினைந்து பேரை நிறுத்தி அடையாள அணிவகுப்பு நடத்துங்கள். முக்கிய அடையாளம் காட்டப் போவது பழ வியாபாரி."

"ஓ.கே.. சேர்!"

***

**பா**ற்றிக் ஹாசெட் கைது செய்யப் பட்டான். பாற்றிக் உட்பட பதினைந்து பேரை அடையாள அணிவகுப்புக்காக நிறுத்தினார்கள்.

அடையாளம் காட்ட 100 பேர் அழைக்கப் பட்டார்கள். 99 பேர் யாரையும் அடையாளம் காட்டவில்லை.

பழ வியாபாரி மட்டும் பாற்றிக்கை நோக்கி சுட்டுவிரல் நீட்டி, உறுதியான குரலில், "இவன்தான்!"

என்றான்.

பாற்றிக் விசாரிக்கப்பட்டான்.

"இனிய இளைஞனே! உதைபட்டுச் சாகாமல் உண்மையைச் சொல்லிவிடு. காண்டிஸ் வில்லியம்ஸ்ஸை ஏன் கொன்றாய்?"

பாற்றிக் நிமிர்ந்து ஜேம்ஸ்சைப் பார்த்து, முகத்தில் ஆச்சரிய ரேகைகளை உற்பத்தி செய்து விட்டுக் கேட்டான்,

"என்ன பெயர்... ஆ... காண்டிஸ் வில்லியம்ஸ்... நல்ல பெயர், யார் அது ..?"

ஜேம்ஸின் முகம் இறுகியது. பாற்றிக்கின் தலைமுடியை தனது இடது கரத்தால் கொத்தாகப் பிடித்து உலுக்கினார்.

"விளையாடாதே பையா!

பீச் பழம் ஒன்று தருகிறேன் சாப்பிடுகிறாயா?"

"பீச் பழமா? எனக்கு பிடிக்காத பழங்களில் அதுவும் ஒன்று. நல்ல ஆப்பிள் பழம் இருந்தால் கொடுங்கள்."

"இந்தா ஆப்பிள்!"

ஜேம்ஸ் தனது காலை மடக்கி முழங்காலால் அவன் வயிற்றில் உதைத்தார். வலியில் முனகி, மடங்கி நிலத்தில் அமர்ந்தான்.

ஜேம்ஸ் அந்த விசாரணை அறையை விட்டு வெளியே வந்தார். வெளியே மருத்துவ பகுப்பாய்வாளர் காத்திருந்தார்.

பாற்றிக்கின் மார்பில் இருந்து எடுத்த முடியையும், அவனது எச்சிலையும் மருத்துவ பகுப்பாய்வுக்கு அனுப்பியிருந்தார்.

காண்டிஸ் வில்லியம்ஸின் அருகில் கிடந்த கொலைகாரனின் முடியோடும், எச்சில் தடயத்தோடும் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தார் பகுப்பாய்வாளர். முடிவைச் சொல்லவே இப்போது வந்து காத்திருந்தார்.

"என்ன சரியாக இருந்ததா?"

ஜேம்ஸ் கேட்டார். பகுப்பாய்வாளர் முகத்தில் ஏமாற்றம்.

"பயனில்லை!" என்றார்.

ஜேம்ஸ் முகம் சுருக்கினார்.

***

**"வி**டுதலை செய்துவிட்டார்கள். குற்றவாளியை தப்பவிட்டு, அப்பாவிகளை பதம் பார்ப்பதே பொலிஸின் வாடிக்கையாகி விட்டது."

என்றார் பாற்றிக். அவன் சொன்னதை நம்பமாட்டாதவளாக பமேலா புருவம் உயர்த்தினாள்.

"24ம் திகதி என்னோடு தங்கியிருந்ததாக பொலிசுக்கு ஏன் பொய் சொன்னாய்? உன்னைக் காப்பாற்றுவதற்காக நானும் உனது பொய்யை உறுதிசெய்ய வேண்டியதாகி விட்டது. சொல் பாற்றிக், எதற்கு அந்தப் பொய்?"

பாற்றிக் கண்களை இடுக்கிக் கொண்டு சிரித்தான்.

"உண்மைகளை அப்படியே சொன்னால் பொலிஸ் நம்பாது பமேலா. சில ஜோடனைகளும் அவசியம்."

பாற்றிக் சொன்னதை பமேலா முழுமையாக நம்ப மறுத்தாள். எனினும் பாற்றிக் அன்றைய குளிருக்கு அவளுக்குத் தேவைப் பட்டாள்.

பாற்றிக் நெருங்கி பமேலாவை தூக்கிக் கொண்டு, படுக்கை அறைக்குள் புகுந்தான்.

கட்டிலில் அவளைப் பொத்தென்று போட்டுவிட்டு, "போகவா... இங்கேயே தங்கிக் கொள்ளவா?"

என்றான். பமேலா எழுந்து, அவன் சட்டையில் பிடித்து, "தங்கிக்கொள், தாங்கிக் கொள்கிறேன்." என்றாள்.

***

**1983ம்** ஆண்டு

காண்டிஸ் வில்லியம்ஸ் என்னும் இளம் பெண் கொல்லப்பட்டதை மெல்ல, மெல்ல மறக்க வைத்த 5 ஆண்டுகள்.

பாற்றிக் முகத்தில் இப்போது சற்று முதிர்ச்சி. தாடி வளர்த்திருந்தான்; சிறையில் இருந்தான்.

இளம் பெண் ஒருத்தியை கற்பழிக்க முயன்ற போது பொலிசில் மாட்டினான். 18 மாத சிறைத் தண்டனை அனுபவித்தான். இன்றுதான் அது முடியும் நாள்.

பாற்றிக்கின் காதலி பமேலாவுக்கு கடந்த ஐந்து வருடங்களாகச் சில சந்தேகங்கள். நேராக பொலிஸ் நிலையத்துக்குச் சென்றாள்.

"காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை பற்றி சில தகவல்களைச் சொல்ல வேண்டும்" என்றாள்.

காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை பற்றியே அநேகமாக மறந்திருந்த பொலிஸ், உஷாராகி, காண்டிஸ் கொலை விசாரணை ஆவணங்களை தூசு தட்டி எடுத்துக் கொண்டு வந்தது.

பமேலா தனது சந்தேகங்களை சொல்லத் தொடங்கினாள்.

அதே நேரம் 18 மாத சிறைத்தண்டனை முடித்துவிட்டு, சிறையில் இருந்து வெளியே வந்த பாற்றிக் பமேலாவின் வீட்டில் போய் அவளுக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

(அடுத்த வாரம் முடிவு)

தருவது ரசிகன்

# ஹலோ டாக்டர்

## மாரடைப்பைத் தடுக்க முடியுமா?

**"வ**ணக்கம் டாக்டர். இதயத்தை மாற்றும் சிகிச்சை பற்றி டாக்டரிடம் கேட்டாயே, மாரடைப்பு ஒரு பொல்லாத நோய் ஆயிற்றே. அதுபற்றியும் கேட்டுச் சொல் என்கிறார்கள் நண்பர்கள்."

"கேட்கலாமே!"

"மாரடைப்பை தவிர்க்க முடியுமா டாக்டர்?"

"வாய்ப்பைக் குறைக்க முடியும்!"

"எப்படி?"

"புகை பிடிப்பவராக இருந்தால் அதனைக் கைவிட வேண்டும். இரத்தக் குழாயின் உள் சுவர்கள் தடிப்பதற்கு புகையும் ஒரு காரணம். அதைப் போலவே கொழுப்பு அதிகமாகவுள்ள உணவு வகைகளையும் தவிர்ப்பது அவசியம். முட்டை, பாலாடை, மற்றும் பால் சம்பந்தப்பட்ட பொருட்களைத் தவிர்ப்பது நல்லது. ஓடுதல், சைக்கிள் ஓடுதல், நீச்சல் போன்ற உடற்பயிற்சிகள் கைகொடுக்கக் கூடியவை."

"ஒரு முறை மாரடைப்பு வந்தால் மீண்டும் பழைய நிலைக்கு வரமுடியாதா டாக்டர்?"

"முடியும். ஆனால் அதிகமாக உடல் இயக்கம் தேவைப்படும் வேலைகளில் உடனடியாக இறங்கக் கூடாது. தாம்பத்திய உறவையும் மாரடைப்பு வந்து சுகமாகி ஒரு மாதத்தின் பின்னரே வைத்துக் கொள்வது நல்லது."

"ஒரு மாதம் சுத்த சைவமாக இருக்க வேண்டும் என்கிறீர்கள்; புகை பிடிக்கக் கூடாது என்கிறீர்கள்; மது விடயத்தில் எப்படி?"

"மதுவைவிட புகை ஆபத்து என்று சொல்கிறேன். அதற்காக மது நல்லது என்று அர்த்தமல்ல. ஒரு வாரத்திற்கு 21 யூனிட் மது அருந்தலாம். பாதகம் இல்லை."

"21 யூனிட் என்றால்...?"

"31 மில்லி! நாளொன்றுக்கு மூன்று யூனிட்டுக்கு மேல் அருந்தக் கூடாது. இன்னொன்று தெரியுமா? கோபம், பயம், துக்கம் என்பவையும் இருதய நோய்களை வரவழைத்து விடுகின்றன. அதுமட்டுமல்ல, அதிகமாக கோபம் வரும்போது அதை அடக்கிக் கொண்டாலும் இதய நோய் வந்து விட வாய்ப்புண்டு."

"இதென்ன டாக்டர், பெரிய சிக்கலாக இருக்கிறதே?"

"சிக்கல் ஒன்றுமில்லை. கோபம், துக்கம் போன்ற உணர்ச்சிகளுக்கு இலகுவில் சிக்கிக் கொள்ளாமலிருக்க காலையில் தியானம், மூச்சுப் பயிற்சி போன்றவற்றில் ஈடுபடலாம்."

"இதய நோய்களை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியுமா டாக்டர்?"

"முடியும். ஒரு சில நோய்களை மருந்துகளால் குணப்படுத்த முடியும். சில நோய்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப் படுகிறது. வால்வு குறைபாடுகளை



வால்வுகளை மாற்றுவது மூலம் சரி செய்யலாம். இரத்தக் குழாய் அடைப்புக்களை பலூன் முறையை பயன்படுத்தி நீக்கி விடலாம். வேறு சில நவீன கருவிகளும் இதற்கு வந்து விட்டன. நிமிடத்திற்கு 20 ஆயிரம் தடவைகள் சுழலும் ட்றில் (Drill) மூலம் இந்த அடைப்புக்களை சுரண்டி எடுத்து விட முடியும்."

"இருதய நோய்களுக்கு ஆஸ்பிரின் நல்லதா டாக்டர்?"

"ஆஸ்பிரின் இரத்தம் கட்டியாவதைத் தடுக்கிறது. ஒரு முறை மாரடைப்பு வந்தவர்களுக்கு தினசரி ஆஸ்பிரின் கொடுத்து வந்தால் அடுத்த தடவை மாரடைப்பு வருவது 50% குறைய வாய்ப்புண்டு. எனினும் டாக்டரின் ஆலோசனையோடு பாவிப்பதுதான் நல்லது."

"ஒருவர் மாரடைப்பில் இறந்தார் என்றால் உடனே இது மூன்றாவது மாரடைப்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களே டாக்டர். அதில் ஏதாவது உண்மை உண்டா?"

"நீண்ட காலமாக பேசப்படும் பொய் அது. முதல் மாரடைப்பில் உயிர் விடுகிறவர்களும் உண்டு. மூன்று மாரடைப்பின் பின்னர் நீண்ட காலம் உயிர் வாழ்பவர்களும் உண்டு. எவ்வளவு தூரம் இதயம் பாதிக்கப் படுகிறது என்பதை வைத்தே எதையும் தீர்மானிக்க முடியும்."

"மாரடைப்பு வர வாய்ப்பிருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பது டாக்டர்?"

"ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது நெஞ்சுவலி வந்தால், வந்து போனால் அப்படி ஒரு வாய்ப்பு இருப்பதாகக் கருதலாம். படிக்கட்டுகளில் ஏறும்போது நெஞ்சுவலித்தாலும் டாக்டரை அணுகிப் பரிசோதிப்பது நல்லது."

"இன்று இவை போதும் டாக்டர். மெத்தப் பெரிய நன்றி."

# சிறையில் ஒரு தப்பு

**'சி**றைச்சாலை பஞ்சு மெத்தை' என்று சொல்வதை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

சிறையில் போடுவதால் தம்மை மிரட்ட முடியாது என்று சொல்வதற்காகத்தான் அரசியல்வாதிகள் அப்படி பேசுவது வழக்கம்.

ஆனால், சிறைச்சாலையை பஞ்சுமெத்தையாகவே மாற்றிவிட்டார் ஒருவர். அவரது பெயர் டெர்ரி.

தனது மனைவியை கோபத்தில் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டார் டெர்ரி.

"அடப்பாவி மனுசா, இந்தா ஆயுள் தண்டனை" என்று சிறையில் போட்டுவிட்டது நீதிமன்றம்.

சிறையில் வாடிய டெர்ரிக்கு முதல் மூன்று வருடம் முட்படுக்கையில் கிடப்பது போலவே இருந்தது.

மூன்று வருடத்தின் பின்னர்தான் மாறியது நிலவரம்.

சிறையில் இருந்த டெர்ரியைச் சந்திக்க வந்தாள் அவனது முன்னாள் காதலி கோத்ரின்.

மூன்று வருடமாக நல்ல பிள்ளையாக இருந்தமையால் டெர்ரிக்கு சிறையில் நல்ல பெயர். பார்வையாளர் அறையில் வைத்து காதலியைச் சந்திக்க அனுமதி கிடைத்தது.

அந்த அனுமதி கிடைத்து சில மாதங்களின் பின்னர் ஒரு பத்திரிகையில் கோத்ரின் கொடுத்த பேட்டியொன்று லண்டனையே கலக்கிவிட்டது. சிறை நிர்வாகம் அலறியடித்துக்கொண்டு ஓடித்திரிந்தது.

அப்படி என்னதான் சொன்னாள் கோத்ரின்.

"குவா...குவா....சத்தம் கேட்கப்போகிறது. அதாகப்பட்டது நான் அம்மாவாகப் போகிறேன். அப்பா யார் தெரியுமா? சிறையில் இருக்கிறாரே டெர்ரி; அவரேதான்!"



சிறையில் இருக்கும் டெர்ரி எப்படி அப்பாவாக முடியும்.

சிறையில் டெர்ரியிடம் சிறை நிர்வாகம் கேட்டது; "அவள் சொல்வது பொய்தானே?" டெர்ரி நிதானமாகச் சொன்ன பதில் என்ன தெரியுமோ? "பொய்யே அல்ல, கலப்படமில்லாத உண்மை!"

விஷயம் வேகமாகப் பரவி, சிறைச்சாலைகளில் என்ன நடக்கிறது என்று எல்லோரும் கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

தலைமுடியைப் பிய்த்துக் கொண்ட சிறை நிர்வாகம் 'தப்பு எங்கே நடந்திருக்கிறது' என்பதை ஒரு வழியாக கண்டுபிடித்துவிட்டது.

சிறைச்சாலையின் பார்வையாளர் அறையில் உள்ள மேஜைகளை தடுப்பாகப் பாவித்துத்தான் தப்பு அரங்கேறியிருக்கிறதாம்.

இப்போது விதிகளை கடுமையாக்கி விட்டார்கள். சிறைக் கைதிகளை பெண்கள் சந்திக்க வந்தால் எலியைப் பூனை பார்ப்பதுபோல கவனிக்கிறார்களாம் காவலர்கள்.

இப்போது சொல்லுங்கள், சிறைச்சாலை பஞ்சு மெத்தை என்று டெர்ரி சொன்னால் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்.

ஸ்போர்ட்ஸ்

# வயது 30 சாதனை 35

ஒரு தடவை, இரு தடவையல்ல, 35 தடவைகள் சாதனை புரிந்திருக்கிறார். அவரது பெயர், செர்ஜி புப்கா. 30 வயதுதான். அழகான இளைஞன். கம்பு ஊன்றி உயரம் தாண்டுதலில்தான் 35 தடவைகள் சாதனை படைத்திருக்கிறார்.

ஜெர்மனில் வசிக்கும் செர்ஜி புப்கா 1984இல் சாதனை படைக்க ஆரம் பித்தார். அப்போது அவர் தாண்டிய உயரம் 5 மீட்டர் 85 செ.மீ.

பின்னர் அதே சாதனையை அவரே உடைத்தார். உடைத்ததை மீண்டும் உடைத்தார். உடைத்துக்கொண்டேயிருக்கிறார்.

6 மீட்டர் 30 செ.மீட்டர் உயரத்தைத் தாண்டுவதே தனது இலட்சியம் என்கிறார் செர்ஜி புப்கா.

1994ம் ஆண்டு இவரை கடந்த பத்தாண்டின் சிறந்த வீரர் என்று தெரிவு செய்தார்கள். நான்கு தடவை உலக சாம்பியன் பட்டத்தை வென்றவர் என்ற பெருமையும் இவருக்கு இருக்கிறது.



செர்ஜி புப்கா சாதனை மட்டும் படைக்கவில்லை. சம்பாதித்தும் தள்ளுகிறார். ஒரு போட்டியில் கலந்து கொண்டு அவர் கம்பைத் தொட வேண்டுமானால் 50 ஆயிரம் ரூபாவை சுளையாக எண்ணிக் கொடுத்துவிட வேண்டும்.




## என்ன பெயர் வைக்கலாம்?

கொரில்லா ரக குரங்குகள் ஒரு தடவையில் ஒரே ஒரு குட்டிதான் ஈன்று தருவது வழக்கம். நியூயோர்க்கிலுள்ள புளொன்ஸ் மிருகக்காட்சிச் சாலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. கொரில்லா அம்மாவுக்கு ஒரே பிரசவத்தில் இரட்டைக் குழ்ந்தைகள்! விஷயமறிந்து கொரில்லா இரட்டையரைக் காண கூட்டம் அலை மோதுகிறது.

இரட்டையர்கள் படு ஆரோக்கியமாக உள்ளனர். 18 அங்குல உயரம், 15 இறாத்தல் எடை. சொகுசான பராமரிப்பில் குசியாக இருக்கிறார்கள். இருவருக்கும் என்ன பெயர் வைக்கலாம் என்று பார்வையாளர்களுக்கு ஒரு போட்டி வைத்திருக்கிறது மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம். குரங்குகளுக்கு பெயர் தேடுவதா என்று யாரும் அலட்சியமாக இருந்துவிடவில்லை. இதுவரை 30 ஆயிரம் பேர் பெயர்களை எழுதி அனுப்பியிருக்கிறார்கள், (இதுவும் ஒரு சாதனைதான்) நல்ல பெயர்களை தெரிவு செய்ய தீவிர பரிசீலனை நடக்கிறதாம்.

## குச்சி குச்சி குரங்கண்ணா!



### தகவல் பெட்டி

இரட்டைக் கொரில்லாக்கள் பிறந்த ஆச்சரியச் செய்தி கேட்டு இந்த கருங்குரங்காருக்கு திறந்த வாய் மூடவேயில்லையோ?! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. கமராவுக்கு கச்சிதமாகப் போஸ் கொடுக்க பழக்கி வைத்திருக்கிறார்கள். வன்.ரூ.திரி. ரெடி-சிரி என்றால் போதும் பொட்டென்று வஞ்சகமில்லாமல் வாயைத் திறந்துவிடுவார். 'குச்சி குச்சி குரங்கண்ணா, குறும்பு காட்டிச் சிரிக்கிறார்' என்றுதானே நினைக்கிறீர்கள். அண்ணருக்கும் ஒரு சோகம். தனக்கொரு பெண் நண்பி இல்லையே என்று அடிக்கடி ஏங்கிப் போகிறாராம். பராமரிப்பாளர் ஜோடி தேடிக்கொண்டிருக்கிறார்.


## இரண்டோடு இரண்டு சேர்ந்தது




இங்கிலாந்தைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகள், ஒருவர் பேட், இன்னொருவர் பவுலின். கொஞ்சூண்டு வித்தியாசமும் இல்லை. ஒரே மாதிரி இருப்பார்கள். இதனால் படிக்கும் போது ஒரே குழப்பம். இருவரையும் தனித் தனியே வேறு வகுப்புக்களில் படிக்கவைத்ததோடு, இருவரும் வெவ்வேறு நண்பர்களோடு பழகும்மாறு ஆசிரியர்கள் கூறிவிட்டார்களாம். ஆனாலும் குழப்பம் தீரவில்லை. படித்து முடித்து விட்டு இருவரும் ஆசிரியர்களானார்கள். அப்போதுதான் அந்த இன்ப அதிர்ச்சியை சந்தித்தார்கள். இவர்களுக்காகவே பிறந்து வந்ததுபோல ஜான்-பீட்டர் என்னும் இரட்டைச் சகோதரர்களை சந்தித்தார்கள். அவர்களும் ஒரே மாதிரியான தோற்றம் கொண்டவர்கள். திருமணம் நடந்து முடிந்தது. சுவாரசியமான சில குழப்பங்கள் ஏற்பட்டதால் சற்று தூரத்தில் இருக்க முடிவு செய்தனர். ஒருநாள் பவுலினுக்கு போன் செய்தாள் பேட். "நான் கர்ப்பமாக இருக்கிறேன்" என்று சொன்னாள். அதைக் கேட்ட பேட் துள்ளிக்குதித்துக் கொண்டே, "நானும் கர்ப்பமாக இருக்கிறேன்" என்றாளாம். இருவருக்கும் ஒரே ஆச்சரியம். மற்றொரு ஆச்சரியம், இருவரும் ஒரே நாளில் (1984 ஆகஸ்ட் 11) ஒரு மணி நேர இடைவெளி வித்தியாசத்தில் தமது முதல் குழந்தைகளை பெற்றெடுத்தனர். ஆச்சரியம் நம்பர் 3, இரு குழந்தைகளும் ஆண்குழந்தைகள்.

## விஷமாலை சூடும் வேலாயுதன்

## 'வா' என்று அழைக்கிறார் மண்டேலா



← பார்வையாளர்கள் முன்னிலையில் நாக பாம்பொன்றை ஜோராக விழுங்குகிறார்.

மாலையாக அணிந்து மகிழ்கிறார். ↓



'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்று சொன்னால் திருவாளர் வேலவனால் நம்பவே முடியவில்லை. ஏன் நம்ப முடியவில்லை? விஷப்பாம்புகளோடு அன்னியோன்னியமாக குடும்பம் நடத்துகிறார் வேலவன். அவரிடம் போய் சொன்னால் நம்பமாட்டார்தானே.

இந்தியாவில் கள்ளிக்கோட்டையைச் சேர்ந்தவர் வேலாயுதன். அவரது 18 வயது மகள் சீதா. இருவரும் நகரங்களுக்குச் சென்று கண்காட்சி நடத்துகிறார்கள். ஒரு கண்ணாடிக் கூண்டுக்குள் நாக பாம்புகள், விரியன் பாம்புகள், புடையன் பாம்புகள் எல்லாம் நெளிந்து பயமுறுத்திக் கொண்டிருக்கும். ஹாயாக உள்ளே செல்லும் வேலாயுதன் அந்தப் பாம்புகளை வாரியணைப்பார். உதட்டோடு உதடு சேர்ந்து முத்தமிடுவார். அப்படியே தூக்கி மாலையாகப் போட்டுக் கொள்வார். பார்வையாளர்கள் புல்லரித்துப் போவார்கள்.

பின்னர் அடுத்தகட்டம் தனது மகள் சீதாவை அழைப்பார். அவள் கையில் பாம்பின் வாயை வைத்துக் கொண்டு பாம்பின் உடலில் ஒரு குச்சியால் குத்துவார். குத்தப்பட்ட பாம்பு சீதாவின் கையில் கடிக்கும். சீதா... கடிக்கப்பட்ட சீதா சிரித்துக்கொண்டிருப்பாள். பாம்பின் பல்லு பிடுங்கப்பட்டுவிட்டதோ? என்று பார்வையாளர்கள் நினைப்பார்கள். சீதா பாம்பின் வாயைத் திறந்து பார்வையாளர்களுக்கு காண்பிப்பாள். விஷப்பற்கள் அப்படியே இருக்கும்.

இந்தக் கண்காட்சிகள் மூலம் வேலாயுதனுக்கு தினமும் 500 முதல் 900 ரூபாய்கள் வரை கிடைக்கிறது.

வேலாயுதனுக்கும் சில பாம்பு லட்சியங்கள் இருக்கின்றன. பெரிய பாம்புப் பண்ணை ஒன்றை நிறுவப் போகிறாராம். இந்திய மத்திய அரசிடம் உதவி கேட்டாராம். இதுவரை கிடைக்கவில்லையாம்.

இதற்கிடையே வேலாயுதன் பூரிப்போடு சொல்லும் ஒரு விஷயம், வேலாயுதனின் பாம்புகளோடு சாகசம் பற்றி அறிந்த தென்னாபிரிக்கா ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அங்கு ஒரு தடவையாவது வருமாறு அழைத்துள்ளாராம். விரைவில் அங்கு தனது செல்லப் பாம்புகளோடும், மகள் சீதாவோடும் பறக்கப்போகிறார் வேலாயுதன். (வேலாயுதன் உள்ளான் பாம்புக்கஞ்சான்)

# தெலுங்கில் ஒரு கண். ரஜினியின் ஆந்திரா விஜயம்!

ரஜினிகாந்த் நடித்த 'பாட்ஷா' தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு வசூல் மழை. 'பெத்த ராயுடு' படத்தில் ரஜினி நடித்த பாத்திரத்துக்கு மகா வரவேற்பு. ஆந்திராவுக்கு சென்று திருப்பதி தேவஸ்தான அறக்கட்டளை உறுப்பினராக ரஜினி கடந்த மாதம் பதவி ஏற்றார் அல்லவா. அப்போது தெலுங்கு ரசிகர்கள் 'பெத்தராயுடு ரஜினி வாழ்க' என்று கோஷம் போட்டார்கள்.

ரஜினிக்கு கிடைத்த அசத்தலான வரவேற்பைக் கண்டு என்.டி.ராமராவ் கூட ஆச்சரியப்பட்டாராம்.

தெலுங்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதால் தெலுங்குப் படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்கப் போகிறார் ரஜினி. படத்தை இயக்குபவர் முத்தையா சுப்பையா. தமிழ் பட தாயரிப்பாளர்கள் கொடுப்பதைவிட அதிகமாகவே ரஜினிக்கு சம்பளம் கொடுக்க தயாராக இருக்கிறார்கள் தெலுங்குப் பட தயாரிப்பாளர்கள்.

இதைவிட "பாரததேசம்' கட்சி தொடங்கலாம் வாங்க" என்று என்.டி.ராமராவ் அன்புத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

# சினிசிட்

சிரஞ்சீவி-ரோஜா

படம்: பிக்பாஸ்

விஜயகாந்த்



பிரபு-சுகன்யா
படம்: மிஸ்டர் மெட்ராஸ்




## மினி சினி

* ரதிஸ் முக்கிய வேடமொன்றில் இந்தியில் நடித்துள்ள 'ஆதங் ஹி ஆதங்' அனேமையில் வெளியாகியுள்ளது. இப்படத்தில் கதாநாயகனாக அமீர்கானும் அவருக்கு ஜோடியாக ஜூஹி சாவ்லாவும் நடித்துள்ளனர்.
* கமலின் 'இந்தியனி'ல் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வரும் இந்தி நடிகை ஊர்மிளா 'சாணக்கியன்' என்ற மலையாளப்படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்துள்ளார்.
* கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்காக மலையாள நடிகர் மோகன்லால் தலைமையிலான குழுவொன்று துபாய் செல்லப்போகின்றது. இந்தக் குழுவில் குஷ்பு, கனகா, வினிதா, ரோஹினி போன்றோரும் செல்லவுள்ளனர்.
* 'சதிலீலாவதி' படத்திற்குப் பின்னர் பாலுமகேந்திரா இந்திப் படமொன்றை இயக்கி வருகிறார். இப்படம் முடிவடைந்ததும் ரமேஷ் அரவிந்த் கதாநாயகனாக நடிக்கும் 'ஒருகோடை விடுமுறை' என்ற படத்தை இயக்கவுள்ளார்.
* ராம்கி கதாநாயகனாக நடிக்கும் 'நந்தா' என்ற படத்தில் ரேஷ்மா கதாநாயகியாக நடிக்கிறார். ரேஷ்மா முன்னர் 'சின்னக் கவுண்டர்', 'அக்கரைச் சீமையிலே' போன்ற படங்களில் தேவகி என்ற பெயரில் நடித்துள்ளார்.
* பிரபல கன்னட நடிகரான ராஜ்குமாரின் மகன் சிவராஜ்குமார் நடித்த 'ஓம்' என்ற கன்னடப்படம் வெற்றிகரமாக ஓடுவதால் அதைத் தமிழ்-தெலுங்கு மொழிகளில் தயாரிக்கும் உரிமையை டாக்டர் ராஜசேகர் வாங்கியுள்ளார்.
* தங்கராசு' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான அனுஷா, தற்போது கார்த்திக் நடிக்கும் 'கட்டப்பஞ்சாயத்துக் காரன்' படத்தில் இரண்டாவது கதாநாயகியாகவும், கமலின் 'குருதிப்புனலி'ல் வில்லியாகவும் நடித்துவருகிறார்.
* பார்த்திபனின் 'புள்ளகுட்டிக்காரன்' படத்தை பார்த்த பிரபல தெலுங்கு இயக்குநர்-நடிகர் தாசரி நாராயணராவ், இந்தப் படத்தைத் தெலுங்கில் தயாரிப்பதற்காக உரிமையை பார்த்திபனிடமிருந்து பெற்றுள்ளார்.
* 'நிலா' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிய நம்பிராஜ், தற்போது 'சந்திரலேகா', 'முத்துப்பேச்சி' ஆகிய படங்களை இயக்கி வருகிறார். இவர் விரைவில் கார்த்திக்கை வைத்துப் படமொன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.
* பிரபு நடித்துள்ள 'எலி மை பிரண்ட்' என்ற ஆங்கிலப் படம் இந்தியாவில் விரைவில் வெளியாகவுள்ளது. ஆனால் இந்தப் படத்தின் பெயரை மட்டும் 'எலிஃபன்ட் போய்' என்று மாற்றி வெளியிடவுள்ளார்கள்.

## வளர்கிறார் மாப்ளே

எஸ்.ஏ.சந்திரசேகரனிடம் உதவியாளராக இருந்தவர் சி.ரங்கநாதன்.

இயக்குநராக பதவியுயர்வு பெற்றுள்ள ரங்கநாதன் தனது குருவின் மகன் விஜய் நடிக்க இயக்கும் (இதுதான் தட்சணையோ?) படம் கோயமுத்தூர் மாப்ளே.

விஜய்-சங்கவி ஜோடி.

சங்கவி வீட்டுக்கு அருகில் குடியிருக்கும் விஜய் சங்கவியை பயங்கரமாகக் காவிக்கிறார். இடையே வருகிறார் வில்லன். தரன் வில்லனாக நடிக்கிறார். ('நம்மவர்' பட வில்லன்) செந்தில், செந்திலை உதைக்க கவுண்டமணி, விஜுசக்கரவர்த்தி ஆகியோரும் நடிக்கிறார்கள். வேகமாக வளர்ந்து வரும் படம்.

## திரையில் ↔ புதியவை

தமிழ் நாட்டில் திரைக்கு வந்துள்ள புதிய படங்கள். (நம்நாட்டில் வீடியோ உபயத்தில் பார்க்கலாம்)

01. நாடோடி மன்னன். (சரத்குமார்-மீனா மற்றும் மீனா) 02. விஷ்ணு (விஜய்-சங்கவி) 03. ராசய்யா (பிரபுதேவா-ரோஜா) 04. சூப்பர் லேடி. (விஜயசாந்தி-மொழிமாற்றுப்படம்)

வெளிவந்து 25 நாட்களும் கலகலப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது மாயாபஜார்(ராம்கி-ஊர்வசி மற்றும் ஊர்வசி)

விஜய், இந்திரஜா நடித்த 'ராஜாவின் பார்வையிலே' 25 நாட்களுக்குள் பெரிய திரையரங்குகளில் இருந்து தூக்கப்பட்டுவிட்டது.

## தீபாவளிக்கு பூஜை

பாக்யராஜ் தனது நண்பர் என். பழனிச்சாமியை வைத்து தயாரித்து வரும் படம்தான் ஆயுத பூஜை. அர்ஜுன், ரோஜா, ஊர்வசி நடித்துள்ள 'ஆயுத பூஜை' தீபாவளிக்கு திரைக்கு வருகிறது.



ராம்கி-விசித்ரா
படம்: ஒன் பை டூ

## இன்னொரு பிரபு

இசையமைப்பாளர், இயக்குநர், கதை வசனகர்த்தா, தயாரிப்பாளர், பாடலாசிரியர், பாடகர் என்று பல அவதாரங்களை எடுத்தவர் கங்கை அமரன். இப்போது தனது மகன் பிரபுவை கதாநாயகனாக அவதாரம் எடுக்க வைத்திருக்கிறார்.

பிரபு இலண்டனில் படித்து, அங்கேயே குடியுரிமையும் பெற்றுக்கொண்டவர். அவரை அழைத்து 'பூஞ்சோலை' என்ற படத்தில் கதாநாயகனாக்கிவிட்டார் கங்கை அமரன். ஏற்கனவே ஒரு 'பிரபு' இருப்பதால், தனது மகனின் பெயரை 'வெங்கட் பிரபு' என்று மாற்றிவிட்டார் அமரன். வெங்கட் பிரபுவுக்கு ஜோடியும் புதுமுகம்தான். பெயர், சங்கீதா. ஏற்கனவே வேறொரு சங்கீதா இருப்பதால் இவரது பெயரையும் மாற்றவேண்டுமல்லவா. நல்ல பெயர் தேடி அலைகிறார் அமரன். கங்கை அமரன் மகிழ்ச்சியாக இருக்கும் இன்னொரு விடயம், தனது அண்ணன் இளையராஜாவின் குடும்பத்தோடு இருந்த பகை, பனி மூட்டம் போல கலைந்து விட்டதாம்.

## 'உள்ளத்தை அள்ளித்தா'

கார்த்திக் வழங்கிய சூப்பர் ஹிட் படங்கள் என்று பார்த்தால், கிழக்கு வாசல் படத்தின் பின் எதுவுமில்லை. கிழக்கு வாசலுக்கு பின்னர் வந்தவையெல்லாம் சுமார் ரகம்தான். ஆனாலும் தொய்வின்றி நடித்துக்கொண்டிருக்கிறார் கார்த்திக்.

கார்த்திக் புதிதாக ஒப்பந்தமாகியுள்ள படத்தின் பெயர் 'உள்ளத்தை அள்ளித்தா'

'முறைமாமன்' படத்தை தயாரித்த நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் இது.

கார்த்திக் ஜோடியாக நடிக்கும் நடிகை யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. கிரேசிமோகன் வசனம் எழுதுவதால் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் உள்ள படம் என்று நம்பலாம். கதை, திரைக்கதை, இயக்கம் சுந்தர். இவர்தான் குஷ்புவோடு இணைத்து தற்போதைக்கு கிசுகிசுக்கப்படுபவர். அதனால்தான் குஷ்புவை கதாநாயகியாகப் போடத் தயங்கினாரோ?

## காதோடு சொல்லுகிறோம்

'சிகலகலா' ராஜ இயக்குநர் தன் குட்டி மகனை நம்பி எடுத்த சமீபகாலப் படங்கள் காலைவாரிவிட்ட கவலையில் இருக்கிறார். தனது அலுவலக அறையையும் முன்பு இருந்தது போல மாற்றியிருக்கிறார். ராசியால் தான் தோல்வியோ யோசி. அவர் பாணிதான் இது, வாசி!

'வி'யில் ஆரம்பித்து 'தா' வில் முடியும் நடிகை யார் தெரியும்தானே. அவர் பிரபல ஹீரோக்களை வளைத்துப் போடும் வித்தையில் கைதேர்ந்தவர். வித்தையால் வாய்ப்பு வரும் என்று ஐந்து லகரம் சம்பளம் கேட்கிறாராம். இதனால் தயாரிப்பாளர்கள் அவர் பக்கமே திரும்புவதில்லையாம். இனிமேல் தயாரிப்பாளர்களுக்கு என்ன வித்தை காட்டப் போகிறாரோ?

நட்சத்திர தம்பதிகளது 'மகள்' ஒரு படத்தில்தான் நாயகியானார். பந்தா மட்டும் பல படம் கண்ட தினுசில் இருக்கிறதாம். சந்திர'மான படத்தில் நடித்துவரும் 'மகள்' நடிகை இளைய நாயகனோடு கைகோர்த்து சுற்றுகிறாராம். அப்பா 'வி' குமார் கண்டுகொள்வதில்லையாம்.

மகனின் கணவர் தாய்க்கு என்ன முறை? அந்த உறவு முறையில் பெயர் கொண்ட படம் பெட்டிக்குள் சுருண்டுவிட்டால், நவரச நாயகன் இருண்டுபோயிருக்கிறார். 'பஞ்சாயத்து' படத்தில் கூட நடிக்கும் 'க' நடிகை நாயகனின் கவலையை போக்கப் படாதபாடு படுகிறாராம். பொதுச் சேவை.

'சின்னக் குஷ்பூ' என்று அழைக்கப்பட்ட நீலக்கண் நடிகை தெலுங்கில் பல படங்களை கையில் வைத்திருக்கிறார். தெலுங்கு தயாரிப்பாளர் ஒருவரின் பிரத்தியோக கவனிப்புத்தான் காரணமாம்.

## ஏ.ஆர். ரகுமானின் நன்றி

ஏ.ஆர்.ரகுமான் ஒரு காலத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் இசைக்குழுவில் இருந்தவர். அதை மறக்காமல் சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சீர்காழி சிவசிதம்பரத்தை 'இந்திரா' படத்தில் பாட வைத்தார். சீர்காழி சிவ-சிதம்பரத்தின் மகனும், அவரது சகோதரியின் மகனும் பாட ஆரம்பித்துள்ளார்கள். தாத்தாவின் சாயல்தானாம் இருவரது குரலும்.

## முதலில் mr மெட்ராஸ்

தீபாவளிக்கு பிரபு நடித்த பெரிய குடும்பம் திரைக்கு வரவுள்ளது. அதற்கு முன்னரே பிரபு நடித்துள்ள Mr மெட்ராஸ்' படத்தை திரையிடப் போகிறார்கள். படப்பிடிப்புக்கள் முடிவடைந்துவிட்டன.

## த்திசாலி மீனா

முன்னாள் நடிகர், நடிகைகள் சிலரது பரிதாபமான இறுதிவாழ்க்கை புதிய நடிகர் நடிகைகளுக்கு ஒரு நல்ல பாடம். உதாரணமாக இருக்கிறார்கள், என்.எஸ். கிருஷ்ணன், தியாகராஜ வதர், சந்திரபாபு என்று பலர் தமது கடைசிக்காலத்தில் கஷ்டப்பட்டுச் செத்தார்கள் ித்திரி எவ்வளவு பெரிய நடிகை. குடித்து, குடித்து, கைச் செலவுக்கே பணமில்லாமல் துப் போனார்.

புதிய நடிகர்கள் பலர் அதனையெல்லாம் அறிந்து, சம்பாதிக்கும் போதே புதிய முல்கள் தொடங்கிவிடுகிறார்கள். நடிகைகளும் அவ்வாறே. வேட்டன்ட்டாக செய்துள்ள காரியம் யாதெனில், மிகப் பெரிய தோட்டம் ஒன்றை 65 சம் ரூபாய் கொடுத்து வளைத்துப் போட்டிருக்கிறார். மலிவான க்கு வந்த பல வீடுகளையும் வாங்கி வைத்திருக்கிறார்.

## ராமசாமியின் வாரிசு

வி.கே.ராமசாமி தமிழ் சினிமாவில் பழம் தின்று கொட்டை போட்டவர். இதுவரை திருமணம் செய்யாமல் கட்டை பிரம்மச்சாரியாகவே தனது தம்பியின் மகனை சினிமாவில் நடிக்க வைத்துவிட்டார்.

"நீயாவது கதாநாயகனாக நடித்து புகழ் பெறு" என்று ஆசிர்வாதம் செய்துள்ளாராம் வி.கே.ராமசாமியின் வாரிசின் பெயர் கிருஷ்ணராஜ். 'அசுரன்' படத்தில் சில காட்சிகளில் மொட்டைத் தலையோடு முகம் காட்டியிருக்கிறார் கிருஷ்ணராஜ்.

## விசித்திராவுக்கு யோகம்

சில்க் சுமிதாவுக்கு பின்னர் முகத்திலும், உதட்டிலும், கவர்ச்சியை பூசியிருக்கும் நடிகை என்று பெய ரெடுத்திருப்பவர் விசித்திராதான். ரஜினியின் 'முத்து' சரத்குமார் நடித்துவரும் 'ரகசிய போலீஸ்' என்று பல படங்களை கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் விசித்திரா. கதாநாயக நடிகைகள் கவர்ச்சி காட்டுவது மன்னிக்க முடியாத தவறு என்கிறார் விசித்திரா. உண்மைதான், கவர்ச்சி நடிகைகளின் மடியில், அதாவது பிழைப்பில் கைவைக்கலாமோ?



அர்ஜுன்-மீனா
படம்: செங்கோட்டை

## கைவிடப்பட்ட திட்டம்

'வில்லாதி வில்லன்' படத்தையடுத்து பாக்ய ராஜ் நடிக்கும் படம் ஒன்றை இயக்க ஆசைப் பட்டார் சத்யராஜ். பாக்ய ராஜும் 'ஓகே' சொல்லி இருந்தாராம். 'வில்லாதி வில்லன்' தோல்விப் படமாகவில்லை. அதே சமயம் ஓஹோ என்றும் ஓடவில்லை. 50 நாட்க ளுக்குப் பின்னர் சென்னை யில் ஒரே ஒரு தியேட்டரில் மட்டும் மூன்று காட்சி களாக ஓடிக் கொண்டி ருக்கிறது. அதனால் தொடர்ந்து படங்களை இயக்கும் திட்டத்தை ஒத்திப் போடுவது பற்றி யோசித்து வருகிறார் சத்யராஜ்.



இந்திரஜா
படம்: ராஜாவின் பார்வையிலே
வெளிவந்து விட்டது

## இறக்கு மதியால் இலாபம்

இந்திப் படவுலகின் பிரபல நடிகைகள் எல்லோரும் தமிழ் படவுலகுக்கு வந்து இறங்கிக்கொண்டிருக்கிறார்கள். பட்டியலில் விடுபட்டுப்போனது யார் என்று தேடி அவர்களையும் கொண்டுவந்து இறக்குவதற்கும் தயாரிப்பாளர்கள் மும்முரமாகியுள்ளார்கள்.

இந்தி நடிகைகளுக்கு கொடுக்கும் சம்பளம் அதிகமானால் கூட, பல மொழிகளில் ஒரே படத்தை மொழி மாற்றி விற்பனை செய்யும் லாபம் இருக்கிறது. அதுதான் தமிழ்ப்பட தயாரிப்பாளர்கள் பம்பாய் நோக்கி தவம் கிடக்கிறார்கள்.

## ஜொள்ளோ ஜொள்ளு

பெண்களுக்கு பின்னால் அலைவது, பெண் களைக் கண்டால் நெளியோ நெளியென்று நெளி வது எனப்படுபவை 'ஜொள்ளு' என்று அழைக் கப்படும். இது புதிய அகராதி. இப்போது 'ஜொள்ளு' என்ற பெயரில் புதிய படம் தயாராகிறது.

ஜொள்ளு விடப்போவது விக்னேஷ். ரசிகர்களை ஜொள்ளு விடவைக்கப் போவது ஜோதி மீனா. முன்னாள் கவர்ச்சி ஆட்ட நடிகை ஜோதி லட்சுமி யின் மகள்தான் ஜோதி மீனா. ஜோதி மீனா தாராளமாக கவர்ச்சி காட்ட, மேலதிக கவர்ச்சி இணைப்பாக மூன்று கதாநாயகிகள். மூவரும் புதுமுகங்கள். ரீட்டு ஷிப்பா, நீரஜா, ரவீனா. செம ஜொள்ளுத்தான்.

## பாடல் ஒன்று – இலட்சம் 65

'இந்தியன்' படத்தில் ஊர்மிளா நடித்த பாடல் காட்சி ஒன்றுக்கு செலவான தொகை 65 இலட்சம். இது இந்திய பணமதிப்புப்படிதான். நம்நாட்டு பண மதிப்புப்படி பார்த்தால் வாயைப்பிளப்பீர்கள்) கமல் பயன்படுத்தும் மேக்கப் சமாச்சாரமான 'மாஸ்க்' புதுமையானதாம். ஒரு முறை உபயோகித்துவிட்டு வீசவேண்டியதுதானாம். 'இந்தியன்' பட்ஜெட்டில் கமல் பயன்படுத்தும் 'மாஸ்க்' மட்டும் 15 இலட்ச ரூபாயை விழுங்கப் போகிறது.



வனிதா விஜயகுமார்
படம்: சந்திரலேகா

## இசை - பிரபு, கதாநாயகன் பிரபுராஜ்

புதிய இசையமைப்பாளர் ஒருவர் அறிமுகமாகிறார். பெயர்- பிரபு. இவர் அறிமுகமாவது முதல் அழைப்பு என்ற படத்தில். கதாநாயகனும் புதுமுகம். பெயர்: பிரபுராஜ். மிகப் பழைய முகம் ஒருவர் பாடல் எழுதுகிறார். எம்.ஜி.ஆர் நடித்த 'குடியிருந்த கோயில்' படத்தில் 'குங்குமப் பொட்டின் மங்களம்' என்றொரு பாடல் இன்னும் நினைவில் நிற்கிறதல்லவா. அந்தப் பாடலை எழுதியவர் ரோஷனா பேகம். பெண்பாடலாசிரியை. இவர்தான் 'முதல் அழைப்பு' படத்தில் ஒரு பாடலை எழுதியிருக்கிறார். "ஆடலாம், பாடலாம், ஆனந்தக் களியாட்டம் ஆட்டம் போட பெண் இருந்தால் சங்கீதம்" என்று தொடர்கிறது பாடல்.

முதல் அழைப்பில் சில்க் சுமிதாவும் இருக்கிறார்-ஆட்டம் போடுகிறார் என்பதும் முக்கியமான செய்தி. இம்மாத இறுதியில் திரையிடலாம் என்று திட்டமிட்டுள்ளார்கள். படப்பிடிப்பை வேகமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.



ரோஜா
படம்: ராசய்யா

## கமலுடன் – சுகன்யா

'இந்தியன்' படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு முடியும் தறுவாயில் இருக்கிறது. இரண்டாம் கட்டத்துக்கு செல்ல முன்னர் கதாநாயகிகளை மாற்றி விட்டார்கள். கதைப்படி மூன்று கதாநாயகிகள், மனிஷா கொய்ராலா, ஊர்வசி, ரோஜா. இதில் ஊர்வசியையும், ரோஜாவையும் இப்போது தூக்கிவிட்டார்கள். ஊர்வசிக்குப் பதிலாக சுகன்யா ஒப்பந்தமாகியுள்ளார். ரோஜாவுக்கு பதிலாக இந்தி நடிகை ஊர்மிளா ஒப்பந்தமாகி நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் இந்தியில் தயாராகும் 'ரங்கீலா' படத்தில் ஊர்மிளாதான் கதாநாயகி. கிட்டத்தட்ட முற்றும் துறந்தவராக 'ரங்கீலாவில்' நடித்து பம்பாய் படவுலகை கலக்கிக் கொண்டிருக்கிறார் ஊர்மிளா. இந்தியனில் ஊர்மிளா என்ன பண்ணப் போகிறாரோ? மனிஷா ஒரு புறம், ஊர்மிளா மறுபுறம், இடையிலே மாட்டிக்கொண்டு சுகன்யா முழிக்கப்போகிறார். கமலுக்கும், ரசிகர்களுக்கும் மட்டும் கொண்டாட்டம்.



நக்மா

# கண்ணுக்கென்ன அழகு?

## கதைபேசும் விழிகள் தெளிவாக வேண்டாமா?

கண்களை ஜன்னலுக்கு ஒப்பிட்டு, "இந்த இரண்டு சிறிய ஜன்னல்கள் மூலமாக உலகிலுள்ள அத்தனை அழகிய பொருட்களையும் அலசிப் பார்த்துவிட முடியும்" என்பார்கள். விழிகள் வெளியில் உள்ள பொருட்களை மட்டுமே பார்க்கப் பயன்படுகின்றன என்று எண்ணிவிடக்கூடாது. வாய் பேசாத நேரங்களில் விழிகள் மனதின் உணர்ச்சிகளையும், உள்ளத்தின் எண்ணங்களையும் பிரதிபலிக்கின்றன. கண்கள் பேசும் மௌன மொழிகளில் தான் எத்தனைஅமைதி, எத்தனை ஆழம்! அதிலும் பெண்களின் கண்களென்றால் சொல்லவா வேண்டும்?

அழகான விழி இருக்கும் பெண்களுக்குச் சரியான பார்வை தெரியவில்லை என்றால் எப்படி இருக்கும்? விழிகளுக்கு மை தீட்டி அழகுபடுத்துவது மட்டும்தானா அழகு? அதைக் குறைவின்றிப் பாதுகாப்பதும் அழகு தானே!

**கண்களைப் பாதுகாக்க**

முதலாவதாக கண்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். தூசுகளுக்கும், கிருமிகளுக்கும் அப்பால் கண்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காகவே தினமும் சுத்தமான தண்ணீரால் கண்களைக் கழுவிவிட வேண்டும்.

**கண்களை எப்படிக் கழுவுவது?**

கொத்தமல்லித்தளிரை இரவு முழுவதும் ஊறவைத்து காலையில் எடுத்து வடிகட்டி, அந்த நீரால் கண்களைக் கழுவ வேண்டும்.

ஒவ்வொரு நாள் காலையில் குளிக்கும் போதும் சுத்தமான தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, முகத்தைத் தண்ணீரில் தோய்த்து கண்களைத் திறந்து கழுவ வேண்டும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு, அதில் சில நிமிடங்களுக்கு கண்களைத் திறந்து வைத்திருக்கலாம்.

குளிர்ந்த நீரில் வாய் கொப்பளிக்க வேண்டும். குளிர்ந்த நீரில் கண்களைத் தோய்க்கும் போது, வாயிலும் கொஞ்சம் நீரை வைத்திருக்க வேண்டும் இப்படிச் செய்வதால் கண்களில் உள்ள அழற்சி நீங்கி, கண்கள் புத்துணர்வு பெறும்.

**எதை எதைச் சாப்பிட வேண்டும்?**

★ விட்டமின் ஏ கண்பார்வைக்கு உகந்தது. கண் மருத்துவரைச் சென்று பார்ப்பதைத் தவிர்க்க வேண்டுமானால், நல்ல சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

★ பசலைக் கீரைச் சாற்றுடன் கரட் சாறு கலந்து அருந்திவர, கண்நோய் குணமாகும்.


★ மாங்காய் தின்பதற்கு ருசியானது மட்டுமல்ல, கண்களுக்கு மிகவும் ஏற்றது. எனவே மாங்காய்களை விட்டு விடாதீர்கள்.

★ பால், வெண்ணெய், மற்றும் பாலால் செய்யப்பட்ட பொருட்கள் கண்களுக்குச் சிறந்தது.

★ தக்காளி, ஒரேஞ்ச், கரட் மற்றும் பச்சைக் கீரைகள், பசலைக் கீரை, முருங்கைக்கீரை, கொத்தமல்லி, முட்டைக்கோவா முதலியவை கண்களுக்குப் புத்துணர்ச்சி தரக்கூடியவை.

**கண்களைக் குணப்படுத்த...**

கண்கள் சிவந்தோ, வீங்கியோ, சோர்ந்தோ அல்லது ஏதாவது ஒரு காரணத்தால் கண்களில் எரிச்சல், அரிப்பு, வலி



ஏதாவது இருந்தால் பின்வரும் வைத்தியத்தைக் கடைப்பிடிக்கவும்:

★ பன்னீர் கண்களுக்கு மிகவும் குளிர்ச்சியானது மட்டுமல்ல, கண்களில் ஏற்படும் சோர்வையும் போக்கக்கூடியது.

★ ஒரு தேக்கரண்டி அளவு மஞ்சளை அரை லீற்றர் தண்ணீரில் வேகவைத்து, அது கால்ப் பாகமாகச் சுண்டிவரும்போது, இறக்கி வடிகட்டி ஆறவைத்து, ஒத்தடம் கொடுப்பது போல் கண்களில் ஒற்றி எடுத்தால் கண்கள் சிவந்து காணப்படுவது மாறும்.

★ கண்களைக் குளிர்ச்சியாகவும், புத்துணர்ச்சியோடும் வைத்துக்கொள்ள சிறிது சந்தனத்தை அரைத்து, கண்களை மூடிக் கொண்டு இமைகள் மேல் பற்றுப் போட்டால் போதும்.

★ குளிர்ந்த நீரில் சுத்தமான துணியை நனைத்து, பிழிந்து கண்கள் மீது ஒத்தடம் கொடுத்தால் கண்கள் குளிர்ச்சியாகும். குளிர்ச்சியான ஒத்தடத்திற்கு குளிர்ந்த நீரிலும், சூடான ஒத்தடத்திற்கு வெந்நீரிலும் துணியை நனைத்து, பிழிந்து ஒத்தடம் கொடுக்கவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

அல்லது உலர்ந்த துணியை வாயில் வைத்து ஊதி சூடான காற்றை ஒத்தடம் கொடுத்தால் கண்களில் ஏற்படும் வலி போய்விடும்.

**செய்யக் கூடியதும்-செய்யக் கூடாததும்**

★ விடிவதற்கு முன்னும், சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னும் புல்தரை மீது நடப்பது கண்பார்வைக்கு நல்லது.

★ தூக்கத்திலிருந்து எழுந்தவுடனோ, வெளியில் வெயிலிலிருந்து வீடு திரும்பியவுடனோ அல்லது நீண்ட நேரம் படுத்திருந்து விட்டு எழுந்தவுடனேயோ கண்களைக் கழுவாதீர்கள். எப்போதும் நீண்ட நேரம் வெளியில் சென்றிருந்து வந்த பிறகு உங்கள் கால்களை முதலில் கழுவுங்கள். ஈரம் உலர்ந்த பிறகு குளிர்ந்த நீரால் கண்களைக் கழுவுங்கள்.

★ மூன்று அல்லது நான்கு முறை ஒரு கண்ணை மூடி மறுகண்ணால் உதய சூரியனை சில வினாடிகள் உற்று நோக்குங்கள்.

★ ஒருபோதும் நண்பகல் வேளைகளில் சூரியனை உற்றுப் பார்க்கக்கூடாது.

★ பசுமையான வயல் நிலங்களையோ, பசுமையான இயற்கையையோ உற்றுப் பார்த்தால் கண்களுக்கு நல்லது.

★ கண்மை போன்றவைகளை உபயோகப்படுத்தும்போது சுத்தமான உபகரணங்கள் மூலமோ, அல்லது சுத்தமான விரல்கள் மூலமோதான் உபயோகப்படுத்த வேண்டும். இந்தப் பொருட்களை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதோ, கொடுக்கல் வாங்கலோ இருக்கக்கூடாது.

★ கண்மை போன்ற பூச்சுக்களை உபயோகப்படுத்தினால், படுக்கப்போகும் முன் அவைகளை நன்றாகக் கழுவி அப்புறப்படுத்தி விட்டீர்களா என்று ஆராய்ந்து பாருங்கள்.

★ அழுக்கான துணிகள் மற்றும் கைக்குட்டைகளால் கண்களை ஒருபோதும் துடைக்கக்கூடாது. கண்நோய் உள்ளவர்களின் டவலை உபயோகப்படுத்தாதீர்கள்.

★ முகத்தைச் சுத்தமாக வைத்திருக்க உதவும் சாதனங்களால் மட்டும் முகத்தைக் கழுவுங்கள். அமோனியா போன்ற இரசாயனப் பொருட்கள் கண்களில் பட்டு எரிச்சல் ஏற்பட்டால் உடனே மருத்துவரை அணுகி, சிகிச்சை பெறுங்கள்.

## சருமம் அழகு பெற சிரமம் இல்லாத யோசனைகள்

★ குளிக்கும் தண்ணீரோ, முகம் கழுவ வைத்திருக்கும் தண்ணீரோ மிதமான சூட்டோடு இருக்க வேண்டும். அதிகப்படியான சூடு சரும அழகைக் கெடுக்கும். அத்துடன் சருமத்தைச் சீக்கிரமாக உலர்த்தி விடும்.

★ தக்காளியை வெட்டி அதன் சாறு முகத்திலும், பாதங்களிலும், கழுத்திலும் படும்படி தேய்த்துக் கொண்டு பிறகு குளித்தால் தோல் ஆரோக்கியமாக இருக்கும்.

★ ஐஸ்கட்டியை எடுத்து மெல்லிய துணியில் வைத்து முகத்தில் ஒத்தடம் கொடுத்துக் கொள்வதைச் சில தினங்கள் செய்தால் முகத்தில் எண்ணெ வடிவது நிற்கும்

★ சில துளிகள் பாதாம் எண்ணை, முட்டையின் மஞ்சட்கரு இரண்டையும் கலந்து முகத்தில் மென்மையாகத் தடவிக் கொள்ளுங்கள். பதினைந்து நிமிடம் கழித்துக் குளித்தால் முகச் சருமம் பட்டுப்போல மென்மையாக இருக்கும்.

★ கொஞ்சம் பாலை எடுத்து அதில் எலுமிச்சை சாற்றை சில துளிகள் பிழிந்து கலந்து முகம், பாதங்கள், கைகள், கழுத்து முதலிய இடங்களில் தடவிக்கொண்டு 15 நிமிடங்கள் கழித்துக் குளிப்பதை வழக்கமாக்கிக் கொண்டால் சருமம் ஆரோக்கியமாகவும், மிருதுவாகவும், எடுப்பாகவும் இருக்கும்.

★ சுடுதண்ணீரில் சிறிது உப்பைப்



போட்டு, பாதங்களை சில நிமிடங்கள் அதில் வைத்துக்கொண்டு இருந்துவிட்டு பிறகு சுத்தமான நீரில் அலம்பிக்கொண்டால், பாதங்கள் அழகாக இருப்பது மட்டுமல்ல, ஆரோக்கியமாகவும் இருக்கும்.

★ எலுமிச்சை சாற்றில் சில துளிகளை தினசரி குளிப்பதற்கு முன்பு தலையில் தேய்த்துக் கொண்டு குளித்தால், ஈர், பேன், பொடுகு போன்றவைகள் போய்விடும். கூந்தல் கருமையுடன் பளபளப்பாக கொட்டாமல் இருக்கும்.

## தூக்கமும் கொஞ்சம் குறையட்டுமே....

பெண்களில் சிலருக்கு முகம் மெலிந்து கன்னங்களில் பள்ளம் விழுந்து காணப்படும். இப்படி இருந்தால் முகத்தின் அழகு கெடும். ஆகையால் தினமும் இவர்கள் காய்ச்சிய பாதாம் எண்ணெயைக் கொஞ்சம் எடுத்து முகத்தில் நன்றாகத் தேய்த்து விட்டுக் கொண்டு இரவில் படுக்க வேண்டும்

கூந்தலைப் பெரியதாகவும், அடர்த்தியாகவும் வளர்க்க வேண்டும் என்று நினைக்கும் பெண்கள் தேன், வெள்ளரிக்காய், ஆப்பிள் பழம், அன்னாசிப்பழம், கோதுமை ஆகியவைகளை முடிந்த அளவு அடிக்கடி சாப்பிட்டு வரவேண்டியது அவசியம்.

பெண்கள் மிக அழகாக இருக்க, ரோஜாப் பூக்களை தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பிறகு இந்த தண்ணீரை வடிகட்டி பெண்கள் தங்கள் உடலில் தடவிக் கொள்ள வேண்டும். இப்படி தடவிக் கொண்டால் தோல் மிருதுவாகவும், அழகாகவும் இருக்கும்.

கொதிக்கும் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, அதிலிருந்து வெளிவரும் நீராவியை பெண்கள் தங்களது முகத்தில் படும்படி செய்ய வேண்டும். பிறகு முகத்தை சோப்புப்



போட்டு கழுவவேண்டும். இப்படி வாரத்திற்கு இரண்டு முறை செய்து வந்தால் முகத்தில் பரு தோன்றவே செய்யாது.

அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படும் பெண்கள் பகலில் அதிகம் தூங்கக்கூடாது. இரவில் அதிக நேரம் கண்விழித்து இருக்கக்கூடாது. பகலில் தூங்கும் பெண்களுக்கும் இரவில் கண் விழிக்கும் பெண்களுக்கும் என்ன மேக்கப் போட்டாலும் அழகு வராது. என்ன, உங்களுக்கு அழகு வேண்டுமா? வேண்டாமா?

## கர்ப்பிணிப் பெண்களுக்குத் தேவை

சாந்த குணம், மன சந்தோஷம், நல்ல எண்ணம், சுறுசுறுப்பு ஆகியவை இருக்க வேண்டும். இவ்வாறான மனநிலைகளுக்கு இசைவாய் அவர்களைச் சுற்றியுள்ள விஷயங்கள் எல்லாம் உற்சாகத்தைத் தரத்தக்கதாக இருக்க வேண்டும். மனத் திருப்தி, மனச் சந்தோஷம், மிகவும் அவசியம்.

## குழந்தை வளர்ப்பிற்கு ஒரு டிப்ஸ்

குழந்தையின் எடையைத் தெரிந்து கொண்டு ஒரு இறாத்தல் எடைக்கு இரண்டரை அவுன்ஸ் என்ற கணக்கில் அதற்குப் பால் கொடுத்து வந்தால் குழந்தை ஆரோக்கியமாகவும், புஷ்டியாகவும் இருக்கும்.

## கடுகளவு யோசனை

பெண்கள் நெற்றியில் குங்குமம் வைக்கும் இடத்தில் கறுப்பாக தேமல் இருக்கும். இதைப் போக்க துளசிச்சாற்றை நெற்றியில் தடவினால் உதிர்ந்து விடும்.

## கண்டதையும் பூசுவதோ?

ஒப்பனைச் சாதனங்களை எல்லாம் வாங்கி முகத்தில் தடவிக் கொள்ளக் கூடாது. அவற்றில் கலந்துள்ள இரசாயனப் பொருட்கள் முகத்தைச் சில சமயம் கோரமாக்கி விடும். ஏதாவது சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது மட்டும்தான் முகத்தில் கிறீம்கள் போன்றவற்றைத் தடவி ஒப்பனை செய்துகொள்ள வேண்டும். அடிக்கடி செய்துகொண்டால் முகத்தில் கடுமையான சரும வியாதிகள் தோன்றி முக அழகைக் கெடுத்து விடும்.

### முக இதம்

முக வசீகரம் செய்து கொள்வதற்கு உபயோகிக்கும் கிறீம்கள் சில பெண்களின் முகங்களுக்கு ஒத்து வருவதில்லை. அவை அவர்களின் உடலுக்கு அலர்ஜியாக இருக்கும். அவர்கள் எந்த வித கிறீமையும் உபயோகிக்கக் கூடாது.

## சமையல் டிப்ஸ்

▫ தேனீர், கொக்கோ போன்ற பானங்கள் தயார் செய்யும் போது கொஞ்சம் உப்பைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ருசி அருமையாக இருக்கும்.

▫ பருப்புகளை வேக வைக்கும்போது கொஞ்சம் நல்லெண்ணையை ஊற்றிக் கொள்ளுங்கள் வேகமாக வெந்துவிடும்.

▫ பாலை உறையவைக்க மோர் இல்லாத போது கொஞ்சம் புளியைப் போடுங்கள்; பால் உறைந்துவிடும்.

▫ கறிவேப்பிலை, கொத்தமல்லி இலைகளை தரையில் போட்டு, அலுமினியப் பாத்திரத்தால் மூடிவைத்தால் வாடாமல் இருக்கும்.

▫ காய்கறிகளை நறுக்கியபின் கத்தியை தண்ணீரில் அலம்பி துணியால் துடைத்து வைத்தால் துருப்பிடிக்காது.

▫ தேங்காய் மிஞ்சிவிட்டால் அதனை தண்ணீரில் போட்டு வையுங்கள். மறுநாள் தண்ணீரில் போட்டது போலவே இருக்கும்.

▫ எறும்புகள் வராமல் தடுக்க மஞ்சள் பொடியை தூவிவையுங்கள் எறும்புகள் வராது.

## மோகமோ அங்கும் மோகமோ



தங்க நகைகள் மீது நம் பெண்களுக்கு மட்டும்தான் மோகம் என்று யாராவது நினைத்துக் கொண்டிருந்தால் அது மகா தவறு. மேல் நாட்டுப் பெண்களுக்கும் தங்க நகைகள், இரத்தினத்தில் செய்த நகைகள் என்றால் அலாதிப்பிரியம். படத்தில் இருப்பவர் இலண்டன் பெண். அவர் அணிந்திருக்கும் ஆபரணங்கள் இரத்தினத்தால் செய்யப்பட்டவை. இவற்றின் பெறுமதி எவ்வளவு என்று தெரியுமோ? 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். இலண்டனிலுள்ள 'சொத்பி' ஏல நிலையத்தில் இவற்றை வாங்கிக் கொண்டார். இரத்தின நகை கிடைத்த சந்தோசத்தை முகத்தில் பாருங்கள். பற்பசை விளம்பரத்திற்கு போஸ் கொடுப்பது போல சிரிக்கிறார் அல்லவா? இப்போது சொல்லுங்கள் நகை மோகம் பொதுவானது தானே!


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 02

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

★ முதல் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
★ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
★ பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
★ முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பைனப்பிள் பஞ்ச்

**தேவையானவை:**

அன்னாசிப் பழம்-01
எலுமிச்சம் பழம்-02
சீனி - 1 1/2 கோப்பை
எலுமிச்சம் பழத்தின் மேல் தோல் துருவியது - 1/2 தேக்கரண்டி
சோடா - 2 போத்தல்
ஐஸ் கட்டிகள்-பரிமாறுவதற்கு

**செய்முறை:**

01. அன்னாசிப் பழத்தின் தோலைச் சீவி, பழத்தை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

02. மிக்ஷரில் போட்டு சுமார் 2 கோப்பை தண்ணீர் விட்டு சாறைப் பிழிந்து எடுத்துக்கொள்ளவும்.

03. சீனியில் ஒரு கோப்பை தண்ணீர் விட்டு கம்பிப் பதத்தில் பாகு தயாரிக்கவும். பாகை ஆறவைக்கவும்.

04. அன்னாசிப் பழச்சாற்றுடன் சீனிப் பாகு, எலுமிச்சம் பழச்சாறு, எலுமிச்சம் பழத்திலிருந்து துருவிய மேல் தோல் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கவும். பின் ஃபிரிட்ஜில் வைக்கவும்.

05. பரிமாறுவதற்குமுன் சோடாவை விடவும். அளவாக ஐஸ் கட்டிகள் போட்டுப் பரிமாறவும்.

## விளம்பரமல்ல-வித்தியாச விருந்து




### 30 நாட்களில் தமிழ் கற்கலாம்?

### வாருங்கள் தமிழ் கற்போம்!

1. புனல்-நீர்
2. பருதி- சூரியன்
3. தையல் - பெண்
4. தார்- மாலை
5. தெண்ணீர்- தெளிந்த நீர்
6. பாங்கி-தோழி
7. குஞ்சு-மயிர்
8. பதடி-பதர்
9. பேழை - பெட்டி
10. திரை- அலை
11. கிம்புரி-யானை
12. ஈசர்- சிவபெருமான்
13. புரவி- குதிரை
14. உளை - பிடரிமயிர்
15. திறைகள்- பேரரசனுக்கு சிற்றரசன் செலுத்தும் வரி
16. தேயம்- நாடு
17. நாமம்- பெயர்
18. புகல்-கூறு
19. வெகுவரிசை- பெரும்பரிசு
20. ஏகு-செல்
21. மருங்கு-பக்கம்
22. பொழில் -சோலை
23. மாற்றம்- செய்தி
24. ஒட்டலன்- பகைவன்
25. காமருணி- விரும்பத்தக்க இரத்தினம்
26. நன்கலம் - நல்ல அணிகலம்
27. காலார்- கல்வி முதலியன நிரம்பாத கீழ் மக்கள்
28. பாராபர்- பக்கத்தவராவர்
29. கடுவிடம்- கொடிய நஞ்சு
30. பணி - பாம்பு
31. பிரளயம்- உலகம் அழியும் இறுதிக் காலத்தில் எழும் வெள்ளம்
32. விசும்பு- வானுலகம்
33. வாவி- குளம்
34. மெய்- உடல்
35. பொத்து- மூடு
36. ஒறாது- தண்டிக்காமல்
37. பேதை- அறிவில்லாதவன், அறிவிலி
38. நாக்கோடாமை- சொன்ன சொல் தவறாதிருத்தல்
39. நாரியார்- அறிவுத் தெளிவு பெறாத இளம் பெண்கள்
40. பூ - உலகம்
41. ஈசல்- மழைக் காலத்தில் இறக்கையுடன் பறக்கும் செல்
42. புதல்வர் - குழந்தை
43. நறவு- தேன்
44. சபை- கற்றோர் நிறைந்த இடம்
45. வரிசை- சிறப்பு
46. அகத்தியம்- கட்டாயம்
47. வாது- மாறுபட்ட பேச்சுச் சண்டை
48. கலைவாணர்- கலைக்காக வாழ்பவர்
49. தேராமல்- ஆராயாமல்
50. உழுவலன்பு- சிறந்த அன்பு
51. ஒருங்குறல்- ஒன்றுபடுதல்
52. பொருப்பு- மலை
53. பெருமான்- சிறந்தவர்
54. இசை- புகழ்
55. கவினுலகம்- அழியா உலகம்
56. ஏடு- பத்திரிகை (ஓலைச்சுவடி)
57. கட்டுக்கோப்பு- விதிமுறை அமைப்பு
58. கருவூலம்- சேமிப்பிடம்
59. பிரபந்தம்- சிற்றிலக்கியம்
60. கேளிர்- உறவினர்

## தேன் கிண்ணம்





### நிச்சமற்ற......

நான்
சேமித்துவைத்தெல்லாம்
அவளது நினைவுகளையும்
அவளனுப்பிய
பழைய பல்லவிகளையும்தான்
••
என்ன செய்ய
என் இயலாமையை
அவள்
இழுத்துப்போட்டுவிட்டு
ஓடிவிட்டாள்.
••
காலத்தை
கிடித்துத் துப்பிய என்
ரணங்கள் அவளுக்காக
ரட்சித்துக் கொண்டிருக்கின்றன.
••
கண்ணீரோ என் வடிகால்
அதனால்தான்
என்
கண்களின் ஓரங்களெல்லாம்
கால்வாய்
வெட்டிக்கொண்டிருக்கிறேன்.
••
சலங்கை சப்தமே
என் உறைந்து போன
ரத்தக்கட்டியில்
இறுகிப்போயிருப்பது
காயங்கள் மட்டுமல்ல
நீ நிழற்றிவிட்டுப்போன
மாயங்களும்தான்.
••
வானம் விழப்பார்க்கிறது
பாதுகாத்துக்கொள்
உன்
பார்வைகளை

**கிண்ணியா சபருள்ளா.**

### காதல் பயில்வான்!

அவள் காதல் செய்தான்.
அவனுக்கும் ஒரு
பெண் கிடைத்தது.
மகிழ்ந்தான்.

உலகத்தையே குச்சியாக்கிக்
காது குடைந்தான்.
அந்த வீட்டுத் திண்ணையிலும்
இந்த வீட்டுத்
திண்ணையிலும் அமர்ந்து
கனவுகண்டான்.

இல்லாத ஒன்று
இருப்பதாகக்
கற்பனை செய்தான்.

காதலினால் தொழில் போனதால்
காதலையே தொழிலாக்கினான்.
காலத்தை விரயமாக்கும்
நண்பர்களோடு சேர்ந்து
நேரத்தை விழுங்கினான்.

நாட்டுப் பிரச்சனையும்
வீட்டுப்பிரச்சனையும்
அவனுக்குக்
கோயிலில் தோலைந்துபோன
பழைய செருப்பாக்கியது!

கொஞ்சம்கூடக்
கவலையில்லை!
அவன் ஒரு
காதல் பயில்வான்!
காதல் வீரன்!!
ஆதலினால்
வழமைபோல்
ஊர் சுற்றினான்.

வழமைபோல்
வீதி அளந்தான்.
வழமைபோல்
அவனிடம் பிச்சை கேட்கும்
ஒரு இளவயதுப்
பிச்சைக்காரன்–இன்று
அவனைக் கண்டும்காணாமல்
விரைந்து சென்றது
அவனைத் துக்கப்பட வைத்தது.

பிச்சைக்காரனை வழி மறித்துக்
காரணம் கேட்டான்.
பிச்சைக்காரன் சொன்னான்
"இன்று என்
காதலியைச் சந்திக்கவேண்டும்!!"

**எம்.சுரேஷ்.**



### ஏன் உடைகள்?



கலவிப் பொழுதைக் கௌரவிக்க
காதலியே வாடி! – நீ
கவிஞன் ஆவல் தீர்க்க வில்லை
இவன் முகத்தே தாடி!

சோடிக் கயல் தோற்கு முன்றன்
விழியிரண்டின் வண்ணம்! – நிதம்
தேடிவந்து பருகின்றேன்
தே(ன்)வதையுன் கன்னம்!

முன்னிற்கும் சதைக்கனிகள்
பங்கயத்தின் மொட்டு! – உன்
பன்னிரைகள் ஆழிமுத்து;
பகரும் மொழி மட்டு!

அன்னங்கள் நாணுமடி
அழகுநடை கண்டு: – நாளும்
மன்னனிவன் கைச்சிறையில்
மணக்கும் 'மலர்ச் செண்டு!'

வாழையதன் பரிசளிப்போ
வடிவான தொடைகள்! – நிசியில்,
காளையிவன் அயலில் வந்தால்,
காவலுக்கேன் உடைகள்?

**அ.கௌரிதாசன்–ஆலங்கேணி கிழக்கு.**

### வேகம்!

தந்திச் செய்தி
உரியவர்க்கு கிடைக்கவில்லை.
வதந்திச் செய்தி
உலகெங்கும் நொடியில்
பரவியது!

### இன்றைய செய்தி!

அமைதி வேண்டி
பிரார்த்தனை நடத்தினார்கள்–
ஆயுத முனையில்!

### விசித்திரம்

பனந்தோப்பில் வைத்து
கடித்த 'புலி'யை
தேயிலைத் தூரில்
தேடுகின்றார்கள்!

### பிரார்தனை

'சவப் பெட்டி'
கடைக்காரன்
சாம்பிறானி போட்டு
வேண்டுகின்றான்
யுத்தத்தை அருளும்படி!

### யுத்தம்!

சமாதானம் பற்றி
பேசியவர்களின்
சாப்பாட்டு மேசையில்
'புறாக்கறி!

**கோவுஸ்–ராம்ஜீ–எல்ல.**

### ஏஜென்சி

ஏஜென்சி வேலைக்கு,
எத்தனை பேர் போட்டி
வட்டி என்னை
வாட்டுகிறது ஜேர்மனை
சாட்டி.

நடுவில் முறைவிட்டு
நறுக்கென்று வார்த்தை
நாவில் வராமல்
நாளெல்லாம்
அலைய வைப்பார்.

நூறில் ஒன்று தான்
விமானத்தில் பறக்குது–மிகுதி
தொன்னூற்றி ஒன்பது
லொட்ஜில் தூங்குது

அதோ அந்த ஏஜன்சி
பின்னால் நாலு
இளைஞர்கள்

**யாழ்.ஈஸ்வரன்**



### இருளுக்குள் சூனியம்!



எழில் மலையகம்
இதய வரட்சிகள்!
பசுமை தேயிலைகள்
பட்டினி வயிறுகள்!
காலக்காற்றில்
அடித்துச் செல்லப்படாத
'அனாதை' குப்பைகள்!



உழைப்புப் பூமியின்
'ஊமையர்' போரில்
நாளும் மரணிக்கும்
நம்பிக்கை சொப்பானங்கள்!

வாழ்க்கை வானில்
வட்டமிடும் சம்பளப்புறா
தோட்டாக்கூரைகளை
தூரநின்றும் பார்ப்பதில்லை!



கண்களை விற்றும்
சித்திரம் கொடுத்தார்;
கால்களை ஒடித்தும்
ஊழியம் செய்தார்;

என்றோ மாறும்
என்றே வாழ்ந்தார்;
இன்றும் மாற்றம்
இருளுக்குள் சூனியம்!

'மடமை'ப் போர்வையை
மாமாங்கமாய்ப் போர்த்தி
'அறியாமை' தலைகளில்
உட்கார்ந்து கொள்ளும்
'ஓணான் தலை'களின்
உருப்படா–உரையினால்
என்றும் மலையகம்
இருளுக்குள் சூனியம்!

**நா.ஜெயபாலன்.**

### வேறொரு விதி செய்வோம்!

உன் புன்னகையின்
ஞாபகங்களில்
இந்த–
சிலுவையினைச்
சுமந்து வந்தேன்...!
காதலி....
நீ இன்னுமா தூரம்....?
▫▫
ராவுகளைப் போல–
பகல்களும் இப்போ–
எனக்குள்
கறுப்பாகத்தான்
கரைந்து போகிறது...!
என் சிதையே....
நீ–
எந்தத்தீவில் இருக்கிறாய்....?
▫▫
நாம்–
இருவரும் பார்த்துக்கொண்ட
ஒரு–
இனிப்பான பொழுதினில்
இதயங்களைத் தொலைத்தோமே....
ஏனடி–
இப்போ....
இருவருமே பார்த்துக் கொள்ளாமல்
பிரிவுகளாலா
சிதைந்து போனோம்....?
▫▫
தெரியுமா.....?
உன் ஞாபக அலைகள்
இன்னும் எனக்குள்
நுரைக்க நுரைக்க–
அடித்துக் கொண்டேயிருக்கிறது..!
தேவி எப்படியிருக்கிறாய்....?
ஒரு ஆறுதலுக்காக–
உன் சுகத்தையாவது
சொல்லியனுப்பேன்....
அஞ்சலில் வேண்டாம்...!
ஒரு–
அனுமாரிடமாவது....
▫▫
பூஜைக் கனவுகளோடு–
பூத்துக் கொண்ட
நம் மலர்கள்
இறுதியாய்...
ஒரு சவப் பெட்டியின் மேலா–
சாத்தப் படுவது...?
▫▫
வேண்டாம்–
'நிலா'.... வேண்டாம்...!
காதல் மீது பிரிவுக்கு
அப்படியொன்றும்–
பிரிக்க முடியாத காதலில்லை..!
நம் உறவுகொண்டு–
இந்தப் பிரிவுதனை
உடைத்து எறி கண்மணி!
▫▫
காதலர்கள்–
செத்துச் செத்து
காவியங்கள் படைத்தது போதும்!
வா காதலீ...
இனியாவது–
வாழ்ந்து கொண்டே
காதலுக்காய்
ஒரு–
வரலாறு படைத்துப் பார்ப்போம்..!

**அட்டாளைச்சேனை யூயெல் மப்றாக்.**

### வாழ்வு உள்ளவரை

சுகமான என் ராத்திரிகளை
இருளாக்கி சாகடிக்கிறாய்.
எதிர்கால கனவுகளை ஏனடி
தாவணிக்குள் மறைக்கிறாய்

கண்ணீரில் கவிபாடி நீயும்
கவிதையாக்கி வடிக்கிறாய்

பாறையிலே தானே நீயும்
காதலை எழுதிச் சென்றாய்?
பார்வைகளை மட்டும் ஏனோ
பாதைகளில் மறைக்கிறாய்!


சுமையான உன் சுகங்களுடன்
என் ராத்திரிகள் உறங்குகின்றன.

**தொ.லோஜனா–கொழும்பு–15.**

### "சந்தோஷம்"

"அது
நான்
கர்ப்பப்பையில் இருக்கும் போதே
கழன்று விழுந்த
கறுப்பு விலாசங்கள்....!"

**அ.சுதாசேகர்–பொத்துவில்–03.**




## இந்த வாரம் உங்கள் பலன்

**(09.09.95 முதல் 09.09.95 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், வெள்ளி |
| கன்னி | - புதன் |
| துலாம் | - இராகு, செவ்வாய் |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்–விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், நஷ்டம். | பகல் 12 மணி |
| திங்கள்-மனக்கவலை, குடும்ப சுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| புதன்- எதிர்பார்த்தகருமம் வெற்றி, உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பகல் 11 மணி |
| சனி- பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, தொழில் மந்தம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்-உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- இனசன விரோதம், மனக்கவலை. | மு.ப. 9 மணி |
| சனி- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பொருள்வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- வீண்கவலை, மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, ஏமாற்றம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| சனி- தொழில் பலிதம், வணவரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, கௌரவம் . | பி.ப. 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- வீண்மனஸ்தாபம், புதிய நட்பு. | பி.ப. 1 மணி |
| சனி- பொருள்வரவு, காரயானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி-வீண்குறை கேட்டல், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- கௌரவம், பொருள்வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- உயர்ந்த எண்ணம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவக் குறைவு. | காலை 6 மணி |
| புதன்- செய்தொழில் முயற்சி, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வியாழன்- பொருள்வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்நத நிலை, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனக்கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்-உயர்ந்த நிலை, உறவினர் மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி-பொருள்வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -2

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, வீண்தொல்லை. | காலை 7 மணி |
| செவ்வாய்-உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, உறவினர் நிலை. | பகல் 12 மணி |
| சனி- வீண்மனஸ்தாபம், முயற்சி தடை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பொருள் பேறு. | காலை 6 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்கை, இனசன விரோதம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன்படல். | காலை 7 மணி |
| வியாழன்- புதிய நட்பு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி-அந்நியர் சகாயம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- கௌரவக் கேடு, கடன் பயம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் பேறு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- வீண் தொல்லை, மனக்குழப்பம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- புதிய நட்பு, செலவு. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, பொருள் பேறு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன்படல், வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- உயர்ந்நத நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7


### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-முயற்சி பலிதம், உயர்ந்நத நிலை. | காலை 7 மணி |
| புதன்- புதிய நட்பு, பொருள்வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி | காலை 6 மணி |
| வெள்ளி- உறவினர் கலகம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6





## கல்வியைத் தேடு

இளமை வயதில் கற்பதில்
என்றும் ஆசை பெருக்கிடு!
வளமாய் வாழ கல்வியே
வாழ்வில் வழியினை வகுத்திடும்!

கள்ளம் கபடம் மனதிலே
காலம் யாவும் சூழ்தலை
கல்வி ஒன்றே தடுத்திடும்!
கனிவாய் வாழச் செய்திடும்!

நேராய் வாழும் மனத்திடம்
நித்தம் கற்கும் கல்வியினால்
வேராய் வாழ்வில் ஊன்றிடும்!
வையகம் உன்னைப் புகழ்ந்திடும்!

பிச்சைபுகினும் கல்வியை
பெரிதாய்க் கருதி கற்றிட்டால்
இச்சை போல வாழ்க்கையும்
இனிதாய் இங்கே துலங்கிடும்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

"ஏவல்கள் செய்பவர் மக்கள்; -இவர்
யாவரும் ஓர் குலம் அன்றோ
மேவி அனைவரும் ஒன்றாய் -நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்!

சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறு கதை

## ஒற்றுமை நீங்கின்...

சிங்கபுரி நகரை அடுத்து ஒரு அடர்ந்த காடு இருந்தது. அங்கு ஏராளமான மரம், செடி, கொடிகள் இருந்தன. பல பறவைகளும், மிருகங்களும் வாழ்ந்தன.

அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஒரு தவளையும், ஒரு எலியும். அந்தத் தவளை ஒரு குளத்தில் வசிக்க அதன் அருகே வளை தோண்டி அதில் அந்த எலி வசித்து வந்தது.

சில காலத்திற்கு முன்பு இவை இரண்டுமே நல்ல நண்பர்களாய் இருந்தன. பின் ஏதோ கருத்து வேற்றுமை காரணமாக இரண்டும் விரோதிகளாகி விட்டிருந்தன.

அவை ஒன்றை ஒன்று சந்திக்கும் சமயங்களில் எரித்து விடுவதுபோல் பார்வைப் பரிமாற்றம் செய்து கொள்ளும். மிக மோசமான வார்த்தை களால் திட்டிக்கொள்ளும்.

இவற்றின் விரோதம் நாளுக்கு நாள் வளர்ந்து சென்று கொண்டிருக்கிறதே தவிர சிறிது கூடக்குறையவில்லை.

இப்படிச் சூழ்நிலையில் அவை ஒரு நாள் சற்றும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக்கொண்டன. பார்வையில் நெருப்புப் பொறி பறந்தது. அப்போது எலி,

"இதோ பார் தவளையே! நாம் ஒரு



காலத்தில் நண்பர்களாக இருந்தது உண்மை தான். அப்பொழுது நாம் சேர்ந்தே இருக்க வேண்டும். சிறிது நேரம் கூடப் பிரிந்திருக்கக் கூடாது என்று நினைத்ததும் உண்மைதான். ஆனால், இப்பொழுது நாம் கடுமையான விரோதிகளாக உள்ளோம். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளவே கூடாது என்று நினைக்கிறோம். ஆனால் நாம் இருவரும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்கிறோம். அப்பொழு தெல்லாம் ஒரே அடியில் உன்னைக் கொன்று விடலாம் போல் தோன்றுகிறது. ஆனாலும் என்னை ஓரளவு கட்டுப்படுத்திக் கொள்கிறேன். இதே நிலை தொடர்ந்து நீடிப்பதை நான் விரும்பவில்லை" என்றது.

"அதே எண்ணம் தான் எனக்கும்" என்றது தவளை.

"என் யோசனையைக் கேள். நாம் இருவரும் சண்டை போட்டுக்கொள்வோம். அதில் நான் வென்றால் நீ இந்த இடத்தை விட்டு உடனடியாக வேறு எங்காவது சென்று விட வேண்டும். நான் உன்னிடம் தோற்று விட்டால் உன் கண்ணில் படாதவாறு வேறு இடத்திற்குச் சென்று விடுகிறேன். என்ன சம்மதமா?" என்று கேட்டது எலி.

"சம்மதம். சண்டையை எங்கே, எப்போது வைத்துக்கொள்ளலாம்?" என்று கேட்டது தவளை.

"நாளை சூரிய உதயத்திற்குப் பின் அந்த மைதானத்தில் வைத்துக்கொள் ளலாம்" என்றது எலி.

தவளையும் ஒப்புக்கொண்டது.

□□

மறு நாள் காலை-ஆற்றங்கரைக்குப் பக்கத்தில் இருந்த மைதானத்தில் தவளையும், எலியும் சண்டை போடத் தொடங்கின.

தவளை குதித்துக் குதித்து வந்து எலியுடன் மூர்க்கத்தனமாய் மோதியது. பாய்ந்து பாய்ந்து தாக்கியது. தவளைக்கு இவ்வளவு பலம் இருக்குமென்று எலி நினைக்கவே இல்லை. ஆகவே மிகவும் சிரமப்பட்டு தவளையுடன் சண்டையிட் டது.

சிறுது நேரம் கழித்து எலியின் கை ஓங்கியது. தவளை சிரமப்பட்டு சமாளித்தது. இப்படியே இரண்டும் மாறி மாறி ஆவேசத்துடன் சண்டை போட்டன.


ஒரு சமயம் எலி அடித்த அடியில், தவளையின் கண் அருகே காயம் ஏற்பட்டு, அதிலிருந்து இரத்தம் வடிந்தது. அதைக் கண்ட தவளை எலியை மூர்க்கத்தனமாகத் தாக்கியதால், எலியின் காது கிழிந்து இரத்தம் கொட்டியது.

இருப்பினும் அவை விடாமல் சண்டை போட்டுக் கொண்டே இருந்தன. வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் சண்டை நீடித்தது.

அப்பொழுது, வானத்தில் பசியுடன் வட்டமிட்டுக்கொண்டிருந்த ஒரு பருந்தின் கூரிய கண்களில் அந்த எலியும், தவளையும் பட்டன. உடனே அது கண்ணிமைக்கும் நேரத்தில் 'சர்ர்ர்ர்' றென்று கீழே பறந்து வந்து, ஒரே பாய்ச்சலில் தவளையை ஒரு காலிலும், எலியை ஒரு காலிலும் தூக்கிக் கொண்டு பறந்தது.

அப்பொழுது தான் எலிக்கும் தவளைக்கும் 'சேர்ந்து வாழ்ந்திருந்தால் இந்த ஆபத்து வந்திருக்காதே' என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் ஞானோதயம் தாமதமாகத் தோன்றி என்ன பயன்? இன்னும் சிறிது நேரத்தில் அவை இரண்டையும் பருந்து தின்று விடுமே!

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.09.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 106
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 104

பரிசுக்குரியவர்:
நி. ஆனந்தப் பிரகாசன்
தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பி.எம். மஸ்றூன்<br>அல்-ஹிதாயா வித்தியாலயம், மீராவோடை-04. | த. கலைவாணன்<br>பலாபத்வெல-த.வி., பலாபத்வெல. |
| ஏ.சி. அமீன் சாதிக்<br>ஆண்டு 9எப். அலிஹார் தேசிய பாடசாலை/ஏறாவூர். | செல்வி. யசீதா சத்தியசீலன்<br>கல்முனை-02. |
| எம். கோபிநாத் பொன்னுச்சாமி<br>ஆண்டு 4, பரிசுத்த திருத்துவக் கல்லூரி, நுவரெலியா | எல். தர்மராஜ்<br>இ/பரியோவன் தமிழ் ம.வி., இறக்குவானை. |
| செல்வி. கிஷோகாந்த ஜீவராஜா<br>ஆண்டு 4ஏ. கார்மேல் பாத்திமா தேசியப் பாடசாலை, கல்முனை-01. | ஏ.சி. ப.:.மிதா<br>கல்/ திகழி அரசினர் மு.ம.வி. திகழி, ஏத்தாலை. |
| வீரையா ஜெயச்சந்திரன்<br>இல.47/58, இராஜசிங்க மாவத்தை, ஹெனிட்டன் பிளேஸ், அவிசாவளை. | ஜெ. விஜயசுந்தரி<br>கொ/கொட்டஹேன தமிழ் வித்தியாலயம், கொழும்பு-13. |

## உலக சமய மக்கள் தொகை

### (1992 கணக்கெடுப்பின்படி)

| சமயத்தவர் | எண்ணிக்கை (ஆயிரங்களில்) | விகிதம் |
|---|---|---|
| கிறிஸ்தவர் | 18,33,022 | 33.5 |
| இஸ்லாமியர் | 9,71,329 | 17.5 |
| சமயமற்றவர்கள் | 8,76,232 | 16.6 |
| இந்துக்கள் | 7,32,812 | 13.3 |
| பௌத்தர்கள் | 3,14,939 | 5.7 |
| நாத்திகர் | 2,40,310 | 4.4 |
| சீனப்பழங்குடி சமயம் | 1,87,107 | 3.4 |
| புதிய சமயத்தவர் | 1,43,415 | 2.6 |
| சீக்கியர் | 18,800 | 0.3 |
| பழங்குடி மதத்தவர் | 95,581 | 1.8 |
| யூதர் | 17,822 | 0 |
| ஷாமனிஸ்ட் | 10,493 | 0.2 |
| கன்பியூஷியன்ஸ் | 6,028 | 0.1 |
| பஹாய் | 5,517 | 0.1 |
| ஜைனர் | 3,794 | 0.1 |
| ஷின்டோயிஸ்ட் | 3,223 | 0.1 |
| பிற சமயத்தவர் | 18,586 | 0.3 |
| உலக சனத் தொகை | 54,80,010 | 100 |

## விடுகதைகளும் விடைகளும்

33.5 நான்கு எழுத்துகளில் வரும் ஒரு பூவின் பெயர். முன்னெழுத்தையும் பின்னெழுத்தையும் எடுத்தால் ஒரு மிருகத்தின் பெயர். அது என்ன?

233.5 பிறரைப்பார்ப்பான் தன்னைத்தான் பார்க்கமாட்டான். யார் அவன்?

3. நான்கு கால்கள் உண்டு. நடக்க முடியாத ஒன்று-ஆனால் அது நாற்காலியல்ல; அது என்ன?

4. ஊர் ஒன்றின் பெயரையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பெயர் ஒன்றையும் இணைத்தால் ஒரு படத்தின் பெயர் வரும். அந்தப் படம் எது?

5. பச்சைபூச்சையாய் இருக்கும் பாவக்காயுமல்ல, பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல, உடைத்தால் வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல, உருக்கினால் எண்ணைவரும் நெய்யுமல்ல- அது என்ன?

6. பல பெயர்களைக் கொண்ட ஒருவன் பல நாடுகளை அழிக்கக்கூடிய ஒருவன்-யார் அவன்?

7. நிறம் ஒன்றையும் மதிக்கு ஒத்த சொல் ஒன்றையும் இணைத்தால் திரைப்படம் ஒன்றின் பெயர் வரும். அந்தப் படம் என்ன?

8. மேடைகளில் பார்க்கக் கூடிய ஒன்று; இரண்டாவது எழுத்தை எடுத்தால் பிராணியின் பெயர் ஒன்று வரும். அது என்ன?

9. மூன்று எழுத்துகளில் வரும் ஒரு பெண்ணின் பெயர்-நடு எழுத்தை எடுத்தால் ஆங்கில வார்த்தை, அரபியில் இறப்பைக் குறிக்கும்-தமிழில் உறுப்பைக் குறிக்கும் ஆனால் ஊமைக்கு உதவாத ஒன்று. அந்தப் பெயர் என்ன?

10. நாம் பார்க்கும் படத்தை பிறர் பார்க்க முடியாது. பிறர் பார்க்கும் படத்தை நாம் பார்க்க முடியாது. அது என்ன?

**விடைகள்:**

1. தாமரைப் பூ 2. கண்ணாடி
3. தவளை 4. ரங்கூன் ராதா
5. ஆமணக்கு விதை
6. காற்று 7. கறுப்பு நிலா
8. நாடகம் 9. மௌனத்
10. கனவு

ஏ.ஆர்.பாத்தி-மாபர்கின்
மட்/காத்தான்குடி.

## வாரம் ஒரு நாடு

### ஃபிரான்ஸ்



**தலைநகர்:** பாரிஸ்
**பரப்பளவு:** 5,47,026 சதுர கிலோமீற்றர்
**மொழி:** பிரேஞ்சு மற்றும் வட்டார மொழி வழக்குகள்.
**எழுத்தறிவு:** 99%
**சமயம்:** கிறிஸ்தவம்
**தனிநபர் வருமானம்:** 18300 டொலர்
**அமைவிடம்:** மேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளது. வடகடல் மற்றும் அத்லாந்திக்-மத்தியதரைக் கடல்களில் கடற்கரைப் பரப்பைக் கொண்டுள்ளது. வடக்கில் பெல்ஜியம் மற்றும் லக்சம் பேர்க்கும்; வடகிழக்கில் ஜேர்மனியும்; கிழக்கில் சுவிற்ஸர்லாந்தும், இத்தாலியும்; தென்மேற்கில் ஸ்பெயினும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:** பிரேஞ்சுப் புரட்சியுடன் (1789-93) மன்னராட்சி மறைந்தது தொடர்ந்து முதல் குடியரசு. நெப்போலியன் (1804-14) முதல் சாம்ராஜ்யத்தை நிறுவி னர். இரண்டாம் குடியரசு (1848-52); மூன்றாம் குடியரசு (1871-1946); நான்காம் குடியரசு (1946-58). 1958 முதல் ஐந்தாம் குடியரசு. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போரில் ஃபிரான்சுக்கு மிகப் பெரும் நஷ்டங்கள் ஏற்பட்டது. அதிபர் நேரடி யாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். பதவிக் காலம் ஏழு ஆண்டுகள். அதிபரே பிரதமரை நியமனம் செய்கிறார்.
**பொருளாதாரம்:** மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் விவசாயம் நடை பெறுகின்றது. கோதுமை, பார்லி போன்றவை முக்கிய விளை பொருட்கள். இரசாயனப் பொருள் கள், பட்டு, பருத்தித் துணிகள், மோட்டார்கள், விமானங்கள், கப்பல்கள், நுண்கருவிகள், மின் கருவிகள், வாசனைப் பொருட்கள், மதுவகை போன்றவை முக்கிய தொழில்களாகும். கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட நகர வளர்ச்சியும், விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சியும் ஆழ்ந்த அறிவுப்பூர்வமான முன்னேற்றத்தை ஃபிரெஞ்சு மக்களுக்கு அளித்துள் ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த எடிடோ ருஸ்மேனோ என்பவர் ஜிம்மி என்ற குருவியை செல்லமாக வளர்த்தார். 1920ம் ஆண்டு ஆகஸ்ட் 3ம் திகதி அது இறந்தது. வெள்ளை சவப்பெட்டி, அலங் கரிக்கப்பட்ட குதிரை வாகனம், பாண்ட் வாத்தியம் என மிகச் சிறப்பாக ஏற்பாடுக்ள செய்து அந்தக் குருவியை அடக்கம் செய்தார் ருஸ்மேனோ.



# ஒரு நிமிஷ நிசப்தம் 8

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"சபரி கொலையான செய்தி இன்னிக்கு பேப்பர்ல வந்திருக்கம்மா. ஏன் எதுக்காக இந்த கொலைன்னு யாருக்கும் தெரியாது. போலீஸும் திணறிட்டிருக்காங்க....! 5-வது கி.மீ.கல் பாலத்துக்குக் கீழே பிணம்ன்னு நியூஸ் படிச்சதுமே உன்னைக் கடத்திக்கிட்டு போன ஆசாமியாத்தான் இருக்கணும்ன்னு நினைச்சேன். போலீஸ்ல போய் சொல்லலாம்ன்னு யோசிச்சேன்...... போலீஸ்ல போய் சொன்னா அநாவசியமா உன்னோட பேர் தெருவுக்கு வரும். பின்னாடி நடக்கப் போகிற ஒரு நல்லகாரியத்துக்கு அது இடைஞ்சலாயிடும்ன்னு நினைச்சுத்தான் பேசாமே இருந்துட்டேன்...."

"என்னோட சபரியை நானே அநியாயத்துக்கு கூட்டிக்கிட்டு போய் சாகடிச்சுட்டேன்பா! அவர் கடத்தல் திட்டம் வேண்டாம்ன்னு எவ்வளவோ தடவை சொன்னாரப்பா! என்னோட திமிர்த்தனம்....நான் தான் கேக்கலை..."

சொல்லிவிட்டு அழுகையை மறுபடியும் புதுப்பித்துக் கொண்டாள் அபிநயா. கேவல்களும், விம்மல்களுமாய் ஐந்து நிமிஷம் ஓடியது.

சந்தானகிருஷ்ணன் நாற்காலியை விட்டு எழுந்து வந்து-அபிநயாவுக்கு அருகே கட்டிலில் உட்கார்ந்தார்.

"இதோ...பார் அபிநயா.... இனிமேத்தான் நீ ஜாக்ரதையா இருக்கணும். நீயும் சபரியும் விளையாட்டாய் போட்ட திட்டம் யார்க்கோ தெரிஞ்சிருக்கு.....அவங்க உங்களுக்கு தெரியாமே ஃபாலோ பண்ணி நான் பணப் பெட்டியைக் கொண்டு போய் போட்டதும்-சபரி வந்து எடுக்கிறதுக்கு முன்னாடி-அவங்க எடுத்திருக்காங்க; தடுத்த சபரியை கொன்னிருக்காங்க. நீயோ சபரியோ இந்த திட்டத்தை வேற யார்கிட்டேயாவது சொன்னீங்களா?"

"இ...இல்லேப்பா...."

"நீ இல்லேன்னு சொன்னா எப்படிம்மா....? விஷயம் எப்படியோ கசிஞ்சு யார் காதுக்கோ போயிருக்கு.....சபரி தன்னோட ப்ரண்ட்ஸ் யார்கிட்டயாவது சொல்லியிருக்கலாம்....."

"அவர் அப்படி சொல்லக்கூடியவர் இல்லேப்பா...."

"அபிநயா...! நடந்த சம்பவம் ரொம்பவும் மோசமான சம்பவம்.... இதுல நீ சம்பந்தப்பட்டிருக்கிற விஷயம் வெளியே தெரிஞ்சா அந்த அவமானம் என்னிக்குமே நின்னுடும்....நீ ஒருத்தனால கடத்தப்பட்டிருக்கேங்கிற விஷயம் உன்னைக் கட்டிக்கப்போற மாப்பிள்ளைக்குத் தெரிஞ்சா-அது அவனோட மனசுல ஏகப்பட்ட சந்தேகங்களைக் கிளப்பும்...."

"இனிமே எனக்கு கல்யாணமா?" அபிநயா அழுகையோடு புன்னகைத்தாள். "இருதயம் மினிஸ்டர் போஸ்ட் இல்லேப்பா... நினைச்சவங்களை எடுத்து அதுல உட்கார வெக்கறதுக்கு..."

சந்தானகிருஷ்ணன் கண்கள் கலங்க மகளையே பார்த்தார்

**ம**ருதமலை போகும் ரோடு.

5-வது கி.மீ.கல் அருகே போலீஸ் ஜீப் நின்றிருந்தது. இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத்தும், சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷும் பாலத்துக்கு கீழே நின்றிருந்தார்கள். காலை எட்டுமணி வெய்யில் பிடரியை லேசாய் வெம்மைப்படுத்த-அதைப் பொருட்படுத்தாமல் ஜனங்கள் சின்னச் சின்ன கும்பல் போட்டு திட்டுத் திட்டாய் நின்றார்கள்.

சபரியின் கால்கள் வெள்ளை விரிப்பையும் மீறி வெளியே நீட்டிக் கொண்டிருக்க-ஈக்கள் 'ஜோ' வென்று மொய்த்தது. மார்பில் உறைந்துபோன இரத்தம் கருஞ்சிவப்பில் தெரிந்தது. போட்டோகிராபரும், ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எடுப்பவரும் தத்தம் வேலைகளை முடித்துக் கொண்டு சிகரெட் புகைகளோடு ஒதுங்கியிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் தன்னுடைய தொப்பியைக் கழற்றி கக்கத்தில் வைத்துக்கொண்டு வழுக்கைத் தலையைக் கீறிக்கொண்டார். முப்பது வருஷ போலீஸ் அனுபவம் கண்களில் தெரிந்தது. அடுத்தவார இறுதியில் ரிடையர்மெண்ட் வாங்கப் போகும் அவர் இந்த சபரி கேஸைத் தொட ஆரம்பித்தார்.

"கான்ஸ்டபிள்...."

"ஸார்..."

மார்ச்சுவரி வேனுக்காக காத்திருந்த கான்ஸ்டபிள் ஒருவர் வேக வேகமாய் ஓடிவந்தார். கன்னைய பிரசாத் கேட்டார்.

"பாடியை யார்மேன் மொதல்ல பார்த்தது?"

"அதோ.... அந்த ஆள் தான் ஸார்...."

கன்னைய பிரசாத் திரும்பிப் பார்த்தார்.

தலையில் முண்டாசுக் கட்டோடும்-உடம்பு பூராவும் போர்த்துக் கொண்ட போர்வை யோடும் அந்த ஆள் மரத்தடியில் நின்றிருந் தான்.

"கூப்பிடு மேன் அந்தாளை.."

கான்ஸ்டபிள் கையசைத்து அந்தாளைக் கூப்பிட அவன் ஓடிவந்தான். கன்னைய பிரசாத் அவனை கையாள ஆரம்பித்தார்.

"பொணத்தை நீதான் மொதல்ல பார்த்தியா?"



"ஆமாங்க..."

"உம்பேர்?"

"மாதய்யனுங்க..."

"பாலத்துக்கு கீழே கிடந்த பொணம் உன்னோட கண்ணுல எப்படிப் பட்டது?"

"அந்தக் கூத்தை ஏன் கேக்கறீங்க... இன்ஸ்பெக்டரய்யா? நா ஒரு ஆடு மேய்க்கிற இடையனுங்க.... நூத்தி சொச்ச ஆடு நம்ம பட்டியில இருக்குங்க.. நேத்திக்கு ராவு ஆட்டுக்குட்டி ஒண்ணு பட்டியிலிருந்து தறாவுந்து போச்சுங்க.... அதத்தேடிக்கிட்டு லாந்தர் வெளக்கை கையில எடுத்துட்டு-ராத்திரி பத்து மணிவரிக்கும் அலைஞ்சேனுங்க... குட்டி ஆப்படலைங்க... கடைசியில இப்படி ரோட்டோரமா வந்து பாலத்துக் கடியில 'ப்பா......பா.....பா...' ன்னு சத்தம் குடுத்துகிட்டே குனிஞ்சு பார்த்தனுங்க.... யாரோ உள்ளார விளுந்து கிடந்தாங்க... வெளக்கை கிட்டக்க கொண்டாந்து பார்த்தேனுங்க..... இரத்தத்துல விளுந்து கிடந்த ஆளைப் பார்த்ததும் இது முடிஞ்சுபோன சமாச்சாரம்ன்னு நெனைச்சு வடவள்ளி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி தகவல் சொன்னேனுங்க..."

கன்னைய பிரசாத் கக்கத்திலிருந்த தொப்பியை மறுபடியும் தலைக்குக் கொடுத்துவிட்டு மாதய்யனை தீவிரமாய் பார்த்தார். பிறகு கேட்டார்.

"நீ பாலத்தை விட்டு வெளியே வர்றப்ப ரோட்ல வேற யாரையாவது பார்த்தியா...? கார் ஏதாவது நின்னுட்டிருந்ததா?"

"ரோட்ல வெச்சு நா...யாரையும் பார்க்கல்லீங்க... காரையும் நா பார்க்கல்லீங்க... ஆனா.....நா பொணத்த பார்க்கிறதுக்கு முன்னாடி... அதோ அந்த கள்ளிப்பாறைக்கு பக்கத்தாலே ஒரு பட்டணத்து பொண்ணு நின்னுட்டிருந்துச்சுங்க..."

கன்னைய பிரசாத்தின் போலீஸ் ரத்தம் சுறுசுறுப்பானது.

"பொண்ணா?"

"ஆமாங்க..."

"எங்கே நின்னுட்டிருந்தா?"

"அதோ அந்த கள்ளிப்பாறைக்குப் பக்கத்தாலே...."

"எத்தனை மணிக்கு அந்தப் பொண்ணைப் பார்த்தே?"

"எட்டரை மணி இருக்குமுங்க....காத்து கறுப்பு உலாவற நேரத்துல இங்க ஏன் நின்னுட்டிருக்கேன்னு சொல்லி நான்தான் விரட்டிவிட்டேன்."

"பொண்ணு எப்படியிருந்தா?"

"லாந்தர் வெளிச்சம் கம்மியாக இருந்ததாலே அந்தப் பொண்ணோட மூஞ்சிய சரியா பாக்க முடியல்லீங்க..."

"அந்தப் பொண்ணு எந்தப் பக்கம் போனான்னு பார்த்தியா?"

"ரோட்டுப்-பக்கமாத்தான் போனாங்க!"

கன்னைய பிரசாத் சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷிடம் திரும்பினார். "ஏ..லேடி இன்வால்வ்ட்..."

"மே....பி....ஸார்"

"வா...மேன் இங்கே...!"

"ஸார்...."

"பிரஸ்ஸுக்கு நியூஸ் கொடுத்தது யாரு?"

"நாங்க யாரும் தரலை ஸார்...."

"நீங்க நியூஸ் தராமே 'தினஜோதி' பேப்பர்ல எப்படி அந்த மர்டர் நியூஸை போட்டான்...? போட்டோவோட கொட்டை எழுத்துல போட்டிருக்கான்... மேன்..."

"வடவள்ளி போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கேஸ் ரிப்போர்ட்டுக்காக வந்திருந்த அந்த பத்திரிகையோட நிருபர் விஷயத்தை எப்படியோ கேள்விப்பட்டு ஸ்பாட்டுக்கு வந்துட்டார் ஸார்..."

கான்ஸ்டபிள் சொல்லிக் கொண்டிருந்த அதேவிநாடி. ஜி.ஹெச். மார்ச்சுவரியின் வெள்ளைநிற வேன் ஒரு சின்ன இரைச்சலோடு பாலத்துக்கு அருகே வந்து நின்றது. நீலநிற யூனிபார்ம் தரித்த சிப்பந்திகள் அழகான ஸ்ட்ரச்சரோடு வெளிப்பட்டார்கள். கன்னைய பிரசாத் சப்-இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

"மிஸ்டர் கதிரேஷன்..... பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ண பிரைமரி ஸ்டெப்ஸ் எடுக்கணும்.... கொஞ்சம் கவனிங்க....."

"எஸ்.... ஸார்..." கதிரேஷன் நகர்ந்தார்.

"கான்ஸ்டபிள்....!"

"ஸார்......"

"ஆள் யாருன்னு கண்டு பிடிச்சீங்களா....?"

அந்த ஆள் வேலை செய்யற கம்பெனி விசிட்டிங்கார்டே அவரோட சட்டைப் பையில இருந்தது ஸார். போன்நெம்பர்க்கு கான்டாக்ட் பண்ணி ஆளை கன்பர்ம் பண்ணிட்டோம். கொலையான ஆள் பேர் சபரி-அம்மாவோடு இதே ஊர்லதான் தங்கியிருக்கார். டெத் நியூஸை அவங்க அம்மாகிட்டே கன்வே பண்ணப் போனேன் ஸார்... வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்ல விசாரிச்சேன்... அந்த அம்மாவுக்கு நேத்து ராத்திரி திடீர்ன்னு ப்ரஷ்ஷர் அதிகமாயி அண்கான்ஷியஸ் ஆயிட்டாங்களாம். கோமா ஸ்டேஜ். ஜி ஹெச்ல அட்மிட் பண்ணியிருக்காங்களாம்..."

"அடப்பாவமே!" என்றார் கன்னைய பிரசாத். மேற்கொண்டு ஏதோ சொல்வதற்கு வாயைத் திறந்த விநாடி சப்-இன்ஸ்பெக்டர் கதிரேஷன் அவசரக் குரலில் கூப்பிட்டார்.

"ஸார்.."

திரும்பினார் கன்னைய பிரசாத்.

"என்ன கதிரேஷன்?"

"ஒரு நிமிஷம் இப்படி வர்றீங்களா ஸார்..?"

"எனிதிங் இம்பார்ட்டென்ட்.....?"

"எஸ்.... ஸார்...."

கன்னைய பிரசாத் சபரி கிடந்த இடத்தை நோக்கிப் போனார். ஸ்ட்ரெச்சரில் ஏறியிருந்த சபரியின் தலை-விரிப்பு விலகியிருக்க கோரமாய் தெரிந்தது.

கதிரேஷன் சபரியின் தலை அருகே வந்தார்.

"தலை முடியைப் பார்த்தீங்களா ஸார்.....?"

கன்னைய பிரசாத் சபரியின் தலை முடியைப் பார்த்தார். சீவியிருந்த கிராப் காதோரத்திலிருந்து விலகி-வித்தியாசமாய் இருந்தது.

சபரியின் அருகே வந்தார். உற்றுப் பார்த்துவிட்டு கதிரேஷிடம் திரும்பினார். "விக்மாதிரி தெரியுது.." சொல்லிக்கொண்டே உருவினார்.... சிரமமான உருவல்.

சபரியின் தலையிலிருந்த அந்த சுருள் சுருளான விக் கையோடு வந்தது. நெற்றிப் பரப்பிலும், பின்னந்தலையிலும் ஏகமாய் வழுக்கையை வாங்கியிருந்தான் சபரி.

வழுக்கையின் நடுவில் ஒரு தழும்பும் தெரிந்தது.

கன்னைய பிரசாத் அவனையே பார்த்தார்.

"**அ**பிநயா"

மாடி ஜன்னல் வழியாக கீழே தெரிந்த தோட்டத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அபிநயா அப்பாவின் குரல் கேட்டு திரும்பினாள். இரண்டு நாளில் உலர்ந்து போயிருந்தாள்.

"என்னப்பா?" என்கிற மாதிரி பார்த்தாள்.

பேப்பர்ல அந்த சபரியைப் பத்தி ஒரு நியூஸ் வந்திருக்கு. படிச்சுப் பார்க்கப் பார்க்க ஆச்சர்யமாயிருக்கு... நீ அவன் கிட்டயிருந்து தெய்வாதீனமா தப்பிச்சிருக்கேம்மா..."

"என்னப்பா சொல்றீங்க.?"

"அந்த நியூஸை படிச்சு பாரம்மா...."

பேப்பரை மடித்து அந்த செய்தி இருந்த பக்கம் நீட்டினார் சந்தானகிருஷ்ணன். அபிநயா வாங்கி பார்வையை அதன்மேல் போட்டாள்.

**மாஜி தூக்குத்தண்டனை கைதி**
**மருதமலை அருகே கொலை.**

இது பற்றி கூறப்படுவதாவது:

நேற்றைக்கு முன்தினம் மருதமலை போகும் ரோட்டில் 5-வது கி.மீட்டர் கல் அருகே-பாலத்துக்கு கீழே ஒரு இளைஞரின் பிணம் கிடப்பதாக போலீஸுக்கு தகவல் வந்தது. போலீஸார் விரைந்து போய் பிரேதத்தைக் கைப்பற்றினார்கள். அவருடைய சட்டைப் பையில் இருந்த விசிட்டிங்கார்டு மூலம் அவருடைய பெயர் சபரி என்று தெரிய வந்தது. மேலும் அவர் நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிற விபரமும் தெரிந்தது. இது முன் வந்த செய்தி.

ஆனால் நேற்றைக்குக் காலையில் இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் பிரேதத்தை போஸ்ட் மார்ட்டத்துக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது- பிரேதத்தின் தலைமுடி கையோடு வரவே உண்மை புலனாகியது. சபரியின் தலை முழுவதும் வழுக்கையாக இருந்தது மட்டுமில்லாமல் வழுக்கையின் நடுவில் தழும்பொன்றும் இருந்தது.

சில வருஷங்களுக்கு முன்னால் ஆந்திர போலீஸார் தமிழக போலீசுக்கு அனுப்பியிருந்த குறிப்பொன்றில் வேங்கட நாராயணா என்னும் பெயருள்ள தூக்குத் தண்டனை கைதி ஒருவன் அறையிலிருந்து தப்பிவிட்டதாகவும்- அழகான தோற்றம் கொண்ட அவனுக்கு தலை மட்டும் வழுக்கையாய் இருந்ததாகவும் வழுக்கையின் மையத்தில் தழும்பொன்று காணப்பட்டதாகவும் கூறியிருந்தார்கள். போட்டோவையும் இணைத்திருந்தார்கள். அப்போது பி-1 போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டராய் இருந்த கன்னைய பிரசாத் வேங்கட நாராயணாவை கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு முடியாமல் போகவே அதை அப்படியே விட்டு விட்டார்.

அன்றைக்கு ஆந்திரா போலீஸாரிடமிருந்து தப்பிய தூக்குத் தண்டனை கைதி வேங்கட நாராயணா பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் தன் முக அமைப்பை லேசாய் மாற்றிக் கொண்டு- சுருள் சுருளான முடியோடு கூடிய விக்கையும் பொருத்திக்கொண்டு கோவை நிறுவனமொன்றில் வேலைக்கு சேர்ந்து தன் அம்மாவோடு வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறான். பெயரையும் சபரி என்று மாற்றி நன்றாகத் தமிழ் பேசி எல்லோரையும் நம்பவைத்திருக்கிறான், இந்த மாஜி கைதி. இவன் ஏற்கனவே திருமணமானவன் என்றும்- தன் மனைவி சோரம் போனாள் என்பதற்காக அவளை வெட்டிக் கொன்றவன் என்றும் ஆந்திரா போலீஸாரின் குற்ற அறிக்கை கூறுகிறது.

இவனை என்ன காரணத்துக்காக-யார் கொன்றார்கள் என்பது புரியாத புதிராக இருப்பதால் போலீஸார் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் நிருபர்களிடம் கூறுகையில் 'இந்தக் கொலையில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருப்பது உறுதியாகத் தெரிகிறது' என்று கூறினார்.

பேப்பரில் இருந்த செய்தியை படித்து முடித்த அபிநயா முகத்தில் ஏராளமான அதிர்ச்சியை வாங்கியிருந்தாள். வியர்த்துப் போயிருந்தாள்.

"அம்மா..... என்னம்மா.. சொல்றே?"

"என்னால் நம்பவே முடியலைப்பா...."

"போலீஸ் ஊர்ஜிதம் பண்ணிட்டாங்கம்மா..... ஹிண்டு பேப்பர்ல இன்னும் டீடெய்லா போட்டிருக்காம்.... ஆந்திரா டி.ஐ.ஜி. ஸ்பாட்டுக்கு வந்து கன்பர்ம் பண்ணியிருக்கார். வேங்கட நாராயணா வோட போட்டோஸும், சபரியோட போட்டோஸும் ஒத்துப் போகுதாம்-ஃபிங்கர் பிரிண்ட்ஸ் துல்லியமா பொருந்துதாம்....."

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: யூ. உதயகுமார்
வயது: 21
முகவரி: இல. 33/4, ரெரன்ஸ் வீதி, கல்கிசை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பாத்திரிகை வாசித்தல்.



பெயர்: எம். சபருள்ளா
வயது: 25
முகவரி: 93, கும்புக்கந்துறை, தெல்தெனிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.



பெயர்: கே. கர்ணன்
வயது: 28
முகவரி: P.O. BOX- 51586 RIQQA, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு, பாடல்கள்.



பெயர்: அப்துல் ரஷீட்
வயது: 30
முகவரி: P.O. BOX- 3548, SALMIYA-22036, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: ஆர். விமலேஸ்வரன்
வயது: 24
முகவரி: 156, தரவளை வீதி, டிக்கோயா.
பொழுதுபோக்கு: உதைபந்து கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: எம். ருஹுல்லா
வயது: 24
முகவரி: 53, லோவர் வீதி, பதுளை.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: என். ரவியானந்தன்
வயது: 19
முகவரி: டி.எல். சேனாநாயக்க மாவத்தை, பாணந்துறை.
பொ.போ: பத்திரிகை, நண்பர் தொடர்பு

பெயர்: எம். றிஸாத்
வயது: 15
முகவரி: 207, எஸ்.கே. றோட், கல்பிட்டி.
பொ.போ: கிரிக்கெட், புத்தகம்.

பெயர்: கே. மணி
வயது: 24
முகவரி: WUHR-STR-30, 8003- ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை,புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: சின்ன லெப்பை முகமட்
முகவரி: P.O. BOX-921, MEDINAH, K.S.A.
பொ.போ: பத்திரிகை, டி.வி., வானொலி, பேனா நட்பு.

பெயர்: ஆர். சிவா
வயது: 15
முகவரி: 33, பிரதான வீதி, ஹட்டன்.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, விளையாட்டு.

பெயர்: மபூர், மக்கீன்
வயது: 19
முகவரி: 34, பலஸ்பாத், பேருவளை.
பொழுதுபோக்கு: வானொலி, கதைப்புத்தகம்.

# தாய் 40

## மக்சீம் கார்க்கி

சமையலறைப்பக்கம் கண்ணைத் திருப்பிய ரீபின்; "இவன்தான் எபீம்! இங்கேவா எபீம்! இவன்தான் எபீம். இதுதான், பாவெல்! இவனைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று அறிமுகப்படுத்தி வைத்தான் ரீபின்.

பாவெலுக்கு முன்னால் உயரமாகவும் பரந்த முகமும் அழகிய கேசமும் உடையவனாயிருந்த எபீம் நின்றான். சின்னஞ் சிறு கம்பளிக் கோட்டு அணிந்திருந்தான். ஒரு கையில் தன் தொப்பியைப் பிடித்தவாறு, அவன் தன் கண்களைத் தாழ்த்திச் சுருக்கிப் பாவெலைப் பார்த்தான். அவனைப் பார்த்தால் அவன் மிகவும் பலம் பொருந்தியவனாயிருக்கவேண்டும் எனத் தோன்றியது.

"உங்களைச் சந்தித்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி" என்று கரகரத்த குரலில் கூறினான் அவன். பாவெலோடு கைகுலுக்கிய பிறகு, இரு கைகளாலும் சிலிர்த்து நிற்கும் தன் தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டான். பிறகு அறையை சுற்றும் முற்றும் பார்த்தான். அங்குள்ள புத்தகங்கள் கண்ணில் பட்டதும், அவன் அவற்றை நோக்கி மெதுவாகச் செல்ல ஆரம்பித்தான்.

"அவற்றைப் பார்த்துவிட்டான்!" என்று பாவெலை நோக்கிக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே சொன்னான் ரீபின். எபீம் திரும்பி ரீபீனைப் பார்த்தான்; பிறகு புத்தகங்களைக் கவனிக்க ஆரம்பித்தான்.

"படிப்பதற்கு எவ்வளவு விஷயம் இருக்கிறது!" என்று வியந்து கூறினான் அவன். "ஆனால் உங்களுக்குப் படிப்பதற்கு நேரமே கிடையாது. நீங்கள் மட்டும் கிராமத்தில் வாழ்ந்தால் படிப்பதற்கு நிறைய நேரம் கிடைக்கும்..."

"ஆமாம். நிறைய நேரம், குறைய ஆசை! இல்லையா?" என்றான் பாவெல்.

"ஏன்? அங்கும் படிக்க வேண்டுமென்ற ஆசை அதிகம் தான்" என்று தன் மோவாயைத் தடவி விட்டவாறு சொன்னான் அந்தப் பையன். "அங்குள்ள மனிதர்களும் தங்கள் மூளைக்கு வேலை கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். 'புவிஇயல்' இதென்ன புத்தகம்?"

பாவெல் விளக்கினான்.

"எங்களுக்கு இது தேவையில்லை" என்று கூறிக்கொண்டே அந்தப் பையன் அந்தப் புத்தகத்தை மீண்டும் அலமாரியிலேயே வைத்து விட்டான்.

"பூமி எங்கிருந்து வந்தது என்பதைப் பற்றி முஜீக்குக்குக் கவலை கிடையாது" என்று உரத்த பெருமூச்சுடன் பேசத் தொடங்கினான் ரீபின்; "அது கைக்கு கை எப்படி மாறுகிறது என்பதும், மக்களிடமிருந்து பண்ணையார் எப்படி அதைத் தட்டிப் பறிக்கிறார் என்பதைப் பற்றியும் தான் அவனுக்குக் கவலை. பூமி சுற்றிக் கொண்டிருந்தாலும், சுற்றாமல் அப்படியே நின்றாலும் அவனைப் பொறுத்தவரையில் ஒன்றுதான். அந்தப் பூமி அவன் காலடியிலேயே கிடந்தாலும் சரி, அல்லது ஆகாசத்தோடு போய் ஒட்டிக் கொண்டாலும் சரி, அவனுக்கு அது நன்றாகச் சாப்பாடு மட்டும் போட்டால் போதும்!"

"'அடிமை வாழ்வின் சரித்திரம்'" என்று ஒரு புத்தகத்தின் தலைப்பைப் பார்த்து வாசித்தான் எபீம். "இதென்ன, நம்மைப்பற்றிய புத்தகமா?"

"இந்தப் புத்தகத்தில் நமது ருஷ்ய அடிமை வாழ்வைப்பற்றி ஒரு அத்தியாயம் இருக்கிறது" என்று கூறிக்கொண்டே பாவெல் அவனிடம் வேறொரு புத்தகத்தை எடுத்து நீட்டினான். எபீம் அந்தப் புத்தகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தான். பிறகு அதைக் கீழே வைத்துவிட்டுச் சொன்னான்:

"இதெல்லாம் பழைய காலத்து விவகாரம்."

"சரி, உங்களுக்குச் சொந்தமாக நிலம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான் பாவெல்.

"இருக்கிறது. எனக்கும் என் சகோதரர் இருவருக்கும் சுமார் பத்தரை ஏக்கர் நிலம் இருக்கிறது. எல்லாம் ஒரே மணல் வெளி. பாத்திரம் விளக்க உதவுமே ஒழிய, பயிர் செய்ய உதவாத மண்."

ஒரு கணம் கழித்து மீண்டும் அவன் பேசத் தொடங்கினான்:

"நான் நிலத்தை விட்டு விட்டேன். அதை வைத்துக்கொண்டு என்ன பிரயோஜனம்? சும்மா நம்மை வேலை யில்லாமல் கட்டித்தான் போடும்; உணவு தராது. நாலு வருஷ காலமாய், நான் பண்ணைக் கூலியாளாகத்தான் வேலை பார்த்து வருகிறேன். மழைக் காலத்துக்குப் பிறகு நான் இராணுவ சேவைக்கும் செல்ல வேண்டும். 'பட்டாளத்துக்குப் போகாதே, இப்போதெல்லாம் சிப்பாய்களைக் கொண்டு ஜனங்களை அடிக்கச் சொல்லுகிறார்களாம்' என்று மாமா மிகயீல் சொன்னார். ஆனால் நான் போய்ச்சேரத்தான் எண்ணியிருக்கிறேன். ஸ்திபான் ராசின், புகச்சோவ் முதலியவர்கள் காலத்திலும் கூட, பட்டாளத்துக்காரர்கள் ஜனங்களை அடித்து நொறுக்கத்தான் செய்தார்கள். இதுக்கொரு முடிவுகட்ட வேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று அவன் பாவெலைக் கூர்ந்து பார்த்தவாறே கேட்டான்.

"ஆமாம், காலம் மாறத்தொடங்கி விட்டது!" என்று இளம் புன்னகையுடன் சொன்னான் பாவெல். "ஆனால் காலத்தைப் பரிபூரணமாக மாற்றுவது மிகவும் கடினமான காரியம். நாம் சிப்பாய்களிடம் என்ன சொல்ல வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்."

"நாங்கள் அதைக்கற்றுக் கொள்வோம்" என்றான் எபீம்.

"ஆனால், இராணுவ அதிகாரிகள் அதைக்கண்டுபிடித்து விட்டார்களோ, அப்புறம் உங்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள்" என்று எபீமைக் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டே சொன்னான் பாவெல்.

"ஆமாம், அவர்களிடம் இரக்கச் சித்தத்தை எதிர்பார்க்க முடியாது" என்று அந்தப் பையன் அமைதியுடன் ஆமோதித்துக் கொண்டே மீண்டும் புத்தகங்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

"தேநீர் அருந்து, எபீம்" என்றான் ரீபின். "நாம் சீக்கிரம் புறப்பட வேண்டும்."

"அதற்கென்ன? போவோம். அது சரி, புரட்சி என்பது என்ன? பெருங்கலகமா?" என்றான் எபீம்.

அதற்குள் அந்திரேய் அங்கு வந்து சேர்ந்தான். குளித்துவிட்டு வந்ததால் அவனது உடம்பெல்லாம் சிவந்துபோய் ஆவியெழும்பிக் கொண்டிருந்தது; முகத்தில் சோர்ந்த பாவம் காணப்பட்டது. அவன் ஒன்றுமே பேசாமல் எபீமோடு கைகுலுக்கி விட்டு ரீபினுக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்தான். ரீபினைப் பார்த்ததும் இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

"நீ ஏன் உற்சாகமே அற்றுப் போயிருக்கிறாய்?" என்று அவனது முழங்காலில் தட்டிக்கொண்டே கேட்டான் ரீபின்.

"ஒன்றுமில்லையே!" என்றான் ஹஹோல்.

"அவனும் ஒரு தொழிலாளிதானா?" என்று அந்திரேயைப் பார்த்துக் கேட்டான் எபீம்.



"ஆமாம். எதற்காகக் கேட்கிறாய்?" என்றான் அந்திரேய்.

"இல்லை. அவன் இதற்கு முன் எந்த ஆலைத் தொழிலாளியையும் பார்த்ததே இல்லை. அவனுக்கு அவர்களைப் பற்றி ஒரு தனி அபிப்பிராயம்" என்றான் ரீபின்.

"எப்படிப்பட்ட அபிப்பிராயம்?" என்றான் பாவெல்.

"உங்கள் எலும்புகள் கூர்மையானவை, ஆனால் விவசாயியின் எலும்புகள் மொட்டையானவை" என்று அந்திரேயைக் கூர்ந்து பார்த்தபடி சொன்னான் எபீம்.

"முஜீக் தன் கால்களை நிலத்தில் நன்றாகப் பதிய ஊன்றி நிற்கிறான்-நிலம் அவனுக்குச் சொந்தமில்லாவிட்டாலும், நிலத்தில் நிற்கும் உணர்ச்சி மட்டும் அவனை விட்டு நீங்குவதில்லை. அவன் பூமியைத் தொட்டு உணர்கிறான். ஆனால், ஆலைத் தொழிலாளியோ, அப்படியல்ல. அவன் ஒரு சுதந்திரமான பறவை. நிலம், வீடு என்ற எந்தப் பற்றுதலும் அவனுக்குக் கிடையாது. இன்றைக்கு இங்கே, நாளைக்கு எங்கேயோ? ஒரு பெண்ணின் ஆசைகூட, அவனை ஒரே இடத்தில் இருத்தி வைத்து விட முடியாது. அவனுக்கும் அவளுக்கும் ஏதாவது ஒரு சின்னத் தகராறு வந்தாலும் போதும்; உடனே அவளை விட்டு விலகி, வேறொரு இடத்தைத் தேடிப் புறப்பட்டுப் போய்விடுவான். ஆனால் முஜீக் அப்படியல்ல. இடத்திலிருந்து நகராமல் தன்னைச் சுற்றி மேன்மைப் படுத்திக்கொள்ள திரும்புவான். சரி, இதோ உன் அம்மா வந்துவிட்டாள்!" என்று பேசி முடித்தான் ரீபின்.

"சரி, எனக்கு ஒரு புத்தகம் இரவல் கொடுப்பீர்களா?" என்று பாவெலிடம் நெருங்கிவந்து கேட்டான் எபீம்.

"தாராளமாய்" என்றான் பாவெல்.

அந்தப் பையனின் கண்கள் பிரகாசம் அடைந்தன.

"நான் திருப்பித் தந்துவிடுவேன்" என்று அவன் அவசர அவசரமாக பாவெலுக்கு உறுதி கூற முனைந்தான்.

"எங்களூர்க்காரர்கள் இந்தப் பிரதேசத்துக்குத் தார் எண்ணெய் ஏற்றிக்கொண்டு அடிக்கடி வருவார்கள். அவர்கள் மூலம் கொடுத்தனுப்புகிறேன்."

"சரி, போக நேரமாச்சு" என்று தனது கோட்டையும் பெல்டையும் எடுத்து மாட்டிக்கொண்டு கூறினான் ரீபின்.

"இதோ, படிக்கப் போகிறேன்." என்று ஒரு புத்தகத்தைச் சுட்டிக் காட்டியவாறு புன்னகையோடு கூறினான் எபீம்.

அவர்கள் சென்றவுடன் பாவெல் உணர்ச்சிவயப்பட்டவனாக அந்திரேயின் பக்கம் திரும்பினான்.

"இவர்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று மகிழ்ச்சிபொங்கக் கேட்டான்.

"ஹூம்" என்று முனகினான் ஹஹோல், "இரண்டு புயல் மேகங்கள் மாதிரிதான்!"

"மிகயீல் இருக்கிறானே, அவனைப் பார்த்தால் தொழிற்சாலையிலேயே வேலை பார்த்தவன் மாதிரி தோன்றவில்லை- அசல் முஜீக்! ரொம்பப்பயங்கரமான ஆசாமி" என்றாள் தாய்.

"நீ இங்கே இல்லாமல் போனது ரொம்ப மோசம்" என்று அந்திரேயை நோக்கி, பாவெல் சொன்னான்; அந்திரேய் மேஜைக்கு எதிராக அமர்ந்து, தன் எதிரே இருந்த தேநீர் கோப்பையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பாவெல் மேலும் பேசினான்: "நீ அடிக்கடி மனித இதயத்தைப் பற்றிப் பேசுகிறாயே, அவன் இதயத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை நீ கொஞ்சமாவது பார்த்திருக்க வேண்டும். ரீபின் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் படபடவென்று பொரிந்து தள்ளி, என்னைத் திணற அடித்துவிட்டான். அவனுக்குப் பதில் சொல்லக் கூட எனக்கு வாய் எழவில்லை. அவன் இந்த மனிதராசியை எவ்வளவு கேவலமாக மதிக்கிறான்? மனித குலத்திடமே அவனுக்கு நம்பிக்கையில்லை. அம்மா சொன்னது ரொம்பச் சரி. ஏதோ ஒரு பயங்கரமான சக்திதான் அவனுள் குடிகொண்டிருக்கிறது.

"நானும் அதைக் கவனித்தேன்" என்று உணர்ச்சியற்றுக் கூறினான் ஹஹோல்.

"ஆட்சியாளர்கள் மக்களின் மனத்தில் விஷத்தை ஏற்றிவிட்டார்கள். மக்கள் மட்டும் ஒன்றுதிரண்டு கிளர்ந்தெழுந்தால் எல்லாவற்றையும் நொறுக்கித் தள்ளி விடுவார்கள். அவர்களுக்கு வெறும் நிலம் தான் வேண்டும்; அந்த நிலத்தை வெறுமனே போட்டிருக்கவும் அவர்கள் செய்வார்கள். எல்லாவற்றையும் கிழித்தெறிந்துவிடுவார்கள்."

அவன் மெதுவாகவே பேசினான்; அவன் மனதில் வேறு ஏதோ ஒரு சிந்தனை ஊடாடிக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. தாய் வந்து அவனது தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

"தைரியமாய் இரு, அந்திரியூஷா" என்றாள் தாய்.

"கொஞ்சம் பொறு, அம்மா" என்று மிகுந்த பரிவோடு கூறினான் அவன். திடீரென்று அவன் உத்வேக உணர்ச்சியோடு மேஜை மீது ஓங்கிக் குத்திக் கொண்டே பேசினான்: "அது உண்மைதான் பாவெல்! முஜீக் மட்டும் விழித்தெழுந்தால் அவனது நிலத்தை தரிசாகவே போட்டுவிடுவான். கொள்ளை நோய்க்குப் பிறகு மிஞ்சும் சாம்பலைப் போல, சகலவற்றையும் சுட்டெரித்து சாம்பலாக்கி, தான் பட்ட சிரமத்தின் வடுக்களை எல்லாம் தூர்த்துத் துடைத்து விடுவான்!"

"அதன் பின் அவன் நம் வழிக்கு வந்துசேருவான்," என்று மெதுவாகச் சொன்னான் பாவெல்.

"ஆனால் அந்த மாதிரி நடக்காதபடி பார்த்துக்கொள்வதுதான் நமது வேலை. அவனைச் சரியான பாதையில் செலுத்துவதற்கு அவனை இழுத்துப் பிடிப்பது நமது வேலை. மற்றவர்களை விட நாம்தான் அவனுக்கு மிகவும் நெருங்கியவர்கள். அவன் நம்மை நம்புவான்; பின்பற்றுவான்."

"ரீபின் கிராமத்துக்கென்று ஒரு பத்திரிகை வெளியிடும்படி சொன்னான்" என்றான் பாவெல்.

"செய்ய வேண்டியதுதான்."

"அவனோடு நான் விவாதியாமல் போனது பெருந்தவறு." என்று லேசாகச் சிரித்துக்கொண்டே சொன்னான் பாவெல்.

"பரவாயில்லை, இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது" என்று அமைதியாகக் கூறிக்கொண்டே தன் தலைமயிரைக் கோதிக்கொடுத்தான் ஹஹோல். "நீ உன் வாத்தியத்தையே வாசித்துக்கொண்டிரு. பூமியில் அறைந்தாற் போல் அசைவற்று நிற்பவர்களைத் தவிர, மற்றவர்கள் உன் பாட்டுக்குத் தக்கபடி ஆட்டம் ஆடுவார்கள். நமக்குக் கீழே பூமி இருக்கிறது என்பதை நாம் உணரவில்லை என்று ரீபின் சொன்னதில் தவறில்லை. மேலும், நாம் பூமியில் காலூன்றி வெறுமனே நிற்கக் கூடாது. பூமியையே அசைக்க வேண்டும். நாம் அசைக்கிற அசைப்பில், அதனோடு ஒட்டிக்கிடந்து உழலுகின்ற மக்களை உலுக்கி, பிடி தவறச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்கள் அந்தப் பிடிப்பில் இருந்து விடுதலை பெறுவார்கள்...."

"உனக்கு எல்லாமே எளிதாக இருக்கிறது அந்திரியூஷா!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் தாய்.

"ஆமாம். வாழ்க்கையைப் போல்!" என்றான் ஹஹோல்.

சில நிமிஷம் கழித்து அவன் பேசினான்:

"சரி. நான் வயல் வெளியில் கொஞ்சம் உலாவி வரப்போகிறேன்."

"குளித்த பிறகா? காற்று வேறு அடிக்கிறது, சளிபிடிக்கும்" என்று எச்சரித்தாள் தாய்.

"கொஞ்சம் காற்றாடி வந்தால் தான் தேவலை," என்றான் அவன்.

"சளிபிடிக்காமல் பார்த்துக்கொள். கொஞ்சம் படேன்!" என்றான் பாவெல்.

"வேண்டாம். நான் போகிறேன்."

அவன் தனது உடைகளை மாட்டிக் கொண்டு ஒன்றுமே பேசாமல் வெளிக் கிளம்பினான்.

(தொடர்ந்து வரும்)

# விததியாசம

அல்வதி

●● எழுத்தின் குற்றுகள் பொட்டுப்போல இருப்பதால் தலைப்பின் நெற்றி வெறுமையாக உள்ளது. துணிவுள்ளோர் திலகமிட்டுப் பார்க்கலாம்....?

மூன்றாவது நாளாக மழை ஓயாது பெய்து கொண்டிருந்தது. ஓய்வே இல்லாமல் வியாபாரம் நடக்கும் எனது கடையில் சிப்பந்திகள் மட்டுமல்ல நான் கூடத்தூங்கி வழிந்து கொண்டுதானிருந்தேன். கடைப் பொடியன்களைப் பார்க்க பாவமாயிருந்தது.

"தம்பியவை நீங்கள் மேலுக்குப் போய்ப் படுத்திருங்கோ; ஏதும் அவசரமெண்டால் நான் கூப்பிடுறன்" சிக்னல் விழும்வரை காத்திருந்த வாகனங்கள் போல் எனது கட்டளையைக் கேட்டதும் தடதடவென எல்லோரும் படியில் ஏறிச்சென்றார்கள். மரப்படி கலகலத்தது. சிறிது நேரம் மழையையும், சேறாகியிருந்த றோட்டையும் எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பார்வையை வேறுபக்கம் திருப்பினேன்.

'அட, இதென்ன சுவரிலை புதுசா ஒரு இடத்திலை மெல்லிய வெடிப்பு வந்துருக்கு!' எழுந்துசென்று பார்க்கிறேன் 'வெடிப்பாக்குமெண்டு நான் பயந்து போனன். அது ஒரு எறும்புக்கூட்டம்-நல்ல வரிசையாகப் போய்க் கொண்டிருக்கு'

இப்படி வரிசையாகப் போறதுக்கும் சுறுசுறுப்பாக இருக்கிறதுக்கும் இதுகளுக்கு ஆர்சொல்லிக்குடுத்ததோ தெரியாது. சுவரிலை வெடிப்பு வாறதைவிட இப்படி ஒரு கடைக்குள்ளை எறும்புவாறதுதான் மிக ஆபத்தானது. இருந்தாலும் இதுகளைப் பார்த்துக் கொண்டிருப்பதிலை கொஞ்சம் பொழுது போகும் போலை கிடக்கு.

வழமையாக ஒரு பக்கம் கொஞ்சம் எறும்புகள் போனால், அதுக்கு எதிர்ப்பக்கமாகக் கொஞ்சம் 'ஹலோ' சொல்லிவிட்டுப் போகும். ஆனால் இதுகள் எல்லாம் ஒரே பக்கமாகப் போய்க்.



கொண்டிருந்தன. இதென்ன எல்லாரும் வரிசையாகப் போக இந்த ஒரு எறும்பு மட்டும் கொஞ்சம் தள்ளி வந்து கொண்டிருக்கு.

இவர் கொஞ்சம் வித்தியாசமான ஆளாய் இருப்பார் போலக்கிடக்கு. இவற்றை நடவடிக்கைகளைக் கொஞ்சம் பார்ப்பம், ஓ! நடையும் கொஞ்சம் வேகமாத்தானிருக்கு. மற்றவையையும் முந்திக்கொண்டு சீனி மூட்டைப்பக்கம் வந்திருக்கிறார். முன்னங்கால்களாலை, தன்னைவிடக் கோடி மடங்கு பெரிய சீனி மூட்டையைத் தட்டிப் பார்க்கிறார்.

மிச்ச எறும்புகள் கொஞ்சம் பின்னுக்குத்தான் வந்துகொண்டிருக்கினம். ஆ...வந்து சேர்ந்திட்டினம். முன்வரிசையிலை உள்ள கொஞ்ச எறும்புகள் முதலிலை வந்த அந்த வித்தியாசமான எறும்போடை ஏதோ கதைக்கினம். கிட்டத்தட்ட ஒரு நிமிடப் பேச்சுவார்த்தையின் பின் கொஞ்சப்பேர் திரும்பிப் போகினம்.

அட, இதென்ன அதிசயமாகக் கிடக்கு, சீனிமூட்டையைப் பார்த்துப் 'போட்டுத் திரும்பிப் போறது. வெள்ளைக்காரன் இந்த ஊரை விட்டுப் போனாப் போலை ஆரம்பிச்ச வியாபாரத்திலை இப்படி ஒரு அதிசயத்தை நான் காணேல்லை.

வழியிலை நிக்கிற மிச்ச எறும்புகள் திரும்பிப் போறவையோட ஏதோ பேசிக் கொண்டிருக்கினம். என்ன என்பது ஊகிக்க முடியாமல் இருக்கிறது.

திரும்பிப்போன கோஷ்டியின்ரை சொல்லை சீனி மூட்டையை நோக்கி வாறவை கேட்கவில்லை போனவை! அவை தொடர்ந்தும் சீனிமூட்டையை நோக்கி வருகினம். அந்த வித்தியாசமானது மட்டும் தனது ஆதரவாளர்களோடை திரும்பிப் போய்க்கொண்டிருந்தது. அதே நேரம் எதிரிலை வாறவையோடையும் ஏதோ கதைக்குது. ஒரு சிலர் திரும்பிப் போகினம்.

திரும்பிப் போனவை எல்லோரும் கூட்டமாக நிண்டு ஏதோ கதைக்கினம். அட இவையும் சீனியை நோக்கிப் போகினம். ஏற்கெனவே சீனி மூட்டைக்குக் கிட்ட வந்தவை மேலுக்கு ஏறாமல் பார்த்துக்கொண்டிருக்கினம். அந்த வித்தியாசமான எறும்பு முன்னுக்கு நிண்டவைக்கு ஏதோ சொல்லிப்போட்டு தான் முதலிலை மூட்டையிலை ஏறுது.

இருந்தாலும் கொஞ்சப்பேர் திரும்பிப் போகினம். சும்மா ரசித்துக்கொண்டிருந்த எனக்கு சீனிமூட்டைக்கு நான் தான் சொந்தக்காரன் என்பது இப்பத்தான் ஞாபகம் வந்தது.

நேற்றும் அரை மூட்டை சீனியை வீணாக்கிப்போட்டுதுகள். இண்டைக்கு விடக்கூடாது. "தம்பியவை ஒருக்கால் கீழை வாருங்கோ" நேற்றையைப் போல இண்டைக்கும் சீனியை வீணாக்கிப் போடும். இதுகளுக்கு ஒரு முடிவு கட்ட வேணும்."

மழை ஓய்ந்து வானம் சிறிது வெளிக்க ஆரம்பித்திருந்தது.

# இது காதலே அல்ல!

இரவு பத்துமணி. ஐரோப்பாவின் கோடைகாலம். அதனால் இன்னும் சரியாக இருளவில்லை. ரங்கன் 'ஹொட்டேல் வின்டே'க்குள் இருந்தான். பியர் குடித்துக் கொண்டிருந்தான். கிளாஸ் பியர்......, சிகரெட், பிறகு பியர்...., சிகரெட்... இப்படியே மதுவும், புகையும் தொடர்கிறது.

அவன் நிதானத்தில் இல்லையென்று தான் சொல்லவேண்டும்.

இன்று அவனுக்கு இருபத்தியொரு வயது பிறந்திருந்தது. அதுகூடத்தெரியா தென்றால் பாருங்களேன்.

அரவிந்தசாமி முகம், கரணை கரணை யான கைகால்கள், சிரித்தால் கன்னத்தில் குழிவிழும் சிரிப்பு-இதுதான் ரங்கன். தாய்நாட்டில் ஒழுங்காக வளர்க்கப்பட்டவன்; வளர்ந்தவன். பாதகமான சூழ்நிலையால் சுவிசுக்குத் தள்ளப்பட்டான்.

இங்கு வந்தும் ஆரம்பத்தில் அப்படி யொன்றும் கெட்டுப்போகவில்லை. ஆனால் இப்போது? லிசா! அந்த வெள்ளை நிற சுவிஸ் அழகி அவனை விட்டுப் பிரிந்ததும் அவன் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டான்.

ஐந்து மாதத்திற்கு முன்னர் ஒருமுறை 'சூரிச்' நகரிலுள்ள சினேகிதனைப் பார்த்து விட்டு இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந் தான். கடைசிரெயின் ஆகையால் சனக் கூட்டம் இருக்கவில்லை. அவன் ஏறிய பெட்டிக்குள் அவள் மாத்திரம் இருந்தாள். தங்கநிற தலைமுடி அலட்சியமாய் வாரப் பட்டு காற்றில் பறக்க, பழுத்துவெடித்த கொவ்வைப்பழம்போல் உதடுவிரிந்திருக்க, பதினைந்து வயது- நக்மாவின் முகத்தோற் றத்துடன் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

நெருங்கி "கிரேட்சி" (வணக்கம்) சொன் னான். வணக்கம் என்றாள் தமிழில். பக்கத்துச் 'சீற்றில்' இருந்துவிட்டான். சிறிது நேரம் ஊடுருவல் பார்வை. அவள் தான் கேட்டாள். "எங்கே இருக்கிறாய்?" என்று. சொன்னான். "நானும் அங்குதான் இருக்கிறேன்" என்றாள். அதனால் ஒரு சினேகிதச் சிரிப்பு இரு வரும் சிரித்தார்கள்.

"நீ ஸ்ரீலங்கனா?" விசாரித்தாள்.

"ஜா" என பெருமையாகச் சொன்னவன், உன் பெயர் என்ன? கேட்டான். "லிசா!" என்றாள்.

இப்படி வார்த்தை வார்த்தையாக பேசிக் கொண்டிருக்கையில் இறங்குமிடம் நெருங்கி விட்டது.

"மீண்டும் சந்திப்போம்" என கைகுலுக்கி விட்டுப் போனாள் லிசா.



மறுநாள் ரங்கன் வேலைமுடிந்து வீடு திரும்பப் புறப்பட்டபோது அவன் வேலை செய்யும் 'ரெஸ்ட்ரோறன்ட்டுக்குள்' இருந்தே "ஹாய்" எனக் கூப்பிட்டாள் லிசா. அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அருகில் போனான். தனிமையில் இருந்த அவள் "'கோலா' குடிக்கிறாயா?" என்று கொடுத்தாள்.

"டங்க" (நன்றி) சொல்லிவிட்டுக் குடித் தான். அப்பொழுதுதான் லிசா கேட்டாள். "நாளை வெள்ளிக்கிழமை என்னுடன் 'டிஸ்கோ'விற்கு வருகிறாயா?" என்று. கரும்பு தின்னக் கூலியா?

தலையை ஆட்டினான்.

மறுநாள் இருவரும் 'டிஸ்கோ'விற்குப் போனார்கள். முதன் முறையாக பியர் குடித்தான். பிறகு ஆட்டங்கள், பாட்டுக்கள் என்று கொண்டாட்டம் முடிந்து வீடு திரும்ப இரவு ஒன்றரையாகி விட்டது.

மெதுமெதுவாக, படிப்படியாக தொடர்ந்த நெருக்கம் 'நைட் கிளப்', 'டான்சிங் கிளப்' 'ஹொட்டேல்', 'ரெஸ்ட்ரோறன்ட்' என்று எல்லா இடமும் பரந்து சுற்றத் தொடங்கினார்கள்.

லிசாவுடன் பழகுவதையே பெருமையாக நினைத்தான் ரங்கன். அதனால் வேலைக்குப் போவதையும் நிறுத்திவிட்டான். வேலையோ, பணமோ அப்போது அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. 'கராஜில்' நிறுத்தியிருந்த 'செலிக்கா' காரை விற்றுச் செலவு செய்தான். லிசாவைத் தவிர அவனுக்கு வேறெந்த உலகமும் இருக்கவில்லை. அவள் இல்லை யென்றால் உயிரில்லை என்ற நிலையி லிருந்தான் ரங்கன். மூன்று மாதம் போயிருக்கும். கையில் புரண்ட காசுகள் முடிந்து விட்ட நிலமை. 'பேங்கில்' கேட்டுப் பார்த்தான். ஏற்கெனவே 'மைனஸ்' என்று மறுத்துவிட்டார்கள். எதற்கும் லிசாவிடம் போகநினைத்து அவளின் றூமிற்குப் போனான்.

லிசா தங்கள் நாட்டு இளைஞனொரு வனுடன் கைகோர்த்துக் கொண்டு அமர்ந் திருந்தாள்.

அவனுக்கு தலையைச் சுற்றியது. "லிசா! என்ன இது?" ஆத்திரத்துடன் கேட்டான். "என்ன" என்றாள் அவள் மெதுவாக.

"நீ என்னுடைய காதலி. இப்படிச் செய்யலாமா?" முகம் சிவந்து கொண்டு கேட்டான்.

"உன்னை எனக்குப் பிடிக்கவில்லை!" சாதாரணமாகச் சொன்னவள், அவனை வெளியில் விட்டுக் கதவை மூடினாள்.

ரங்கனுக்கு ஆத்திரமும், அவமானமும் வந்துவிட்டது.

இயலாமை அழுகையாக வெடித்தது.

பிற்பாடு அவளிடம் அடிக்கடி போய்ப் பார்த்தான். லிசா அங்கு இருக்க மாட்டாள். தற்செயலாக இருந்தாலும் அந்த இளைஞ னுடன் கை தழுவிக் கொண்டு இருப்பாள்.

'சைசா' (தரித்திரம்) 'தமிழியன்' என்று கதவைச் சாத்திவிடுவாள். அன்றிலிருந்து இப்படியாகினவன் தான் இன்றும், இப் பொழுதும் கடன் வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கிறான்.

இரவு பன்னிரெண்டு மணியாகியதும் 'ஹொட்டேல்' வியாபாரம் நிறுத்தப்பட்டது என அறிவித்தார்கள்.

வேலை செய்யும் போர்த்துக்கல்காரன் இவனை வெளியில் கொண்டு விட்டான். எப்படியோ, யார் மூலமோ, றூமிற்கு வந்து 'செற்றி'யிலேயே படுத்துக்கிடந்தான் ரங்கன்.

விடிந்ததும் ஞாயிற்றுக்கிழமை. எழுந்து முகத்தைக் கழுவி விட்டு வந்தபோது தேத்தண்ணி கிளாசுடன் பரமலிங்க அத்தான் நின்றிருந்தார். அவர் றூம்மேற் விஜயனின் மச்சான். அதனால் இவனும் அத்தான் என்றே அழைப்பான். வேறொரு நகரில் வசிக்கும் இவர் நாட்டில் ரங்கனின் அண்ணாவுடன் ஒன்றாக வேலை செய்த வராம். எனவே,ஒரு பயம் கலந்த மரியாதை அவரில் வைத்திருக்கிறான் ரங்கன். அவரைக் கண்டதும் கொஞ்சம் நடுங்கிப் போனான்.

"அத்தான் எப்போ வந்தீர்கள்?" கேட்ட போது, "நான் இரவே வந்திட்டன்." என்றவர் "எல்லாம் கேள்விப்பட்டன். உம்முடன் கதைக்கவேணும்." றூமிற்குள் அழைத்தார்.

தயங்கிபடியே நின்றான் ரங்கன். அவர் அதட்டலாகவும், ஆணித்தரமாகவும் சொல்லத் தொடங்கினார். "நீ காதலித்தேன் என்று சொல்லுகிறாயே இது காதலே இல்ல. வெறும் நிறக் கவர்ச்சியால் உந்தப் பட்ட காமம். அதனால் நீ எல்லாவற்றையும் மறந்து பழைய ரங்கனாக மாறவேணும். உன் அம்மா கொழும்பிற்கு வந்திருக்கிறா. அவவுடன் ரெலிபோனில் கதைக்க வேணும்" என்று முடித்த அவர் "யோசி! நன்றாக யோசித்து முடிவெடு" என்று கூறிவிட்டு வெளியேறினார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ரங்கன்குழம்பினான். தலையைக் கவிழ்த்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான். சிறிதுநேர தாமதத்தின் பின்னர் கண்களிலிருந்து நீர்த்துளி எட்டிப் பார்த்தது. இப்போது அவன் தெளிந்திருக்க வேண்டும்.

இரண்டு கிழமையாய் கொழும்பில் நிற்கும் தாயுடன் கதைக்க வேணுமென்று முடிவெடுத்தவனாய், எழுந்து 'ஷேவிங்' செய்வதற்கு பாத்றூமிற்குள் நுழைந்தான்.

**களுவாஞ்சிக்குடி யோகன் - சுவிஸ்**

# மிஸ்....மாலா!

**'மிஸ்....!'**

'உஷ்...'

'மாலா...'

'யாஅல்லா....!'

'லாரா....!'

'யார்ரா?'

'நோரா...!'

"அல்லா... இவனுக்கு எந்தப் பேய் பிடிச்சிச்சோ.. எப்ப பார்த்தாலும் ஒவ்வொரு 'குட்டி'ங்க பேரைச் சொல்லிப் புலம் புறானே...."–

அலுத்துக் கொண்டார் முஸம்மில் நானா.

"ஹட்டன்'ல இருக்கிறாரு ஒருத்தரு.. பேய் பிசாசுக்கெல்லாம் நல்லாப் பார்ப் பாரு..."–என்றார் பிலீப்.

"பயப்பாட்டுக்குத் தண்ணீ ஓதி அடிச்சா எல்லாப் பேயும் ஓடிடும்..." என்றார் கலீலுர் ரஹ்மான்.

'குசும்....!'

'டேய்...'

'பேய்...!'–என்று பதறியடித்து எழும்பினான் சூபி.

"யாருடா அவ... குசும்?"–கேட்டார் ரவி.

மீண்டும் குப்புறப் படுத்தான் சூபி.

இனி-விடிய விடிய... மாலி...அமாலி... மரீனா...ஜெனீ...

பிலீப், முஸம்மில் நானா, அரூஸ், பளீல் நானா, ரவி, கலீலுர் ரஹ்மான், தாஹிர்நானா...இவர்களுடன்– 'சூபி'யும்...

புதிதாய்... தங்க வந்த 'ரூம்' அது.

ஒவ்வொருநாளும் காலையில் எட்டுமணிக்குப் போய் - இரவுகளில் நேரங்கழித்து ரூமுக்குத் திரும்பும் சூபி... கடந்த சில வாரங்களாக - மாலா, மாலி, அமாலி, மரீனா, கரீனா, நிம்மி... ஜெனீ... நோரா... லாரா... குசும்... என்று வாய் புலம்பத் தொடங்கியதிலிருந்து... எல்லோருக் கும் பயமும் சந்தேகமும் எழத்தொடங்கி விட்டது, சூபி மீது.



தொழில்செய்யும் இடத்தைச் சரிவரச் சொல்லாவிட்டால் சந்தேகம்தானே!

பாவம் சூபி

மிகவும் நல்லவன்

'கொழும்புக்கு வந்து கெட்டுப்போய் விட்டானோ...' என்ற கவலை ரூம் அங்கத்தவர்களுக்கு.

ஆனால் சூபி தொழிலைப்பற்றி இதுவரைக்கும் சொல்லவே இல்லை.

"சொல்லு...நீ என்ன வேலை பார்க் கிறாய்?"

"ஒவ்வொருநாளும்...மாலா...மாலான்னு... வாய்புலம்புறே...யார் அந்த மாலா?"

முஸம்மில் நானாவைப் பார்த்துச் சிரியோசிரின்னு சிரித்த சூபி சொன்னான்:

"அட நீங்க ஒண்ணு நான் 'பாட்டா' கம்பனியில வேலை செய்றன்... மாலா... மாலி... அமாலி... குசும்... நிம்மி... இதெல்லாம் சப்பாத்துக்கள்ட பேர்..."

"சூ!"

**—கிண்ணியா அமீரலி—**

# பாட்டியோடு பேச வேண்டும்

தீராத துயராய் ஆழமான வடுவாய் என்னைப் பாதித்த அந்த நாள் வந்திருக்கவே கூடாது. ஆனால் வந்து விட்டது.

"பெரியப்பரை கடைத்தெருவில் கண்ட னான்."

"வரச் சொன்னனியே" – இது ஆவலும் எதிர்பார்ப்புமாய் என் பாட்டி

"அவர் என்னைக் காணேல்ல... அதுசரி நான் சொல்லித்தான் தாயைப் பார்க்க வருவாரோ!"

"அவன் வருவான், என்னைப் பார்க்கா மல் போகமாட்டான்."

அவளின் எதிர்பார்ப்பு மாலைவரை நீடித்து, தோல்வி, ஏமாற்றம், இயலாமை வெளிப்பட என்மேல் பாய்ந்தாள்.

"நீ ஏன் கதைக்கேல்ல?"

"தெரியாதது போல போறவரோட என்ன கதை!"

"என்ர பிள்ளையை எல்லாரும் வெறுக் கினம்..."

"ஓ... எத்தன தடவை வந்திருப்பார். எப்போதாவது உங்களைப் பார்க்க வந்திருக் கிறாரா?"

"என்னென்ன அலுவலோட வந் தானோ..." இது பாட்டியின் அங்கலாய்ப்பு

"அப்ப வாயை மூடிக்கொண்டு கிடவுங்கோ."

என் வார்த்தைகளில் உஷ்ணம் ஏறத் தொடங்க பாட்டி அழுது புலம்பத் தொடங் கினாள்.

"இஞ்ச ஒருத்தரும் சத்தம் போட வேணாம்."

"நீ யாரடா என்னை அதிகாரம் பண்ண? நான் போறன்.... எனக்கு நாடு இல்லையா? வீடு இல்லையா?"

வீறாப்புடன் அரக்கி அரக்கி நகரத் தொடங்கிய பாட்டியை அலாக்காகத் தூக்கி வந்து பழைய இடத்தில் இருத்தி "அசையக் கூடாது திமிர் பிடித்த கிழவி!"

"நீ என்ன பெரிய ராசாவோ?"

"ஓமடி...."

அதிர்ந்து போனேன், நான்... நானே தான் இப்படிச் சொன்னது. நம்ப முடிய வில்லை, வியர்க்கத் தொடங்கியது. பாட்டியை... வயதுக்கு மூத்தவரை... நான்... நான் இப்படிப் பேசியிருக்கக்கூடாது. குற்ற உணர்வு கோபத்தை விரட்டி விட வெல வெலத்துப் போய் இடத்தைவிட்டு நகரத் தொடங்கினேன். அதன் பிறகு பாட்டி என்னுடன் பேசவேயில்லை. நானும் தான்...

பாட்டியின் மேல் இருந்த கோபம் அடுத்த கணமே வடிந்து போய் விட்டது. ஆனாலும் நான் பேசவில்லை. அடி ஆழம்



அன்பால், ஆசையால், குற்ற உணர்வால் பொங்கிப் பிரவாகித்த போதும், வெளியே நான் சலனமே இல்லாமல், எப்போதும் போல் சாந்த சொரூபியாக... நான் பேசவே இல்லை.

ஓடிப்பாய்ந்து பாட்டியின் மடியில் புரண்டு விளையாடி எனக்கு நினைவில்லை. தொட்டால் வலிக்கிறது என்று அலறும் ஒரு நோயாளிப் பாட்டி அந்த நெருக்க மின்மை, வாஞ்சையோடு எதையும் தன் பேரக் குழந்தைகளுக்காகச் செய்ய முடியாத இயலாமை. அதனால் எமக்குள் ஏற்படாத அந்நியோன்னியம், எல்லாமாகச் சேர்ந்து "பாட்டி என்னை மன்னித்து விடு" என்ற வார்த்தையை வெளியே வரவிடாமல் கட்டிப் போட்டு விட்டதா?

இப்போது என்பாட்டி... உற்றவர்கள் சுற்றி நிற்க நட்ட நடுவில் நீட்டி நிமிர்ந்து... என் தகப்பனைப் பெற்று நான் பிறக்க அத்திவாரமாய் நின்ற தாய்மரம் சாய்ந்து போய்... எழுபத்தி எட்டைத் தாண்டியும் நடுங்காத குரலில் கணீரென்று அதட்டும் பாட்டி, கால்கள் இரண்டும் வழங்காத நிலையில், எப்போதும் தன்னைச் சுற்றி தலையணைகளை அடுக்கி ஒய்யாரமாகச் சாய்ந்து, மூக்குக் கண்ணாடி வழியால் பெரிய உருண்டைகளாகத் தெரியும் விழிகளை அங்குமிங்கும் அலைபாய விட்டு நடமாட்டங் களை உன்னிப்பாக அவதானிக்கும் பாட்டி... இப்போது நீட்டி நிமிர்ந்து ஒரு தேவதையின் சாயலோடு மீளாது உறங்கிக் கொண்டிருக் கிறாள்.

எல்லோரும் அழுகிறார்கள். நான் அழவில்லை. அதைப்பற்றி யாரும் குறைபடப் போவதுமில்லை. ஏனென்றால் நான் ஆண் பிள்ளை. வாழ்ந்து முடிந்த ஒரு வயோதி பத்துக்காக நான் அழலாமா? இளந்தாரி ஒன்று அழுவது அசிங்கமில்லையா? ஆனாலும் எனக்கு அழவேண்டும் போல் உள்ளது. கடைசிவரை நான் பாட்டியுடன் பேசவே இல்லையே.

பாட்டியின் முகத்தைப் பார்க்கிறேன்.

ஓ... எவ்வளவு அமைதி, கடைவாய்க் கோடியில் ஒரு புன்னகை. அந்தப் புன்ன கையை இப்போது தான் பார்க்கிறேன். அல்லது எனக்கு மட்டும்தான் தெரிகிறதா? உடல்கூட சீரான சுவாசத்தில் ஏறி இறங்கு வது போல... எனக்கு மட்டும்தான் தெரிகிறதா...? பாட்டி நான் உங்களுடன் பேசவேண்டும். 'டீ' போட்டுத் திட்டியதை மன்னிப்பீர்களா பாட்டி...?

பாட்டி பேசவே இல்லை. கடைவாய்க் கோடியில் புன்னகை மட்டும்.

எல்லோரும் அழுகிறார்களே, நானும் அழவேண்டும் போல் உள்ளது. அழலாமா? வேடிக்கை பார்ப்பார்களே... இல்லை நான் அழக்கூடாது. மீசை முளைத்த ஆண்பிள்ளை, நான். என் இனிய காதலி கூட இங்கு வந்துள்ளாள். எவ்வளவு பெண்கள், இவ் வளவு நாளும் ஒரு கதாநாயகனாக வலம் வந்த நான் அழுவதென்றால்... சீ... வெட்கம்.

மனதைக் கல்லாக்கி நெஞ்சிலிருந்து தொண்டைவரை வேகமாக ஏறிவந்த உருண் டையை வலுக்கட்டாயமாக மீண்டும் உள்ளே தள்ளிவிட்டு நிமிர்கின்றேன்.

அனுங்கல், முனகலாக ஒலித்த அழுகை, ஒப்பாரி திடீரென வலுத்து, அதிர்ந்து, உச்சஸ்தாயியில் கேட்க பாட்டி உறங்கிக் கொண்டிருந்த பெட்டியை மூடி தூக்கியும் விட்டார்கள்.

"மாமி... மாமி... போறீங்களே"– அம்மா புலம்புகிறாள்

"பாட்டி, பாட்டி–வினோதமான குரலில் என் சகோதரிகள்! நான் மட்டும் இடித்த புளியாய்..., வடித்த சிலையாய்... உள்ளே உயிர் துடிக்கிறது. ஒரு கணம்... நெஞ்சு வெடித்து அழுகை பீறிட அலறுகிறேன்.

"ஐயோ நில்லுங்கோ... பெட்டியைத் திறவுங்கோ... என்ர பாட்டீ... நான் ஒன்று கேக்க வேணும்... கேக்க வேணும்..." அலறிக் கொண்டு பெட்டியின் பின்னே ஓடுகிறேன். யாரோ என்னைப் பிடித்துக் கொள்கிறார்கள். எனக்கு உலகமே சுற்றத் தொடங்குகிறது.

**வளன்முகி – வவுனியா**

# வேல் வேண்டாம் கோல் வேண்டும்!

## தருவது- ரசிகன்

"**மா**மன்னன், படை பல கண்டு, களம் பல வென்று பகைவர் சிரம் பல கொய்த வீராதிவீரராஜ பல்லவன்.... வாழ்க"

வாழ்த்தொலி வானைப் பிளந்தது. வாழ்த்தப்பட்ட மன்னன் விழிகள் தேரில் இருந்து தாவி, தெரு வீதி எங்கும் நிறைந்திருந்த குடி மக்களுக்குள் ஊடுருவி, கொடியிடை பூவையர் மீது பாய்ந்தது.

விரிந்த மார்பும், உயர்ந்த தோளும், திரண்ட புஜங்களும், விரிந்த நெற்றியும், தடித்த உதடுகளும், ஒளிதெறிக்கும் விழிகளும். மன்னனின் கம்பீரத்தை கண்டவர் வியக்கவைத்தன. வியந்தவர்களில் வெண்ணிலா முக தரை நிலாக்களும் அடக்கம்.

'என்னவொரு பேராண்மை!' என்று நிமிர்ந்த விழிப்பார்வைகொண்ட மன்னவனை நினைத்து பெருமூச்சு விட்டவர்களும் இல்லாமல் இல்லை.

ராஜபல்லவன் பவனிவருகிறான் என்றால், தலைவாரிப்பூச்சூடி, பட்டுடுத்தி பவளச்செவ்வாய்களில் புன்னகையுடுத்தி காணவரும் மங்கையரை காணக்கண் கோடி வேண்டும்.

மன்னவன் ராஜபல்லவன் பவனியின் போதே பாவையருக்கு புள்ளிவைப்பான்.

புள்ளிவைத்த பாவைக்கு தூது அனுப்பப்படும். துள்ளிவர வேண்டும் பள்ளியறைக்கு! மறுத்தால்.... தூக்கி வரப் படுவாள்.

"அநியாயம்!"

பெண்ணை இழந்தவர் போர்க்கொடி தூக்கினால், மறுநாள் பொழுது புலரும் போது உயிரற்ற மரமாய் வீதியில் கிடப்பர்.

இன்றைய பவனியிலும் ராஜபல்லவன் புள்ளிவைத்தான். புள்ளிவைக்கப் பட்டவள் மதுரா.

பவனி முடிந்தது. மன்னவனின் தூதன் மதுரா இல்லத்தின் கதவு தட்டினான்.

"அழைப்பு உங்களுக்கு!"

"யாரிடமிருந்து?"

புருவம் உயர்த்தினாள். நிமிர்ந்த



மார்புகள் ஏறி இறங்க தூதனும் சற்றே தடுமாறிப் போனான்.

"மாமன்னரிடமிருந்து!"

மதுராவுக்கு ஆச்சரியம். மன்னனின் லீலைகளை மதுரா அறியமாட்டாள்.

அதனால் அழைப்பை ஏற்றாள். சென்றாள்.... அல்ல.... பறந்தாள். மனதில் முளைத்தது இறக்கை.

தனியறை, தந்தக் கட்டில், தங்கத்தட்டில் பாலும், பழமும், திராட்சைக் கனிகளும், வெள்ளிக்கிண்ணம், கிண்ணத்தில் நிறைந்து நுரைதள்ளும் மது.

மதுராவுக்கு வியர்த்தது. மன்னன் அழைத்தது மனம் விட்டுப் பேசவல்ல, மஞ்சத்தில் கொஞ்சவென்று புரிந்தது.

"பெயர் என்ன பெண்ணே?"

அழைப்பில் ஒரு குழைவு.

"மது.... மதுரா!"

என்றாள். குரல் பிசிறடித்தது.

"மங்கைக்குள் மதுவுண்டு தெரியும். நீயோ பெயருக்குள்ளும் மதுவை வைத்திருக்கிறாய். வேறென்ன வைத்திருக்கிறாய்?"

இவனா மன்னன்? மதுரா திகைத்தாள். மதுரா வெறுத்தாள். மாட்டிக்கொண்டோமே என்று மதுரா பயந்தும் போனாள்.

சித்தம் ஒன்றாக, தாளத்தில் மஞ்சம் சதிராட, நெற்றியில் முத்தென்று வியர்வை வந்தாட, சொர்க்கத்தின் சிகரத்திற்கு வழி சொல்கிறேன் வா மதுரா!"

மஞ்சம் விட்டு மன்னன் எழுந்தான்.

"என்ன பார்க்கிறாய் மதுரா; அந்தக் கதவு திறக்காது. இப்போது நீ கூண்டுக்கிளி, கூடலாம் வா இனி!"

பாராளும் மன்னன் பாவையை ஆளும் ஆசையால் நெறி மீறினான். நிலை மாறினான்.

"வேண்டாம் மன்னா!"

"வேண்டும் மதுரா!"

"என்னை விடுங்கள் மன்னா!"



## இலக்கிய நயம்

"பதில் சொல்ல மாட்டாயா மதுரா? ஓ.ஹோ... அதுவும் சரிதான் மயில் சொல்லுமோ, தான் வண்ண எழில் வடிவென்று! குயில் சொல்லுமோ, தன் குரல் செவிக்கு இனிதென்று! கனி சொல்லுமோ, தன் சுவையாதென்று! முல்லைப் பூ சொல்லுமோ, தன் வாசம் சுகமென்று! சிப்பிசொல்லுமோ, தனக்குள் இருப்பது முத்தென்று! இவை யாவையுமாய் இருப்பவள் நீ சொல்வாயோ, உனக்குள் இருப்பதெல்லாம் யாதென்று!"

மதுரா தன் காதுகளை பொத்திக் கொண்டாள்.

"மன்னா இது முறையல்ல!"

"மயிலே, நீ என்னோடு ஆடத் தடையென்ன?"

கேட்டுவிட்டு ராஜபல்லவன் இடியென்று நகைத்தான். பேராண்மை என்று வியக்கப்பட்டவன் பேயாக மாறி நிற்பது கண்டு மதுரா அச்சமயமானாள். எதிர்ப் பதில் பயனில்லை. பணிவு கலந்து கேட்டாள்:

"மன்னா! வழிகாட்டவேண்டிய தாங்களே வழிதவறலாமோ?"

"வழிகாட்டத்தானே அழைக்கிறேன், சொர்க்கத்திற்கு! வண்ணப் பூக்கள் பல கண்டவன் நான் என்பதால் வழி தவறாது! அழைத்துச் செல்கிறேன் வா! மோகத்தில்

"படித்த பின்னர் பத்திரமாக புத்தகத்தை மூடிவைத்துத்தான் எனக்குப் பழக்கம். கிழித்துப் போட்டு எனக்குப் பழக்கமில்லை! ஆகவே நீ அஞ்சுவதில் அர்த்தமில்லை, படிக்கவிடு, பின்னர் பத்திரமாய் திரும்பி விடு!"

எதிர்ப்புக்கள் யாவும் ஓய்ந்துபோக மன்னவன் படிக்கும் புத்தகமானாள் மதுரா.

□□

**ம**துரா அடிபட்ட பாம்பானாள். மன்னவன் சபை நடுவே எதிர்பாராத ஒரு நாளில் புயலெனப் புகுந்தாள்.

"நீயோ மன்னன்? நீயோ கொற்றவன்?"

"என்ன கேள்வி இது, யார் பெண்ணே நீ? பைத்தியமா உனக்கு?"

சபை கேட்டது.

மதுரா நகைத்தாள்.

"பாவையர் என்றால் படிக்கும் புத்தகம் என்று நினைக்கும் மன்னன்! நீதி கேட்டு வந்தால் பைத்தியமோ என்று கேட்கும் சபையோர்!"

சபை குழம்பியது.

எனினும் நீதி சொல்லப் பயந்தது.

எனினும் சேதி எங்கும் பரவியது.

வெளியே சொன்னால் 'வெட்கம் வண்டுக்கல்ல, பூவுக்குத்தான் என்று வாய்மூடிக்கிடந்த பாவையர் பலர் வீதிக்கு வந்தனர். வேதனை சொல்லினர்.

தேசமெங்கும் திகைப்பு ஒருபுறம். வெறுப்பு மறு புறம்.

திரண்டனர் மக்கள். மன்னவன் பலமோ யானைப் பலம். தெறித்தது குருதி. திரண்டவர் மாண்டனர்.

மன்னவன் மனதில் திட்டம் விரிந்தது.

"மாபெரும் போரொன்று உடனே மூளட்டும். அயல் நாடுகள் மீதெல்லாம் படைகள் பாயட்டும்."

"வெற்றிக்கனியோடு திரும்பி வாருங்கள். கன்னியரைக் கெடுத்தேன் என்று கடும் எதிர்ப்புக் காட்டுவோரின் வாய்களடங்கட்டும்.

"தினவெடுத்துவிட்டது, அதுதான் தினம் எதிர்ப்புக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை படைகளுக்குத் திரட்டுங்கள்."

"ஆபத்து அயல்நாட்டில் என்று முரசறைந்து சொல்லுங்கள்

மூளட்டும் யுத்தத்தீ!

அதில் மாளட்டும் நமக்கெதிராய் மாறிவிட்ட தீயகூட்டம்"

மன்னவன் கட்டளை.

யுத்தம் விரிந்தது.

வீழ்ந்தன பல நாடுகள்.

"வெற்றிவிழா, வீர விழா. எட்டுத்திக்கையும் வசப்படுத்திய தீர விழா!"

மன்னவன் எக்காளமிட்டான்.

"கொண்டாடுங்கள்! நாடே அதிரும்படி கொண்டாடுங்கள்!"

உத்தரவிட்டான். விழா ஏற்பாடுகள் விரைந்து நடந்தன.

விழாவுக்கு வந்தான் மன்னன். விக்கித்துப் போனான்.

விழா அரங்கம் வெறிச்சோடிக்கிடந்தது.

"என்ன இது, எங்கே மக்கள்?"

அருகில் நின்ற தளபதி சொன்னான்: மக்கள் வெளியேறிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். தடுத்தோம், கேட்கவில்லை."

மன்னன் விரைந்து, வெளியேறும் மக்கள் முன் நின்றான்.

"வெற்றிக் கனியை கொய்து தந்திருக்கிறது என் வேல் முனை! வேண்டாம் என்று போகிறீர்களே எதற்காக? பணிந்த நாடுகள் எழுந்து படை எடுக்கலாம் என்ற பயமோ?"

கூட்டம் பதில் சொல்ல மறுத்தது. ஒரு முதியவர் மட்டும் முன்னே வந்தார்.

"மன்னா! உன் வேல் முனை வலியது என்பதில் வேறெந்தக் கருத்துக்கும் இடமில்லை என்பது உண்மை!"

"பின்னர் எதற்கு இந்த வெளியேற்றம். இதோ பாருங்கள் வீர வேல்!"

முதியவர் அமைதியாகப் பதில் சொன்னார்.

**"மன்னா! வேலைக்காட்ட முடிகிறது. உன்னால்-அது நிமிர்ந்து நிற்கிறது. செங்கோலைக் காட்ட முடியுமா உன்னால்? அது வளைந்துதானே நிற்கும்! கோல் இல்லாத வேல் அழிவை ஆக்கலாம்; வெற்றியை ஆள முடியாது! வேல் மட்டும் போதுமென்று நினைத்தாய், கோலை வளைத்தாய்! இன்று நீ தனித்தாய் மன்னா! கோல் இன்றி வேல் மட்டும் போதாது வெற்றிக் கனி பறிக்க!"**

முதியவர் நகர்ந்தார்..

மக்கள் போய்க்கொண்டே இருந்தனர். அந்த முதியவர் கருத்துக்கு ஒத்த கருத்து திருக்குறளிலும் இருக்கிறது. அது இதுதான்.

**வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூ உம் கோடா தெனின்"**

அதிகாரம்-55 குறள்-546

## குறுக்கெழுத்துப் போட்டி இல—116

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | ■ |
| | ■ | 3 | | 4 | | |
| 5 | 6 | | ■ | 7 | | |
| | | ■ | 8 | | | ■ |
| | | ■ | | ■ | | 9 |
| ■ | 10 | | | | ■ | |
| 11 | | | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

01. சுபகாரியங்களில் பயன்படும் இது நறுமணம் வீசும்.
03. கப்பலை நிறுத்தி வைக்க உதவுவது.
05. பாண்டவர்கள் நாடு நகரை இழந்தது இதனால்தான்.
07. இது ஒரு மென்மையான உலோகம்.
10. இங்கு தாமரை மலரும்.
11. கண்ணாடியில் தோன்றுவது.
12. வீடு கட்டுவதற்குப் பயன்படும் பொருட்களில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

01. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்.
02. சந்திரன் அல்லது சூரியன் மறைவதை இப்படிச் சொல்லுவார்கள்.
04. மழைகாலம் என்றால் இப்படித்தான் இருக்கும்.
06. பீமனின் கையில் இருப்பது.
08. சினிமாவால் இந்தக் கலையும் பாதிக்கப்பட்டுள்ளது.
09. நல்ல குரல் வளம் உள்ளவர்களை இதற்கு ஒப்பிடுவார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 09.09.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-116
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-114ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 த | ன் | 2 வி | னை | ■ | 3 ச | ■ |
| ட் | ■ | 4 து | ப் | பு | ர | வு |
| 5 சி | க | ர | ம் | ■ | ணா | ■ |
| னை | ■ | ர் | ■ | 6 ச | க | 7 தி |
| ■ | 8 நோ | ■ | 9 மு | ந் | தி | ரி |
| 10 கு | ன் | று | ■ | த | ■ | ச |
| ■ | 11 பு | ரு | வ | ம் | ■ | டை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 114இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. கே. காண்டீபன், கொழும்பு-13
2. செல்வி, கே. ரோஹினி, புசல்லாவ.
3. எஸ். நமச்சிவாயம், மட்டக்களப்பு.
4. எம். நௌசாத், பாணந்துறை.
5. செல்வி. எவ். சஹீகா நிசார்டீன், பேராதனை.
6. திருமதி. என் ஜோதி, கலஹா.
7. ஜி. ஜெயச்சந்திரன், திருகோணமலை.
8. எம். பாஹிம் பாபு, புத்தளம்.
9. செல்வி. றிஸ்வானா ரகீம், ராகம.
10. செல்வி. சந்திரிகா அம்பலவானன், களுவாஞ்சிக்குடி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்தின் நடவடிக்கைகள் அவர் அரசியலுக்கு வருவார் என்பதன் அறிகுறியாக தெரிகிறதா?**

வி.முருகானந்தன்-கொழும்பு-11

*ஆந்திர மாநிலத்தில் இருந்து திரும்பிவந்தவரை பயணக்களைப்புத் தீர முன்பே, தமிழக அரசியல்வாதிகள் சென்று திக்குமுக்காட வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் தமிழக கமிட்டித் தலைவர் குமரிஆனந்தன் ரஜினியை சந்தித்துவிட்டு வந்து புதிர் போட்டுக் கொண்டிருக்கிறார். ரஜினி அரசியலுக்கு வருவதெல்லாம் இருக்கட்டும், ரஜினியின் பெயரைச் சொல்லியே செல்வியை மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் ரஜினிமீது கொண்ட அபிமானம் என்பதைவிட, செல்விமீது தாக்குதல் நடத்த ரஜினியை விட்டால் வேறு ஆயுதம் இல்லாத தமிழக அரசியல்வாதிகளின் பரிதாபநிலை என்று சொல்லலாம்.*

□□

**என்.டி.ராமராவ் இந்தியப் பிரதமராவாரா?**

எஸ்.ராதிகா-செங்கலடி

*ஆந்திர மாநில அரசியல் புயலுக்கு முன் கேட்டுள்ள கேள்வி இது. இப்போது முதலமைச்சர் பதவியை தன்வசம் வைத்திருந்தாலே போதும் என்ற நிலையில் இருக்கிறார் ராமராவ். "பார்வதி என்னைப் பாரடி" என்றார். மகனும், மருமகனும் 'யாரடி நீ மோகினி?' என்று கிளம்பி விட்டார்கள்.*

□□

**அரசாங்கம் வடக்கே உணவு அனுப்பத் தாமதித்தால் புலிகளின் பதில் நடவடிக்கை என்னவாயிருக்கும்?**

என்.அகமட்-கல்முனை.

*பிரஜைகள் குழு என்ற பெயரில் உணவு அனுப்புமாறு ஜனாதிபதிக்கு ஒரு மகஜர். வெகுஜன ஒன்றியம் என்ற பெயரில் ஒரு ஆர்ப்பாட்டம்.*

□□

**'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்.' இதன் உண்மையான அர்த்தம் என்ன?**

எம்.எல்.மொஹமட்-மினுவாங்கொட.

*தாழ்வு மனப்பான்மை காரணமாக தங்களை கல்லென்றும், புல்லென்றும் நினைத்த சில ஆண்கள், தங்கள் வசதிக்காக உருவாக்கிய பழமொழி.*

□□

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படமாட்டாது என்று புதிய தீர்வு யோசனையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா?**

ஏ.ஆர்.நியாஸ்-புதிய காத்தான்குடி.

*தீர்வு யோசனையில் குறிப்பிடப்படும் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரமுடையவராகத்தான் இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. அது பற்றித் தெளிவாகக் கூறி பிரச்சனையைக் கிளப்ப அரசும் விரும்பவில்லை. தற்போதைக்கு அதனை ஒழிப்பதில் அரசுக்கு ஆர்வம் இல்லவே இல்லை.*

□□

**அரசியல்வாதிகள் பொய்யைக் கூறும் போது ஏன் இன்பமடைகிறார்கள்?**

கே.யோகராஜன்-வெயாங்கொட

*இளிச்சவாயர்கள் ஏமாறும் அழகைப் பார்த்து.*

□□

**சிந்தியா! இறைவன் ஊமையாக இருப்பது ஏன்?**

விஜந்தி ரோபட்-தலைமன்னார் பியர்

*வாயைத் திறந்தால் உண்மை பேசவேண்டியிருக்கும். உண்மையைப் பேசினால் பாவம் செய்த பலர் மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கும். அது மட்டுமல்ல விஜந்தி, கடவுள் உண்மையைப் பேசினால், இப்போது வணங்கிக் கொண்டிருக்கும் பலரே கடவுளின் எதிரிகளாக மாறிவிடுவார்கள்.*

□□

**சிவாஜிக்குக் கொடுக்காமல் இந்திய அரசு திலீப்குமாருக்கு விருது கொடுத்தது சரியா சிந்தியா?**

கே.அசோகன்-கண்டி



*திரையுலகுக்கு சிவாஜியை விட மூத்தவர் திலீப்குமார். ஆகவே, அவருக்குக் கிடைத்தது நியாயம்தான். சிவாஜிக்கும் கிடைக்கவில்லையே என்பது ஆதங்கம்.*

□□

**கடுகளவு அன்பு காட்டினால், மலையளவு அன்பு காட்டுவது யார்?**

என்.லதா-ஆரையம்பதி

*நாங்கள் ஆரம்பமானதே அவளுக்குள் தானே!*

□□

**டியர் சிந்தியா! தற்போது சினிமா உலகம் எதைக்கற்றுத் தருகிறது?**

பாஸ்கரன்-முள்ளியவளை-முல்லைத்தீவு

*சினிமா-வாத்தியாருமல்ல; திரையரங்கம்-வகுப்பறையுமல்ல.*

□□

**டியர் சிந்தியா! 2000 ஆம் ஆண்டளவில் நம் நாட்டு நிலை எவ்வாறு இருக்கும்.**

கணேசன் வசந்தி-களுவாஞ்சிக்குடி

*அடுத்த நிமிடமே என்னாகுமோ, ஏதாகுமோ என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த இலட்சணத்தில் 2000ஆம் ஆண்டு பற்றியா ஆருடம் கூற முடியும்?*

□□

**வரக்கூடாதது சந்தேகம்; வந்து விட்டால் என்ன செய்வது?**

மொஹமட்டீன்-வத்தளை

*தீரவிசாரித்தறிந்து சுத்தமான ஒரு முடிவு கண்டுவிடவேண்டும்.*

இவ்வாரம் (03.09.95 ஞாயிறு மாலை 7.00 மணி) எம்.ரி.வி.யில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 92

**காலத்தின் குரல்:**

குருச்சேத்திரமுனையின் கோர உருக் காணவெந்தன்
கருத்துக்கிசைவில்லை; கண்கள் நிலைகொள்ளவில்லை!
குருதிவெள்ளம் குதித்தோட, குவிந்து உடல் மிதந்தோட
பேரழிவுப் போரென்று ஒழிந்துவிடும் போழ்தேதோ?
கொடியவரைப் பழிதீர்த்து கொடியிடையாள் பாஞ்சாலி
கவுரவரின் பாசறையில் குடிபுகுந்தாளானாலும்
குருவம்சக் கொடிவளர கோமகனாரெவருமின்றி
துரியோதனன் மாண்டான் துயர வெள்ளம் புரண்டோட..!

—காட்சி தொடக்கம்—

கவுரவர் பாசறைக்கு பாஞ்சாலி, விராட நாட்டு மகாராணி சுதேசினையுடன் செல்கிறாள்.

**திரௌ:** இந்தப்பாசறை யாருடையது என்று தெரியுமா மகாராணி?

**சுதேசி:** போரில் தோல்வியடைந்து விட்ட கவுரவர்களின் பாசறை என்பது யாருக்குத்தான் தெரியாது?

**திரௌ:** இல்லை! என் எண்ணங்களை இன்றுவரை வதைத்துக் கொண்டிருந்த கொடுமைகளின் கூடாரம் இது. பாரதப் பாரம்பரியத்தின் மதிப்பை சீர்கெடுத்து, அரச மாளிகைக்கு என்னுடைய சிகை மூலம் என்னை இழுத்துவந்து அவமானப்படுத்தி, என்னை வேசி என்று அழைத்து, எனது துகிலை உரிந்து மானபங்கம் செய்வதற்கு நாகரிகமற்ற அரசியல்வாதிகள் துணிந்தார்களே-அந்த செத்து மடிந்துபோனவர்களின் பாசறைதான் இதுவாகும்! இங்கிருப்பது எனக்கு ஒரு வகை விசித்திரமான எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் என் மனம் தவிக்கிறது மகாராணி அவர்களே!

காந்தாரி உள்ளே வருகிறாள்.

**காந்தா:** அஸ்தினாபுரத்தின் மகாராணி திரௌபதிக்கு வாழ்த்துக்கள்!

**திரௌ:** பெரியத்தை வாருங்கள்!

**காந்தா:** என்னுடைய வாழ்த்துக்களை ஏற்கப் போவதில்லையா?

**திரௌ:** பெரியத்தை! (காலில் விழுந்து வணங்கி அழுகிறாள்) பெரியத்தை!

**காந்தா:** இந்த நல்ல வேளையில் கண்கலங்கக் கூடாது மகளே! மகளே! இந்தப் பாசறையில் நீ இருக்கலாகாது. கொடுமையின் இருப்பிடம் இது! நேற்று முதல் எமது படைவீரர்கள் பின்வாங்கி வருவதை-நான் கண்களால் காண விட்டாலும்-காதுகளால் கேட்கின்றேன். உனது பெரிய மாமனாரின் பேராசையினால் தூண்டப்பட்ட உனது மைத்துனன் துரியோதனன் தனது அபிலாசைகளை வளர்த்தான். அத்தகையோருக்கு சொந்தமான இவ்விடத்தில் இன்றிரவு நீ தங்கியிருக்கலாகாது மகளே! உன் அன்புக்குரியவர்களுடன் உனது பாசறைக்கே சென்றுவிடு!

**திரௌ:** பெரியத்தை! நான் வெற்றியைக் கொண்டாட இங்கு வரவில்லை அத்தை! எனது கணவர்களின் இல்லத்துக்கே வந்திருக்கிறேன். என்னை வாழ்த்துங்கள் அத்தை!

**காந்தா:** மகளே! அமைதியற்றிருக்கும் என்னிடம் இப்போது எதையும் கேட்டாதே மகளே! எனது மகன் துரியோதனன் குற்றுயிராக தன்னந்தனியாக வேதனையுடன் கிடக்கிறான். அவனருகிலிருந்து அவனுடைய வியர்வையைத் துடைத்து விட எவருமில்லை! இவ்வேளையில் என்னால் வாழ்த்துக் கூற முடியாது- எவரையும் வையவும் முடியாது. அஸ்தினாபுரம் சென்ற குந்தி இங்கிருந் திருந்தால் நான் இங்கு வந்திருக்க மாட்டேன்! மகளே! துரியோதனனையும் துச்சாதனனையும் இனியாவது மன்னித்துவிடு! வேண்டுமானால் எனது தலைமுடியினைப் பிடித்து என்னை அஸ்தினாபுரி அரண்மனைக்கு இழுத்துச் சென்று உன் கோபத்தைத் தனித்துக்கொள்! (அழுதவண்ணம்) ஆனால், என்மகன் துரியோதனனை மன்னித்துவிடு மகளே!

ஏரிக்கரையில் துரியோதனன் தனிமையில் கிடந்து வேதனையில் புலம்புகிறான்.

**துரி:** ஓ சந்திரதேவனே! பாண்டவர்களைப் போன்ற கோழைகளை உன்னுடைய வம்சத்தவர்கள் என்று ஏன் ஏற்றுக் கொண்டாய்? இது உனக்கே ஒரு களங்கம். என்னுடைய உதிரத்தாலும் இக்களங்கத்தைக் கழுவிவிடமுடியாது!

அஸ்வத்தாமன் துரியோதனன் அருகே வந்தமர்ந்து அழுகிறான்.

**துரி:** குருபுத்திரனே! ஏன் அழுகிறாய்? எனது உடலில் உள்ள காயங்களும் ஊற்றெடுக்கும் உதிரமும் என் வீரத்தின் அடையாளச் சின்னங்கள்! அந்தக் கோழைகளின் கபடத்துக்கு- உன் தந்தை குருதேவரைப் போல்-நானும் பலியாகிவிட்டேன் நண்பா! நீ என்னைப் பாராட்ட வேண்டும்! குருதேவருடைய இஷ்டத்துக்குரிய மாணவனாக அர்ச்சுனன் இருக்கலாம்....ஆனால் குருதேவரைப் போல் வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டவன் நானே! ஆகவே, என்னைப் பாராட்டு நண்பனே!

**அஸ்வத்:** (கோபமாக) போரின் முடிவு என்னவாகும் என்பதைப்பற்றிய கவலையின்றி நான் உன் வெற்றியிலும் தோல்வியிலும் உன்னுடனேயே நின்றேன். உன் அணியில் வேறு எவரும் இல்லை என்று கவலைப்படாதே நண்பா! எனது மாமனர் குலகுரு இருக்கிறார். கீர்த்திவர்மனுடன் நானும் இருக்கிறேன்!

**துரி:** அவர்கள் எங்கே?

அவர்களும் துரியோதனன் அருகே வருகின்றனர்.

**கிருபா:** இதோ இங்கேதான் இருக்கிறோம்! இளவரசரே!

**துரி:** குலகுரு அவர்களே! என்னை இளவரசர் என்று அழைக்காதீர்கள். இப்போது என்னிடம் இராச்சியம் எதுவும் இல்லை! ஆனால் போர் இன்னும் முடியவில்லை. என் உயிர்பிரியும்வரை போர் நடந்தேயாக வேண்டும்! ஆகவே குருபுத்திரன் அஸ்வத்தாமனை படைத்தளபதியாக நியமிக்கிறேன்.

வேதனையில் துடிக்கின்றான். அஸ்வத்தாமன் துரியோதனனை வணங்கிய பின்....

**அஸ்வத்:** மன்னவரே! தங்கள் கட்டளை என்ன....?

**துரி:** அஸ்வத்தாமா! பாண்டவர்களின் தலைகளைத் துண்டித்து வா! அதுவரை என் உயிர் பிரியாமலிருக்க வேண்டும்! அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. களைத்துவிட்டேன்! வேதனையும் தாங்க முடியவில்லை!

**கிருபா:** இப்போதா....? வேண்டாம்! யுத்த நெறிகளை மீறக்கூடாதல்லவா?

**அஸ்வ:** மாமா! அவர்கள் எத்தனை தடவைகள் கட்டளைகளை மீறியிருக்கின்றனர். என் தந்தையை சதிசெய்து நிராயுதபாணியாக்கி அவர்கள் கொல்ல வில்லையா? இந்தப் போரில் நாம் அனைவரும் எப்போதோ போருக்குரிய சட்டதிட்டங்களை மீறியிருக்கிறோம். பாண்டவர்கள் எனக்குத் துரோகமிழைத்தனர். ஆகவே, அவர்கள் அதற்குப் பிராயச்சித்தம் தேடியேயாக வேண்டும்! அவர்களைக் கொல்லப் போகிறேன். எனக்கு விடைகொடு நண்பனே!

**துரி:** வெற்றியுடன் திரும்புவாயாக-

அஸ்வத்தாமன் முன்செல்ல கிருபாச்சாரியாரும் கீர்த்திவர்மனும் பின் செல்லுகின்றனர். தனித்திருந்த துரியோதனன் வேதனையில் துடித்து மரணமடைகிறான்.

**பின்னணிப் பாடல் :**

தருமநெறிதனை மறந்து துன் மார்க்கம் தனை அணைத்த
துரியோதனனின்று தன்னுயிரைத் தானிழந்தான்
அஸ்தினாபுர மண்ணில் அதர்மம் அழிந்ததென்று
அருணனவன் கீழ்வானில் ஆரோகணித்துதித்தான்!

—காட்சி மாற்றம்—

அஸ்தினாபுரம்-அரண்மனையில் திருதராட்டிரருடன் சஞ்சயன்-மன்னர் கண்ணீர் வடிக்கிறார்.

**திருத:** சஞ்சயா! என்னுடைய மகனின் சடலம் தனியாகவா கிடக்கிறது....?

**சஞ்ச:** எனக்குத் தெரியாது மகாராஜா!

**திருத:** ஏன் பார்த்துச் சொல்!

**சஞ்ச:** அந்தத் தெய்வீக சக்தி என்னை விட்டு நீங்கிவிட்டது. மன்னவரே! இளவரசரின் உயிர் பிரிந்தவுடன் அந்தச் சக்தியையும் நான் இழந்துவிட்டேன்!

**திருத:** சஞ்சயா! என்னைச் சுற்றி மரண இருள் சூழ்ந்து வருவதையாவது உன்னால் பார்க்க முடிகிறதா?

**சஞ்ச:** (அழுதவண்ணம்) பார்ப்பதுடன் மட்டுமல்ல மன்னவரே! தங்களுடைய வேதனையையும் நான் நன்கு உணர்கிறேன்! பிரச்சனைகள் எத்தகையதாக இருந்த போதிலும் அவற்றைத் தீர்த்து வைக்கப் போர் சிறந்த வழியாக மாட்டாது என்ற பேருண்மையும் தெளிவாகப் புரிகிறது. சுற்றிவர எங்கும் சீரழிவை மட்டுமே யுத்தத்தால் தர முடியும்! இந்த யுத்தம் வராமல் தடுத்திருக்கக் கூடிய ஒருவர் தாங்களே!

**திருத:** உண்மைதான்! போரைத்தடுத்திருக்கக் கூடியவன் நானேதான்! உண்மை நிலையினை உணர்ந்து-யுத்தம் வராமல் தடுத்தேயாக வேண்டும் என்று நான் எண்ணும் போதெல்லாம் எனது பேராசைகளும் என் மகன் மீது நான் வைத்திருந்த பாசமும் என்னைத் தடுத்துவிட்டன. இன்று சிதைந்து பாழடைந்துபோன எனது அபிலாசைகளின் நடுவே நின்று புலம்புகிறேன்! சஞ்சயா! எனது மகன் உயிர் பிரிந்தவுடன் அந்தப் போர் முடிவடைந்து விட்டது. ஆனால் என் உள்ளத்தில் பெரும் போர் மூண்டு விட்டது. இப்போரில் நானே ஆக்கிரமிப்பாளனாகவும்-அதனை அடக்க முயலுவோனாகவும் மோதுகிறேன்! இந்தப் போரில் எப்பகுதி ஜெயித்தாலும் தோல்வி எனக்கேதான்! (அழுகிறார்) மகனே துரியோதனா! நான் உனக்குக் கொடுமைகளை விளைவித்து விட்டேனடா! தந்தையர் தங்கள் பிள்ளைகளுக்கு தர்ம நியாயங்களைப் புகட்டுவார்கள்! ஆனால், நானோ எனது அபிலாசைகள் எனும் நஞ்சையே ஊட்டி உன்னை வளர்த்து விட்டேன்! அதனால் இன்று உன்னை தனிமையில் கிடந்து சாவினை அணைக்க விட்டு விட்டேன் இந்தப் பாவி! எனது தம்பி பாண்டுவின் பிள்ளைகளுக்கு அநீதி இழைத்து விட்டேன் சஞ்சயா! அரக்கு மாளிகை தீப்பிடித்து எரியவும் சொக்கட்டான் ஆட்டத்தில் சூது புகவும் எனது சுய ஆசைகளே காரணம் என்பதை உணர்ந்து கொண்டேன்! மருமகள் திரௌபதி சபைநடுவே துகிலுரியப்படும்போது கூட என் மகன் மீது நான் கொண்ட பாசம் என்னை மௌனியாக்கி விட்டது! எது எவ்வாறானாலும் என் மகனின் சடலம் தேடுவாரற்றுக்கிடக்க முடியாது. தர்ம நெறிக்கே தலைமகனான யுதிஷ்டிரன் என் மகனின் சடலத்துக்கு ஏன் உரிய மதிப்பினை அளிக்கவில்லை....?

—காட்சி மாற்றம்—

பாண்டவர் பாசறை-காவலர்கள் களைப்படைந்து காணப்படுகின்றனர்- அஸ்வத்தாமன், கிருபாச்சாரியார் மற்றும் கீர்த்திவர்மன் ஆகியோர் வருகின்றனர்.

**அஸ்வத்:** நீங்கள் இருவரும் இங்கே இருந்து எவரும் வெளியேறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இது என்னுடைய யுத்தம்! துரியோதனன் தோற்றாலும் யுத்தம் முடிந்துவிடவில்லை. துரியோதனனுடன் பாண்டவர்களும் ஒழிக்கப்பட வேண்டும். துரியோதனனின் சடலத்துடன் பாண்டவர்களின் சடலங்களும் கிடத்தப்படவேண்டும்! எவராவது தப்பிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்!

அஸ்வத்தாமன் ஒரு கூடாரத்தின் பின்புறமாகச் செல்கிறான். திஷ்டத்துய்மன் அயர்ந்து தூங்குகிறான். தனது தந்தை துரோணாச்சாரியாரை கொன்றதை நினைத்துக்கொண்டு திஷ்டத்துய்மனை குத்திக்கொல்கிறான். மற்றுமொரு கூடாரத்தினருகே செல்லும்போது சில காவலர்கள் உரையாடுவது அவன் காதில் விழுகிறது.

**காவலன்:** அடடா..! இதுதான் உண்மையான சகோதர பாசம்! பார்த்தாயா...? இன்று வெற்றிபெற்ற களிப்பில் சகோதரர்கள் ஐந்து பேரும் ஒரே கூடாரத்துள் படுத்திருக்கிறார்கள்!

இவ்வாறு கூறிய காவலன் அகன்றதும் அருகே இருந்த கூடாரத்துள் ஐந்து பேர் படுத்திருப்பதைக் கண்ட அஸ்வத்தாமன் தனது பாணங்களினால் ஒவ்வொருவராகக் கொன்று விடுகிறான். அவர்களை பாண்டவர்கள் என்று தப்புக்கணக்கு போட்டுவிட்டான். ஆனால் அந்த ஐவரும் திரௌபதியின் புத்திரர்கள். பாண்டவர்களைக் கொன்று விட்டதாக வெற்றிக்களிப்பில் அஸ்வத்தாமன் கவுரவர் பாசறை செல்கிறான்.

***

ஏரிக்கரை சென்ற அஸ்வத்தாமன் துரியோதனனின் தலையை தன் மடி மீது கிடத்துகிறான். அப்போதுதான் அவன் இறந்துவிட்டதனை கண்டு புலம்புகிறான்.

**அஸ்வத்:** (அழுகிறான்) நான் கொண்ட வெற்றிச் செய்தியைக் கேட்கவாவது சற்றுத் தாமதித்திருக்கலாமே நண்பனே! முதலில் திஷ்டத்துய்மனைக் கொன்றேன் பின்னர் அந்த பாண்டவர்களைத் தீர்த்துக் கட்டினேன்! என் செயலுக்காக என்னைப் பாராட்ட மாட்டாயா நண்பா? நான் செய்தது கோழைத்தனம் என்பது எனக்கு நன்கு தெரியும். இருப்பினும் நண்பனே! நான் உனக்களித்த வாக்கினை நிறைவேற்றி விட்டேன்! நான் செய்த தீச்செயலுக்காக வியாசமா முனிவரிடம் சென்று பிராயச்சித்தம் தேடப்போகிறேன்.

***

அஸ்வத்தாமன் துரியோதனனின் சடலத்துக்கு தீ மூட்டுகிறான்.

***

—காட்சி மாற்றம்—

பாண்டவர்பாசறை- திரௌபதியின் ஐந்து புதல்வர்களினதும் திஷ்டத்துய்மனதும் சடலங்கள் கிடத்தப்பட்டுள்ளன. திரௌபதி அழுதுகொண்டிருக்கிறாள். கிருஷ்ணரும் காணப்படுகிறார்.

**திரௌ:** (தன் புதல்வர்களின் உடல்களில் செருகப்பட்டிருந்த அம்புகளை பிடிங்கியவளாக....) இந்த அம்புகளை எய்த துரோகி யார் என்பதை ஏன் எவரும் கண்டு பிடிக்காதிருக்கிறீர்கள்? இக்கொடுமையைச் செய்தவன் கொல்லப்பட வேண்டும்!

**அர்ச்:** (அம்புகளை கையிலேடுத்துப் பார்க்கிறான். உடைத்தெறிந்துவிட்டு-கோபமாக....) அத்தனையும் குரு புத்திரன் அஸ்வத்தாமனின் அம்புகள் இவை!

**திரௌ:** அவ்வாறானால் என் கண்ணீரைத் துடைக்க அந்தக்கொடியவனின் பிணத்திலிருக்கும் துணியைக்கொண்டு வாருங்கள்! அதுவரை நான் இங்கேயே காத்திருக்கப்போகிறேன்!

**கிருஷ்:** அஸ்வத்தாமனை எவரும்கொல்ல முடியாது. அவன் சாகாவரம் பெற்றவன், கல்யாணி!

**திரௌ:** எப்படியோ அவன் தண்டிக்கப் பட்டேயாக வேண்டும்.

**பீமன்:** பொறுமையாக இரு பாஞ்சாலி....! எங்களுக்காகக் காத்திரு!

—காட்சி மாற்றம்—

வியாசமாமுனிவரின் ஆசிரமம்-அஸ்வத்தாமன் அவருடைய காலடியில் கிடக்கிறான்.

**வியாச:** துரோணரின் புத்திரனே! உன் குடும்ப கௌரவத்தையே போக்கிவிட்ட நீ பிராயச்சித்தம் செய்துதானாக வேண்டும்! நீ கொன்றது பாண்டவர்களையல்ல. அவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள். திரௌபதியின் புதல்வர்களைத்தான் நீ கொலை செய்தாய்!

**அஸ்வ:** (அதிர்ச்சியடைந்தவனாக) அவ்வாறானால் நான் பாண்டவர்களைக் கொன்ற பின் பிராயச்சித்தம் செய்கிறேன் முனிபுங்கவரே!

அப்போது பாண்டவர்கள் அங்கு வருகின்றனர்.

**பீமன்:** அஸ்வத்தாமா! கோழையே! முனிவரின் பின்னால் ஒழிந்து கொண்டிருக்காமல் வெளியே வா!

**பாண்டவர்கள்:** வணக்கம் மகரிஷி!

**வியாச:** ஆண்டவன் அருள் பாலிப்பானாக!

அஸ்வத்தாமன் ஆத்திரமாக ஆசிரமக் குடிசைக் கூரையிலிருந்து ஒரு வைக்கோலை இழுத்தெடுத்து கண்களை மூடியவனாக தெய்வீக அஸ்திரத்தைப் பெறுதற்கான மந்திரத்தை உச்சாடனம் பண்ணுகிறான். அஸ்திரம் அவன் கைக்கு வந்து சேருகிறது. வியாச முனிவர் இச்செய்கை கண்டு அதிர்ச்சி அடைகிறார்.



**அஸ்வ:** ஓம் பிரம்மாய நமஹ.... பாண்டவர்களை அழிப்பாயாக..!

**கிருஷ்:** (அர்ச்சுனனிடம்) பிரம்மாஸ்திரம்..!

அர்ச்சுனன் மந்திரம் உச்சாடனம் செய்து தெய்வீக அஸ்திரத்தைப் பெற்று அஸ்வத்தாமன் மீது ஏவுகிறான். வியாசர் எழுந்து இருவருடைய அஸ்திரங்களையும் தன் கைகளால் பிடித்துக்கொள்கிறார்.

**வியாச:** அர்ச்சுனா....! அஸ்வத்தாமா...! இந்த ஆயுதங்கள் அண்டசராசரம் அனைத்தையுமே அழித்துவிடும் என்பதை அறியமாட்டீர்களா? இவற்றை சாமானியமாகப் பயன் படுத்தலாகாதென குரு துரோணாச்சாரியார் உங்களுக்குப் போதிக்கவில்லையா? கிருஷ்ணா! அர்ச்சுனனை ஏன் தடுக்கவில்லை? இவற்றை இருவரும் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்!

**கிருஷ்:** குருதேவரே! முதலில் அஸ்வத்தாமன் பிரம்மாஸ்திரத்தை ஏவினான்-அதனை முறியடிக்கவே அர்ச்சுனன் பிரம்மாஸ்திரத்தைப் பெற்றான்!

**வியாச:** இருவரும் ஆயுதங்களைத் திரும்பப் பெறுங்கள்!

**அர்ச்:** அப்படியே செய்கிறேன் மாமுனிவரே!

**அஸ்வ:** மாமுனிவரே! இதனை திரும்பப் பெறும் முறை எனக்குத் தெரியாது.

**வியாச:** முட்டாளே! திரும்பப் பெறும் முறை தெரியாத நீ இதனைப் பிரயோகிக்க ஏன் துணிந்தாய்? இதன் சக்தியை உணர்வாயா? சர்வநாசத்தை அல்லவா இது ஏற்படுத்தும்? பிரம்மதேவர் மற்றுமொரு அண்டசராசரத்தை அல்லவா உருவாக்க வேண்டியிருக்கும்! அஸ்வத்தாமா-இதனை உன் மீதே திருப்பிவிடு....! பாண்டவர்களை அழித்துவிட்டால் புதிய தார்மீக சமுதாயத்தை உருவாக்கிவிட முடியும் என்று கருதினாயா? ஆகவே, பிரம்மாஸ்திரத்தை உன் பக்கமே திருப்பிக்கொள்!

**அஸ்வ:** மாமுனிவரே! இவ்வாயுதத்தை திசை திருப்பமுடியும்! இருப்பினும் அது பாண்டவரை நோக்கியே செல்லும். ஆனால் அவர்களைக் கொல்லாமல் அவர்களுடைய வாரிசினைக் கொன்று விடும்!

இதனைக்கேள்வியுற்ற கிருஷ்ணர் கோபமடைகிறார். அஸ்திரம் வியாசரின் கையைவிட்டு திசை திரும்புகிறது.

***

அபிமன்யுவின் மனைவி உத்தரை-கர்ப்பிணி-படுத்திருக்கிறாள். திரௌபதியும் சுதேசினையும் அருகில் இருக்கின்றனர். அஸ்வத்தாமன் ஏவிய அஸ்திரம் உத்தரையின் வயிற்றில் பாய்கிறது. அவள் வலியால் துடிக்கிறாள்.

**சுதேசி:** என்ன மகளே....? என்ன நடந்தது..?

**திரௌ:** என்ன மகளே?

**உத்தரை:** அம்மா....! அம்மா....!

**திரௌ:** யாரங்கே...! அரச வைத்தியரை உடனே அழைத்துவா...! அழாதேம்மா..... தாங்கிக்கொள்!

—காட்சி மாற்றம்—

வியாசரின் ஆசிரமம்- கிருஷ்ணர் அஸ்வத்தாமனை அணுகி.....

**கிருஷ்:** அஸ்வத்தாமா! நீ மிக மிக மோசமானவன்! மிகக் கொடியவன்; துப்புக்கெட்ட-அலங்கோலமான பதர்! பவித்திரமான பிரம்மாஸ்திரத்தைப் பயன்டுத்தி அபிமன்யுவின் வாரிசைக் கொன்றுவிடலாம் என்று கருதிவிட்டாயா? அக்குழந்தைக்கு உயிரளிக்க எவருமே இல்லை என்றா கருதினாய்? இந்த வாசுதேவ கிருஷ்ணனால் அந்தக் குழந்தைக்கு உயிர் கொடுக்க முடியும்! உன்னைப் பொறுத்தவரை உனது வாழ்வு மிக அலங்கோலமாகப் போகிறது. உன்னுடைய தீச் செயல்களினால் நீ விபரீதமான வாழ்க்கையையே வாழப்போகிறாய்! கேவலமாக நீ அழுந்தப் போகிறாய்! உன் மீது எவரும் அனுதாபம் காட்டமாட்டார்கள்! உன்னுடைய அருவருப்பான வாழ்க்கைக்காக எவரும் உன்னை அணுகமாட்டார்கள்; அடுக்கவும் மாட்டார்கள்! உன்னுடைய நெற்றியிலே என்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும் இரத்தினத்துக்குப் பதிலாக சீழ்வடியும் சிரங்குதான் உண்டாகும்! அதனால் உண்டாகும் உபாதை உன்னைத் தொடர்ந்து வருத்தப்போகிறது. இவனுடைய நெற்றியிலிருக்கும் இந்த இரத்தினத்தைப் பிடுங்கி எடுங்கள்! இது உனக்குரியதல்ல! மனிதவர்க்கத்துக்குப் பொதுவானது..!

**அஸ்வ:** (வருந்தியவனாக) பொறுங்கள்! வாசுதேவனே பொறுங்கள்! இந்த இரத்தினத்தை தாங்களே வைத்திருங்கள்!

கத்தியால் தனது நெற்றியிலிருந்த இரத்தினத்தைப் பிடுங்கி எடுத்து கிருஷ்ணரிடம் தருகிறான!

**அஸவ:** இது தங்களிடமே இருக்கட்டும்! ஆனால் எனக்கு அளித்த சாபத்தை நீக்கிவிடுங்கள்!

**கிருஷ்:** அஸ்வத்தாமா! இது நானளித்த சாபமல்ல; நீ செய்த கொடுமைகளுக்காக நீ செய்ய வேண்டிய பிராயச்சித்தம்! உனது பாவங்களுக்கான பரிகாரம்! சமுதாயத்துக்கு நீ இழைத்துள்ள கொடுமைகளுக்காக நீ அழுந்த வேண்டியவன். இதிலிருந்து எவராலும் உன்னை மீட்க முடியாது!

**அஸ்வ:** தயவு செய்து கருணை காட்டுங்கள்!

**கிருஷ்:** பெரியண்ணா! இந்த இரத்தினக்கல்லை நீங்கள் வைத்திருங்கள்! நாம் உடனடியாக உத்தரை இருக்குமிடம் செல்ல வேண்டும்!

யுதிஷ்டிரர் இரத்தினக்கல்லைப் பெற்றுக் கொண்டதும் அஸ்வத்தாமனை விட்டுவிட்டு அனைவரும் வெளியேறுகின்றனர்.

—காட்சி மாற்றம்—

உத்தரையின் கூடாரம்-வேதனையால் அவள் துடிக்கிறாள்.

**வைத்தியர்:** மகாராணி! குழந்தை கர்ப்பப் பையிலேயே இறந்துவிட்டது!

**சுதேசி:** ஐயையோ...... அவ்வாறிருக்கலாகாது...!

**வைத்தி:** கர்ப்பத்தில் இறந்த குழந்தையை உடனே வெளியே எடுக்காவிட்டால் தாய்க்கும் ஆபத்தாக முடியலாம்!

***

பாண்டவர்களுடன் திரௌபதியும் உத்தரையின் படுக்கை அருகே நிற்கின்றனர். இறந்த குழந்தை அருகே கிடத்தப்பட்டிருக்கிறது.

**உத்த:** மாமா! எனக்கிருந்த-ஒரே ஒரு நம்பிக்கையையும் இழந்துவிட்டேனே!

**கிருஷ்:** இல்லை மகளே! அழாதே! நம்பிக்கைகள் வீண்போவதில்லை. நம்பிக்கை அற்றுப்போய்விட்டதாகத் தோன்றினாலும் உண்மையில் அவ்வாறு நடப்பதில்லை!

கிருஷ்ணர் குழந்தை அருகில் அமர்ந்த வண்ணம் அதன் நெற்றியில் தன் கையை வைக்கிறார்-கண்களையும் மூடிக் கொள்கிறார்.

**கிருஷ்:** பரிக்ஷித்! உன் கண்களைத் திறந்துபார்!

குழந்தை கண்களைத் திறந்து அசைகிறது. உத்தரை மகிழ்ச்சி அடைகிறாள். பாண்டவர்களும் திரௌபதியும் குதூகலம் அடைகின்றனர். உத்தரை குழந்தையை எடுத்து அணைத்துக்கொள்கிறாள்.

**பின்னணிப் பாடல்:**

வாழையடி வாழையென வம்சாவளி வளர
வந்துதித்த குருத்தினையே வதைக்க நினைத்தனரே!
வேதநெறி போற்றுமந்த விமலனவனிருக்கையிலே
வினை விளைக்க வல்லவனும் வினையாலழிவானே!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்

ARUL JUWELLERS

4
3
6
3
3
1

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# இதுதான்(டா) கொரில்லா



ரொம்ப முதியவர் போல தெரிகிறாரோ? ஆனால், எடை 400 இறாத்தல். உயரம் 6 அடி வரை வளரும்.

கொரில்லா ரக குரங்குகள்தான் இவர். உலகில் கொரில்லாக்கள் குறைந்து வருவதையிட்டு குரங்கியலாளர்கள் பலத்த கவலை தெரிவித்து வருகிறார்கள்.

கொரில்லாக்களில் ஆண்கள்தான் எடை அதிகமாக இருக்கும். 300 முதல் 400 இறாத்தல் வரை. பெண்கள் ஆக. 175 இறாத்தல் முதல் 200 வரைதான்.

இனப்பெருக்க விடயத்தில் கடும் கட்டுப்பாடு. ஒரு குட்டி மட்டும்தான். பழுப்பு சிவப்பு வளர்க்கும் பயிர்வகைகள், இலை, தழைகள் என்றால் விரும்பி சாப்பிடுகின்றன. மத்திய ஆபிரிக்காவில் அதிகம் காணமுடிகிறது.


அம்மன் ஜுவல்

AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

3
3
2
0
3
3


'ஏப்' எனப்படும் மனிதக் குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதாக சொல்வார்கள். அந்த 'ஏப்' ரக மனிதக் குரங்கிலிருந்து தோன்றியதுதான் சிம்பன்சி குரங்கும். ஆக, நமக்கெல்லாம் சிம்பன்சி குடும்ப உறவு மாதிரி. இதன் எடை 100 முதல் 175 இறாத்தல் வரை. கொரில்லாவைவிட குள்ளம். 4 1/2 அடி வரைதான் வளரும். ஒரே ஒரு குட்டிதான் ஈன்றெடுக்கும். சிம்பன்சிக்கு அசைவ சாப்பாட்டிலும் ஆசை உண்டு. கிடைத்தால் புசிக்கும். பழங்கள், விதைகள், பூச்சிகள் என்றால் மூக்குமுட்ட ஒரு பிடிபிடிக்கும். இதுவும் மத்திய ஆபிரிக்காவில்தான் இருக்கிறது. காணாமல் போகும் அபாயம் இருப்பதாக சொல்லப்படுகிறது. குட்டிகளை யாவது அதிகம் போடக் கூடாதா?

# மைடியர் குட்டான்

மனிதரில் மட்டும்தான் இனவேறுபாடா? மனிதக் குரங்குகளிலும் இனவேறுபாடு இருக்கவே இருக்கிறது. இனப்பிரச்சனையும் யுத்தமும் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். இவ்வாரம் குரங்கு ஸ்பெசல். (முன்னவர்களுக்கு ஒரு மரியாதை)

# காணாமல் போகலாம்



# தருவது வியோட



'ஒரங்குட்டான்' ரக குரங்கு இது. கொரில்லாவோடும் சிம்பன்சியோடும் நிறுத்தி வைத்துப் பார்த்தால் மகா குள்ளமாக இருக்கும். 31 முதல் 38 அங்குலம் வரை வளரும். ஏனைய குரங்குகளை விட ஒரங்குட்டான் குரங்கில் உள்ள தனித்துவம் யாதெனில், இதன் கால்களைவிட கைகள் நீளமாக இருக்கும். தூரகிழக்கு நாடுகளில்தான் அதிகமாகக் காணப்படுகிறது. எடையும் குறைவு. சிரமமில்லாமல் தூக்கலாம். 88 முதல் 200 இறாத்தல் வரை. இனப்பெருக்கத்தில் இதுவும் ரொம்பக் கட்டுப்பாடானது. ஒரு தடவையில் ஒரு குட்டி மட்டும்தான்.

# கவனிக்கப்படுவதால் சங்கடம்

டெனிஸ் வீரர்களில் முதலாம் இடத்தில் இருப்பவர் அகாசிதான். சமீபத்தில் பீட் சாம்ராசிடம் தோல்வி கண்டபோதும் உற்சாகம் குறையாமல் இருக்கிறார் அகாசி. கோடி கோடியாக பணம் சம்பாதித்துள்ள அகாசிக்கு கிடைத்துள்ள பெரிய சொத்து, அவரது காதலி புறூக் சீல்ட்ஸ். அகாசிக்கும் பல கோடி ரசிகைகள். அகாசியின் இதயத்தில் இடம் பிடித்த ரசிகை புறூக் சீல்ட்ஸ் மட்டும்தான். புறூக் சீல்ட்ஸும் ஒரு பிரபல நடிகை. ஏராளம் ரசிகர்கள். ஆனாலும் அவரது இதயத்தை திருடிய ஒரே ஒரு ரசிகர் அகாசி மட்டும்தான். (படத்தைப் பார்க்கும் போதே தெரிகிறதல்லவா?)


இன்று உலகில் உள்ள நட்சத்திர காதலர்கள் வரிசையில் அகாசி-புறூக் சீல்ட்ஸ் இருவரும் இடம் பிடித்து விட்டனர். சமீபத்தில் விபத்து ஒன்றில் புறூக் சீல்ட்ஸ் காலில் அடிபட்டுப் போக துடித்துப் போனாராம் அகாசி. "உன் காலில் அடிபட்டால் என் நெஞ்சில் இடி விழுகிறதடி" என்று பாடி இருப்பாரோ?!

# நட்சத்திர காதலர்கள்



ஆட்டமா, பாட்டமா, புகழ் தேரோட்டமா அனைத்திலும் கொடி கட்டிப் பறப்பவர் மைக்கேல் ஜாக்சன். அதுதான் பிரபு தேவாவும் மைக்கேல் ஜாக்சனுடன் ஆட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்.

மைக்கேல் என்றால் உருகிப்போக உலகெங்கும் பல்லாயிரம் பல்லாயிரம் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால் மைக்கேல் மயங்கி, மையலாகி மாட்டிக் பிடித்தது லிசாவை ↓




வாரமலர் தினமுரசு


இருவருக்கும் ஒரு சங்கடம். மைக்கேல் மீது பொறாமை கொண்டவர்கள், லிசா மைக்கேலை வெறுத்து விட்டார் என்று கதை கதையாக கிளப்பி விடுகிறார்களாம். லிசாதான் கோபத்தில் இருக்கிறார். "மைக்கேலும் நானும் தினமும் ஒரே கட்டிலில்தான் தூங்குகிறோம். ஏனைய தம்பதிகள் போலவே நடந்து கொள்கிறோம். மைக்கேல் கம்பீர ஆண்மகன்தான். போதுமா?" என்று ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்டுவிட்டு, பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் அழுது விட்டார் லிசா. மைக்கேலின் ஆட்டத்தைக் கவனியுங்கள். அந்தரங்கத்தில் ஏன் மூக்கை நுழைக்கிறீர்கள்? என்கிறார்கள் அவரது ரசிகர்கள்.